# தமிழரசு

1-4-1988 ரூ. 1





தீரர் சத்தியமூர்த்தி

# தமிழ்நாடு வளம் பெற புதிய திட்டங்கள்



**மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு என்.டி. திவாரி அவர்கள், 17-3-88 அன்று மக்களவையில் அளித்த 1988-89-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை.**

மதிப்பிற்குரிய உறுப்பினர்களே,

தமிழ்நாடு அரசின் 1987-88ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டையும், 1988-89ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் அவை முன் வைக்க விழைகிறேன்.

**'பாரத ரத்னா' எம்.ஜி.இராமச்சந்திரன்**

'எம்.ஜி.ஆர்' என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டு வந்த, மறைந்த முதலமைச்சர், 'பாரத ரத்னா' திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு என்னுடைய புகழ் அஞ்சலியை முதற்கண் செலுத்துகிறேன்.

திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழக முதல்வராகப் பதவி வகித்திருக்கிறார். எளிமையான குடும்பத்தில் பிறந்த இவர், தனக்கு இருந்த தலைமைப் பண்பு, ஏழை, எளியமக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஊனமுற்றோர் ஆகியோர்பால் அவர் கொண்டிருந்த இரக்க உணர்வு, தன்னுடைய இலட்சியங்களை நிறைவேற்றுவதில் அவருக்கு இருந்த பொறுப்புணர்வு ஆகிய நற்பண்புகளால் தமிழகத்தின் முதலமைச்சர் என்ற நிலைக்கு உயர முடிந்தது. நாட்டின் ஒருமைப்பாட்டிலும் ஒற்றுமையிலும் அவர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். சாதி மத பேதமற்ற ஒருங்கிணைந்த நவபாரதத்தை உருவாக்க அயராது பாடுபட்டார்.

**சமூக நலத்திட்டங்கள் தொடரும்**

நம்மை விட்டுப் பிரிந்த உன்னதத் தலைவர், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு நாம் பாடுபட வேண்டுமென்று விரும்பிய வண்ணம் அவர் நிறைவேற்றி வந்த சமூக நலத் திட்டங்களையும், மதிய சத்துணவுத் திட்டத்தையும், தற்போதைய மாநில அரசு மேலும் முனைப்புடன் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்த பின்னர், திட்டங்களையும் திட்டப் பணிகளையும் நிறைவேற்றுவதிலும், மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதிலும், அரசு மேலும் திறம்படச் செயலாற்றும் வகையில் நிருவாகத்தை முடுக்கிவிடவும் அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நிருவாகத்தினருக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு அதனை மேற்பார்வையிடுவதற்கான நடைமுறைகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன.

**பொது விநியோக முறை செம்மைப்படுத்தப்படும்**

1987-88ஆம் ஆண்டு திட்டத்தை நிறைவேற்ற தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, நுகர்வோர் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உரிய அளவில், உரிய காலத்தில் பெறவேண்டி பொது விநியோக முறை செம்மைப்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் நிருவாகத்தை முடுக்கிவிட மேற்கொண்ட முயற்சியின் பலனை வரும் மாதங்களில் கண்கூடாகக் காணலாம்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2019
பிரபவ - பங்குனி 19
மலர்: 18 இதழ்: 18 & 19
1-4-1988



**விவசாயிகளுக்கு மின்கட்டணப் பாக்கி ஒத்திவைப்பு**

கடுமையான வறட்சி, விவசாயிகளைப் பெரிதும் பாதித்துள்ளது. வறட்சியின் கொடுமையால் பாதிக்கப் பட்ட அந்த விவசாயிகளின் நியாயமான குறைகளைப் பரிவுடன் கவனித்து, அவற்றைக் களைவதில் கடந்த சில வாரங்களில் மாநில அரசு அதிகக் கவனம் செலுத்தி உள்ளது. விவசாயிகள் செலுத்தவேண்டிய மின் கட்டணப் பாக்கிகளை ஆறு மாதங்களுக்கு அரசு ஒத்தி வைத்துள்ளது. மேலும், வேளாண்மை விசையேற்றங் களுக்கு மின் கட்டண வகையில் ஒரு பகுதியை மட்டும் செலுத்தியிருந்தாலும் கூட, அந்த விசையேற்றங்களுக்கு மீண்டும் மின் இணைப்புக் கொடுக்கும்படி அரசு உத் தரவிட்டுள்ளது. வரிகளையும் கூட் டுறவுக் கடன்களையும் வசூலிப்பதில் சொத்துக்கள் எவையும் ஜப்தி செய்யப்படமாட்டா.

**ஆதிதிராவிடருக்கும் பழங்குடியினருக்கும் நலம் பயக்கும் திட்டங்கள்**

ஏற்கெனவேயுள்ள நலப்பணிகளும், வளர்ச்சிப்பணி களும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இது தவிர, முக்கியமான முடிவுகள் சிலவற்றை அண்மை யில் எடுத்துள்ளோம். முக்கியக் கவனம் செலுத்தவேண் டிய சில துறைகளைத் தெரிந்தெடுத்துள்ளோம். இத் துறைகள் சிலவற்றில் புதிய திட்டங்கள் கொண்டு வரப் படுகின்றன. அத்துடன் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, நம்முடைய பாரதப் பிரதமர் கேட்டுக் கொண்டதன் பேரில், ஆதிதிராவிடருக்கும், பழங்குடி யினருக்கும் நேரடியாக நலம் பயக்கும் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட் டத்தின் கீழ் அவர்களின் நலப் பணிகளுக்கு 1988-89ஆம் ஆண்டில் சுமார் 150 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

**காமராஜர் புதிய ஆதிதிராவிடர் வீட்டுவசதித் திட்டம்**

இது தவிர, ஆதிதிராவிடர்களுக்குக் குடிநீர் வழங் கவும், அவர்களுடைய குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் போடவும், தீப்பிடிக்காத வீடுகள் கட்டவும் ''காமராஜர் புதிய ஆதிதிராவிடர் வீட்டு வசதித்திட் டம்'' ஒன்று மொத்தம் 27 கோடி ரூபாய் செலவில் கொண்டுவரப்படுகிறது.

**கிராமப்புற மகளிர் நலன்**

கிராமப்புறங்களில் உள்ள மகளிர் பன்னெடுங் காலமாகப் பல இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். அவர்களின் நலனில் தனிக்கவனம் செலுத்தப்படும். நீண்ட காலமாக நிலுவைப்பட்டியலில் காத்திருக்கும் ஆதரவற்ற மகளிர், விதவைகள் 19,000 பேருக்கு முதி யோர் உதவித் தொகையும், சேலைகளும் வழங்கப்படும். சுமார் 25,000 பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கென கூடுதலாக 3 கோடி ரூபாய் ஒதுக் கப்படும்.

கிராமப்புற இளம்பெண்களின் நலனை உத்தே சித்து, பயிற்சி மையங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட் டுள்ளது. இம்மையங்களில், மணமாகாத இளம் பெண் களுக்கும், அண்மையில் மணமான பெண்களுக்கும் சுகா தாரம், துப்புரவு, சத்துணவு ஆகியவை தொடர்பான அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படும். தவிரவும், உள் ளூர்க் கைத்தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து, திறமையை மேலும் வளர்த்துக்கொள்ள வழிவகை செய்யப்படும். அவர்கள் சுயமாக ஆதாயம் தரும் தொழில்களில் ஈடுபடுவதற்குத் தேவையான பயிற்சி இந்த மையங்களில் அளிக்கப்படும். குறிப்பாக திருமணமாகாத பெண்கள் தங்களது திருமணத்தைத் தள்ளிப்போடவும், அண்மையில் மணமான பெண்கள் குழந்தைப் பிறப்பைத் தள்ளிப்போடவும் ஆலோசனை யும் அறிவுரையும் அளிக்கப்படும்.

**பயிற்சி பெறும் மகளிருக்கு ஊக்கத்தொகை**

இந்த மையங்களில் பயிற்சி பெறும் மகளிருக்கு ஊக்கமளிக்க, மாநில அரசு, அவர்களுக்காகக் குறிப் பிட்டதொரு தொகையை ஊக்கத் தொகையாக வழங் கும். இரண்டாண்டுக் காலப் பயிற்சிக்குப் பின்னர் இத் தொகை மொத்தமாக அவர்களுக்கு வழங்கப்படும். மேலும் ஊனமுற்றவர்களின் நலனுக்கான சிறப்புத் திட் டங்களுக்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

**ஜவகர்லால் நேரு அறிவியல் ஆற்றல் நூல் திட்டம்**

நாட்டின் முன்னேற்றத்தில் இளைஞர்களுக்குள்ள பங்கு பணிகளை இவ்வரசு உணர்ந்துள்ளது. இம் மாநில இளைஞர்களின் நலப்பணிகளுக்காகப் போதிய நிதி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1988ஆம் ஆண்டு ஜுன் திங்களில் தொடங்கும் அடுத்த கல்வி ஆண்டி லிருந்து, கல்லூரி மாணவர்களுக்கென 'ஜவகர் லால் நேரு அறிவியல் ஆற்றல் நூல் திட்டம்' என்னும் ஒரு



திட்டம் அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், 1988-89ஆம் ஆண்டில் அறிவியல் பட்டப் படிப்புகளில் சேர்த்துக்கொள்ளப்படும், சுமார் 3,000 மாணவர்களுக்கு அறிவியல் பாட நூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

**கிராமப்புறங்களில் கல்லூரி மாணவ, மாணவியருக்காக முகாம்கள்**

மேலும், கல்லூரி மாணவ, மாணவியருக்காகக் கிராமப்புறங்களில், பல முகாம்களை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் மாணவர்கள், கிராமப்புற மக்களோடு கலந்து பழகி அவர்களுடைய பிரச்சினைகளையும், எண்ணங்களையும் புரிந்துகொண்டு, சுகாதாரம், துப்புரவு, உள்ளாட்சி நிருவாகம், தேசிய ஒருமைப்பாடு முதலானவற்றைப் பற்றி அவர்களுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்குவர். இந்த முகாம்களில் மாணவர்கள் தாங்களும் உடலுழைப்பு நல்கி கிராமப் புறச் சொத்துக்களை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுவர். இத்தகைய முகாம்களில் மாணவர்கள் கலந்துகொண்டு ஆற்றும் பணி அவர்களுடைய கல்வித் தகுதியோடு சேர்த்து மதிக்கப்படும்.

**தொழில் வளர்ச்சியும் வேலைவாய்ப்புகளும்**

இம்மாநிலத்தில், பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில்கள் சந்திக்க வேண்டியுள்ள பலதரப்பட்ட பிரச்சினைகளை இவ்வரசு அறிந்துள்ளது. இப்பிரச்சினைகளை முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து, இயன்றளவு விரைவில் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்களுக்குப் புத்துயிர் அளித்து அவற்றை மேம்படுத்த தனிக் கவனம் செலுத்தப்படும். குறிப்பாக, நலிந்த சிறு தொழிற் பிரிவுகள் குறித்து உடனுக்குடன் கவனம் செலுத்தி, அவற்றுக்குத் தேவையான ஒருங்கிணைந்த உதவிகள் அனைத்தும் அளிக்கப்படும். புதிய தொழில்களில் முதலீடு செய்வதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலைகளை உருவாக்கவும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தி, வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**கைத்தறி நெசவாளர்களுக்காக நல்வாழ்வுத் திட்டங்கள்**

தமிழ்நாடு, கைத்தறித் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஒரு மாநிலமாகும். கைத்தறி நெசவாளர்களுக்காக ஏற்கெனவே பல நல்வாழ்வுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. நூற்பாலைகளுக்கு மாநில





மின் கட்டமைப்பிலிருந்து கூடுதலாக 7 மில்லியன் யூனிட் மின்சாரம் ஒதுக்கி அண்மையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களோடு, தற்போது கூடுதலாக மின்சாரம் ஒதுக்கியதன் காரணமாக உடனடி பலன் ஏற்பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நூலின் விலை குறைந்துள்ளது. விஸ்கோஸ் நூல்களும் குறைந்த விலையில் வழங்கப்படும். அடுத்த ஆண்டில், கைத்தறி நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தைப் புத்துயிரூட்டி, நெசவாளர்களுக்குப் புதிதாக 2,000 வீடுகள் கட்டித்தர உத்தேசித்துள்ளோம்.

உள்ளூர் மூலதனப் பொருட்கள் உற்பத்திக்கும், துணை மற்றும் மின்னணுவியல் தொழில்களுக்கும் ஊக்கமளிக்கும் வகையில், அவற்றுக்கான விற்பனை வரி வீதங்களைச் சீரமைக்கவும் உத்தேசித்துள்ளோம்.

**ஓதுவாருக்கு ஓய்வூதியம்**

அரசு, தமிழ்மொழிக்கும்-பண்பாட்டிற்கும் உயர் முன்னுரிமை அளிக்க விழைகிறது. தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் திருத்திய பதிப்பினைத் தயாரிப்பதற்கான பணியினை விரைவுபடுத்த உத்தேசித்துள்ளோம். கோவில்களில் சமயப்பாசுரங்களைப் பாடும் ஓதுவார்கள் ஏழ்மைநிலை காரணமாகத் தங்களது பாரம்பரியத் தொழிலைத் தொடர இயலாமல் துன்புறுகின்றனர். அவர்களுக்கு உதவ வேண்டி 60 வயதிற்கு மேற்பட்ட நூறு ஓதுவார்களுக்கு மாதந்தோறும் 250 ரூபாய் ஓய்வூதியம் வழங்க உத்தேசித்துள்ளோம்.

**தமிழ் எழுத்தாளர்களுக்கு உதவி**

ஒவ்வோராண்டும் குறைந்தது 50 புதிய புத்தகங்கள்-புதினங்கள், நாடகங்கள், சிறுகதைகள் அல்லது கவிதைகளின் தொகுப்பினை வெளியிடும் வகையில், தமிழ் எழுத்தாளர்களுக்கு அவர்கள் புத்தகங்களை வெளியிடுவதற்கு உதவி செய்யும் திட்டத்தினை வலுப்படுத்தி, விரிவுபடுத்த உத்தேசித்துள்ளோம்.

**பாரதியாரின் கனவு நனவாகிறது**

பாரதியாரின் -''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்'' என்ற கனவினை நனவாக்கும் வகையில், தமிழ் இலக்கியப் படைப்புகளை ஏனைய மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியை மேற்கொள்வோருக்கு நிதி உதவி அளிக்கும் புதிய திட்டத்தையும் கொண்டுவரக் கருதியுள்ளோம்.

**தமிழ் அன்னைக்குச் சிலை**

கம்பன் மணிமண்டபம் தொடர்பான பணிகளை நிறைவேற்றவும், தமிழ் அன்னைக்குக் காரைக்குடியில்

சிலை அமைக்கும் பணியையும் முடித்திட நிதி உதவி
செய்யவும் உத்தேசித்துள்ளோம்.

### ஒய்வூதியம் உயர்வு

குறைந்த அளவு ஒய்வூதியம் பெறுவோர் பலர்
மேம்பாடடையும் வகையில், ஒய்வூதியம் பெறும் அனை
வரும் அனைத்துப் படிகளும் சேர்த்து மாதம் ஒன்றுக்குக்
குறைந்தது 350 ரூபாய் பெறும் வ்கையில் ஒய்வூதியத்தை
உயர்த்த எண்ணியுள்ளோம்.



### குடிநீருக்குக் கூடுதல் ஒதுக்கீடு

மேற்குறிப்பிட்ட புதிய திட்டங்கள் தவிர, குடிநீர்
வழங்கல், கல்வி, சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ்
கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வரவு-செலவுத் திட்
டம் வகை செய்கிறது. ஊரகப் பகுதிகள், நகராட்சிகள்,
சென்னை மாநகரிலுள்ள பொதுமக்களுக்குக் குறைந்த
அளவு குடிநீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில்
குடிநீர் வழங்கலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்
படும்.

### புதிய தொடக்கச் சுகாதார நிலையங்கள்

தொழிற்பயிற்சி நிலையங்களிலும், அறிவியற் கல்
லூரிகளிலும், கணினி அறிவியல் பாடங்களையும்,
மூன்று பொறியியற் கல்லூரிகளில் கணினி அறிவியலில்
உயர்தர தொழில்நுட்ப வகுப்புகளையும் கொண்டுவர
உத்தேசித்துள்ளோம். வரும் ஆண்டில் 110 புதிய
தொடக்கச் சுகாதார நிலையங்கள் திறக்கப்படும்.
மேலும் மருத்துவமனைக் கட்டடங்களுக்கான பல்வேறு
திட்டங்களுக்கும், மருத்துவமனை வசதிகளை மேம்
படுத்தவும் வரவு செலவுத் திட்டத்தில் வழிவகை
செய்யப்பட்டுள்ளது.

### 1987-88ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு

நான் தற்போது மதிப்பீடுகள் பற்றி விரிவாகக்
குறிப்பிட விழைகிறேன். திருத்த மதிப்பீட்டில்,மொத்த
வருவாய் வரவாக ரூ. 2945 கோடியும், வருவாய்க் கணக்
கில் செலவாக ரூ. 3250 கோடியும் காட்டப்பட்டுள்ளது.
நிகரப்பற்றாக்குறை ரூ. 305 கோடியாகும். மூலதன
வரவான 882 கோடி ரூபாயையும், மூலதனச்
செலவான 894 கோடி ரூபாயையும் கணக்கில் எடுத்துக்
கொண்டு, பொதுக்கணக்கில் நிகர வரவு-செலவுகளைத்
தொகுத்துப் பார்ப்போமேயானால், நடப்பு ஆண்டில்
மொத்தப் பற்றாக்குறை ரூ. 216 கோடியாக இருக்கு
மென்று எதிர்பார்க்கப்படுகிறது. ரொக்க இருப்புத்
தொகையைக் கணக்கில் கொண்டால், பற்றாக்குறை
யில் ரூ. 13 கோடி குறையும். எஞ்சியுள்ள பற்றாக்
குறை ரூ. 203 கோடி அடுத்த ஆண்டுக்கணக்கில் சேரும்.

### 1988-89 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

1988-89ஆம் ஆண்டில், வருவாய்க்கணக்கில் வரவு
க்ள் ரூ. 3188 கோடி எனவும், வருவாய்க் கணக்கில்
செலவுகள் ரூ. 3405 கோடி எனவும், வருவாய்க் கணக்
கில் பற்றாக்குறை ரூ. 217 கோடி எனவும் மதிப்பிடப்
படுகிறது. மூலதனக் கணக்கில் வரவு ரூ. 710 கோடி
எனவும், செலவு ரூ. 700 கோடி எனவும் மதிப்பிடப்படு
கிறது. நடப்பு ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இறுதிப்
பற்றாக்குறையையும், பொதுக்கணக்கின் கீழ் வரும்
வரவு-செலவுகளையும், கணக்கில் எடுத்துக் கொண்டால்
1988-89ஆம் ஆண்டிற்கான மொத்தப் பற்றாக்குறை
ரூ. 124 கோடி எனவும், 1988-89ஆம் ஆண்டின் இறுதி
யில் எதிர்பார்க்கப்படும், சேர்ந்து வரும், பற்றாக்குறை
ரூ. 327 கோடி எனவும் மதிப்பிடப்படுகிறது. எனினும்
திறம்பட வரித் தொகைகளை வசூலிப்பதன் மூலமும்,
வரி வசூலில் காணப்படும் இயல்பான முன்னேற்றம்
காரணமாகவும், வளர்ச்சித் திட்டம் அல்லாதவற்றிற்
கான செலவினைக் குறைப்பதன் மூலமும், இப்பற்றாக்
குறையை ஓரளவிற்குக் குறைக்க இயலும் என்று எதிர்
பார்க்கிறோம்.

### திட்ட ஒதுக்கீடு

நடப்பாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ. 1250
கோடியை விட, 1988-89-ஆம் ஆண்டுத் திட்ட நிதி
ஒதுக்கீடு மிகையான அளவில் ரூ. 1457 கோடியாக
நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்
டிலும் 16.5 சதவீதம் கூடுதலாகும். அடுத்த ஆண்டுத்
திட்டத்தில், மின் சக்தித்துறைக்கு ரூ. 502 கோடியும்,
வேளாண்மை, அதனைச் சார்ந்த பணிகளுக்கு ரூ.136
கோடியும், குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, நகர்ப்புற
வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 247 கோடியும், சமூக
நலன், சத்துணவுத் திட்டங்களுக்கு ரூ. 118 கோடியும்,
போக்குவரத்து, தகவல் தொடர்பிற்கு ரூ. 84 கோடி
யும், தொழில், கனிம வளத்திற்கு ரூ. 69 கோடியும்
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### உடனடிச் செலவுக்கான மானிய உதவி

1988-89-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை அவை
முன் வைக்கப்பட்டுள்ளது; இந்த அறிக்கை தொடர்
பான மானியக் கோரிக்கைகளும் ஏனைய வரவு செலவுத்
திட்டத் தாள்களுடன் சேர்த்து மதிப்பிற்குரிய உறுப்
பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. எனினும், நான்
இந்த நிலையில், 1988-89ஆம் நிதி ஆண்டின் முதல்
ஆறு மாதக் காலத்திற்கு 'உடனடிச் செலவுக்கு அனு
மதி வழங்கும் வேண்டுகிறேன்.

# 1988-89 தமிழ்நாடு அரசு வரவு செலவுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

* 1988-89-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ. 1457 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

* மின்துறைக்கு ஒதுக்கீடு ரூ. 408 கோடியிலிருந்து ரூ. 502 கோடியாக உயரும்.

* சாலைகள் பாலங்களுக்கு, 1987-88-இல் ஒதுக்கீடு ரூ. 45 கோடியாக இருந்தது. 1988-89-இல் ரூ. 56 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

* கீழ்க்கண்ட சில முக்கிய துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு நடப்பாண்டைவிட பின்வரும் வகையில் அதிகரிக்கப்படுகிறது:

1. **விவசாயம்** ரூ. 141 கோடியிலிருந்து ரூ. 151 கோடியாக உயர்த்தப்படுகிறது.

2. **குடிநீர் வழங்கல்** ரூ. 148 கோடியிலிருந்து ரூ. 160 கோடியாக உயர்த்தப்படுகிறது.

3. **சமூகநலம்** ரூ. 92 கோடியிலிருந்து ரூ.97 கோடியாக உயரும்.

4. **கல்வி** ரூ. 597 கோடியிலிருந்து ரூ.690கோடியாக உயரும்.

[இந்த உயர்வுக்கு அரசு நிதி உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றுக்கு அவற்றின் பணிகளுக்காக அரசு நிதி உதவியை அதி கரித்ததே காரணம்]

5. **மருத்துவம் மற்றும் சுகாதாரம்**

ரூ. 228 கோடியிலிருந்து ரூ.258 கோடியாக உயரும்.

[இந்த உயர்வு, புதிய தொடக்கச் சுகாதாரநிலையங்கள் திறக்கப்படுவது, இ.எஸ்.ஐ. திட்டங்களுக்கு கூடுதல் ஒதுக்கீடு, தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம், மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றின் தேவைகள் ஆகியவற்றால் ஏற்பட்டதே]

6. **தொழில்** ரூ. 54 கோடியிலிருந்து ரூ.65 கோடியாக உயர்கிறது.



* பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும், கிராமப் புறங்களில் பணி புரியும் ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசக் காலணி வழங்க ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

* மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்க ரூ. 15.5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

* மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் வழங்க ரூ. 7.6 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

* முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 177 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

* சென்னைக் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு ரூ. 56 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒதுக்கீட்டில், சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் கொண்டு வருவதற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 30 கோடியும் அடங்கும்.

* புதியதாக 110 தொடக்கச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட வரவு செலவுத்திட்டம் வகை செய்கிறது.

* 1988-89-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சம் மாநிலத்தில் ஆதி திராவிடர் நலனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் ஆகும். அதன்படி, மாநிலத்தில் ஆதிதிராவிடர் நலனுக்காக ரூ. 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, மாநிலத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் போடவும், ஆதிதிராவிடர்களுக்குக் குடிநீர் வழங்கவும், தீப்பிடிக்காத வீடுகள் கட்டவும் ரூ. 27 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

* 1987-88, 1988-89 ஆகிய ஆண்டுகளில் முடிவான பற்றாக்குறை முறையே ரூபாய் 203.62 கோடி, ரூ. 327.36 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வளரும் தமிழகம்

## மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர்



நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து இடைக்காலத்தே நாம் மதிப்பீடு செய்ய முனையும் பொழுது நம்முடைய திட்ட இலக்குகள், அத்திட்ட இலக்குகளை எய்துவதில் நாம் அடைந்துள்ள முன்னேற்றம், இலக்குகளை எவ்வளவு சதவீதம் எய்தி இருக்கிறோம் என்பது குறித்த பகுப்பாய்வு ஆகியவை பற்றிய புள்ளிவிவரத் தகவல்கள் பெரும் அளவிற்கு நம்முடைய மதிப்பீடுகளில் இடம் பெறக்கூடும். முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட நான் விரும்புகின்றேன். இந்தப் பிரச்சினைகள் எல்லாம், மத்திய அரசு, திட்டக்குழு ஆகிய இரண்டின் உடனடிக் கவனத்திற்கும், பரிசீலனைக்கும் உரியவையாகும். ஒரு சில பிரச்சினைகளில் நம்முடைய அண்டை மாநிலங்களும் இதில் கவனம் செலுத்தினால்தான் இப்பிரச்சினைகளைத் தீர்க்கமுடியுமென்றும் நான் கருதுகிறேன். ஏனெனில், அவர்களுடைய ஒத்துழைப்புக் கிடைப்பதன் மூலமாக மட்டுமே இந்தப் பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும். நான் கேட்கும் ஒத்துழைப்பை, இந்திய நாடு முழுவதும் நன்மை பெறவேண்டும் என்பதற்காக புதிய 'தெற்கு-தெற்குக் கூட்டுறவு அமைப்பு' என்று ஒன்று உருவாக வேண்டுமென்று நாம் அதைக் குறிப்பிடலாம்.

நம்முடைய அவசரப்பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கு முன்பாக, பத்தாண்டுக் காலம் தேசிய வளர்ச்சிக் குழுவின் உறுப்பினராகவும் தமிழ்நாட்டின் மகத்தான தலைவராகவும் விளங்கிய எம். ஜி. ஆர். என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட - காலஞ்சென்ற திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுடைய அரிய பணிகளை நினைவுகூர்ந்து, பாராட்டக்கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிற்குத் தலைமையேற்றிருந்த காலத்தில் இம்மாநில நிருவாகம் செம்மையாக நடைபெற வழிவகுத்ததோடு மட்டுமல்லாமல்; மத்திய-மாநில அரசுகளுக்கிடையே இணக்கமான உறவுகள் நிலவவும் வழி வகுத்தார். அது மட்டுமல்ல; ஏழை எளிய மக்களின் இன்னலைப் போக்கி, அவர் தம்மாலியன்ற அனைத்துப் பணிகளையும் ஆற்றினார்.

இம்மாநிலத்தில் பெரும் பகுதி திட்டக்காலம் முழுதும் தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தும் முதல் மூன்றாண்டுகளில் பெரும்பாலும் எல்லாத் துறைகளிலுமே இலக்கையும் விஞ்சி இம்மாநிலம் சாதனை படைத்துள்ளது. நாம் வரி வருவாய் மூலம் கூடுதல் நிதியைத் திரட்டியுள்ளோம். வரி வருமான விகிதாச்சாரம்தான் நாட்டிலேயே மிக அதிகமானதாக உள்ளது. இவ்வாறு செய்வதன் மூலம் மிகைப் பற்றுகளுக்கு இடம் கொடாமல் ரிசர்வ் வங்கியின் கண்டனத்திலிருந்து தப்பியுள்ளோம். 5.3 சதவீதம் என்னும் வரையறுத்த இலக்கு வளர்ச்சியை எட்டியுள்ளோம். நலிந்த பிரிவினரின், குறிப்பாக, ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தையும் நிலையையும் உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டப்பணிகளில் தனி அக்கறை கொண்டு செயல்பட்டுள்ளோம். குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்ட பிறகு, கடந்த ஒரு மாத கால அளவில், வளர்ச்சித் திட்டப் பணிகளின் செயல்பாட்டு வேகத்தை அதிகரித்துள்ளோம். ஆதிதிராவிடர், பழங்குடியினரின் குடியிருப்புப் பகுதிகளில் புதிய இணைப்புச் சாலைகள் அமைக்கவும் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கவும் அவர்களுக்கென்று தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காகவும் காமராஜ் ஆதிதிராவிடர் புதிய வீட்டுவசதித் திட்டம் என்னும் வீட்டு வசதித் திட்டம் போன்று புதிய திட்டப்பணிகள் பலவற்றை நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.

கிராமப்புற இளம்பெண்கள் தம் திருமணத்தை ஒத்திப்போடுவதற்காக அவர்களுக்கு ஊக்க உதவியுடன் கூடிய பயிற்சி அளிக்கும் தனித் திட்டமும், கல்லூரி மாணவர்களுக்கான ஊரக முகாம்களும், கல்லூரியில் பயிலும் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு அறிவியல் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குவதற்காக 'ஜவகர்லால் அறிவியல் ஆற்றல் நூல் வழங்கப்படும் திட்டமும்' தற்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ள புதிய திட்டங்களில் சிலவாகும்.

எனினும், கடந்த ஒரு மாதமாக இம்மாநிலப் பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்ந்ததில், மாநிலத்தின் ஒட்டு மொத்தப் பொருளாதார நிலை பாதிக்கப்படக்கூடும் என்பதற்கான சில அறிகுறிகள் தென்பட்டது குறித்து என்னால் கவலைப்படாமல் இருக்க இயலவில்லை; இதுபற்றி மத்திய அரசும் திட்டக்குழுவும் உடனடிக் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இத்தருணத்தில் உரிய கவனம் செலுத்தவில்லையென்றால் விரைவில் பெருந்தீங்கு விளையும் என நான் கருதுகிறேன்.

### தொழில்

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, தமிழ்நாடு, இந்தியாவில் உள்ள தொழில்வளம் மிக்க மாநிலங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. தற்போது கடந்த கால நற்பெயர் மட்டுமே

---

**மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் புது டெல்லியில் 19-3-1988-ஆம் நாளன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து.**

எஞ்சியுள்ளது; இந்த நற்பெயரே தற்போது மத்திய அரசுத் திட்டங்களின் மூலம் நாம் பெற வேண்டிய பங்கினை அடைய இயலாமல் செய்து நமக்குப் பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. உத்யோக் பவனிலும், வடக்குத் தொகுதியிலும் உள்ள கொள்கை முடிவு எடுப்பதற்கான பொறுப்பிலுள்ளவர்கள் மத்திய அரசுத் திட்டங்களைத் தமிழ்நாட்டில் உருவாக்க நினைக்கையில், மகாராட்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு இணையாகவே கருதிப் பார்ப்பதாகத் தோன்றுகிறது. இதன் காரணமாக, 1969-70-ல் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த மத்திய அரசின் தொழில் முதலீட்டுப் பங்கு 8 சதம், தற்போது 5 சதம் ஆகக் குறைந்துள்ளது. வேலைவாய்ப்பின்மையைப் பொறுத்தமட்டில், இந்தியாவில் வேலை வாய்ப்பின்மை பெரிதும் நிலவுகிற-கீழ் நிலையிலுள்ள முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் மக்களின் வறுமைக் கோட்டு நிலை-தேசிய வறுமைக் கோட்டு நிலையைவிடக் குறைவாக உள்ளது.

மத்திய அரசுத் திட்டங்கள் சிலவற்றை, தமிழ்நாட்டில் ஏற்படுத்துவதால் மட்டுமே தமிழ்நாட்டின் இழந்த பொருளாதார நிலை புத்துயிர் பெற்றுவிடும் என்று நான் கூறவில்லை. தொழில் முதலீட்டையும், தொழில் வளர்ச்சியையும் தூண்டுவதற்கான நிலையை உருவாக்க, தமிழ்நாடு அதன் பங்கிற்கு முயலவேண்டியது முக்கியம் என்பதில் சந்தேகமேயில்லை. இவைகளை நிறைவேற்ற முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்றும், ஒருசில வாரங்களில், தமிழ்நாட்டில்தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை மேம்படுத்தவும், குறிப்பாக முற்றிலுமாக அழிந்து விடவில்லை என்றாலும்-பெரிதும் நலிவுற்றுள்ள பல சிறு தொழில்களைச் சீராக்கவும், திட்டமொன்றைத் தயாரித்தளிப்போம் என்று நான் உறுதிகூறுகிறேன். தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். மேலும், எங்களுடைய பொறுப்பின் கீழ் இயலக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். எனினும் மின்பற்றாக்குறை, அடிப்படை வசதிகள் போதிய அளவின்மை ஆகியவை, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி தேக்கநிலை அடைந்ததற்கு முக்கிய காரணங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளன. இக்குறைகளைக் களைய நான் மத்திய அரசின் உதவியை நாட வேண்டியுள்ளது.

### மத்திய அரசுத் திட்டங்கள்

தற்போது நெய்வேலியிலுள்ள இரண்டு சுரங்கங்களில் கூடுதலாக மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தல், நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் ஒன்றை வெட்டுதல், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தமிழ்நாட்டின் இரண்டாவது அணுமின் நிலையத்தை அமைத்தல், கடலூரில் அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துதல் மற்றும் துறைமுகத்தை மேம்படுத்துதல் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த சில திட்டங்களைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்த விரைந்து அனுமதி அளிக்குமாறு நான் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டத்தில் ஜிர்கோனியம், டைடேனியம் உலோகத் திட்டத்திற்கும், நீலகிரி மாவட்டத்தில் மின்னணுவியற்பலன் வழிக் காட்சித் திட்டத்திற்கும் மத்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நான் குறிப்பிட்ட இத்திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதலளித்தால் இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு நாங்கள் மேற்கொண்டுவரும் புதிய முயற்சிகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு, மெதுவாக அரிசிப் பற்றாக்குறை மாநிலமாக மாறி வருகிறது. தொடர்ந்து மத்திய அரசிடமிருந்து அரிசியை எதிர் பார்ப்பது தவிர்க்க வொண்ணாததாகி வருகிறது. வறட்சி நிலவும் இவ்வாண்டில் இக்கட்டான நிலையிலிருந்து நம்மைக் காப்பாற்றியதற்காக நான் பிரதமருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் 30.11.1988 வரை உணவுத்துறை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளோம். உணவுப் பங்கீடு அட்டைதாரர்கள் உரிய நேரத்திலும், அவர்கள் பெறுவதற்குரிமையுடைய அளவுக்கும் இன்றியமையாத பொருள்களைப் பெற வசதி செய்யும் வகையில், பொதுப் பங்கீட்டு முறையிலுள்ள குறைகளையும், இருப்புக்குறைவுகளையும் நீக்குவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம். மத்திய அரசிடமிருந்து அதிக அளவில் பொருள்களைப் பெறுவதும், பொதுப் பங்கீட்டு முறையை மேம்படுத்துவதும் இன்னல்களைக் களைய உதவிபுரியும் என்றாலும், உற்பத்தியைப் பெருக்குவதே இதற்கு முழுமையான பரிகாரமாகும்.

### வேளாண்மை

நேற்று நடைபெற்ற முதலமைச்சர்கள் கூட்டத்தில், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடுத்த இரு ஆண்டுகளிலும் முன்னுரிமை அடிப்படையில் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குமாறு பிரதமர் அவர்கள் மாநிலங்களைக் கேட்டுக்கொண்டார். தமிழ்நாடு, அரிசி உற்பத்தி இலக்கை எய்தச் செய்வதில் நாம் முழுமையாக ஈடுபட்டுள்ளோம். இக்கூடுதல் இலக்குகளை எய்துவதற்கு மத்திய அரசு பேராதரவு நல்கவேண்டுமென்று நாங்கள் கேட்டுள்ளோம். இது தொடர்பாக விரைந்து முடிவு எடுக்குமாறு நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.




### பாசனம்

உயரளவு உற்பத்தியை அடைவதற்குப் பாசன வசதி இன்றியமையாத் தேவையாகும். இச்சூழ்நிலையில் காவிரிநீர்த் தகராறுக்குத் தீர்வு காண்பது மிகவும் அவசரத்தேவையாகிறது. நீண்ட நாட்களாகக் காவிரி நீர்த்தகராறுக்குத் தீர்வு



**கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்**
**காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்**
**சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு**
**சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்**

காணாதிருப்பது அண்டை மாநிலங்களிடையே நல்லுறவும், ஒத்துழைப்பும் நிலவவில்லை என்பதைக் காட்டுகிறது.

ஒவ்வோராண்டும் கருநாடகம் நீரை நிறுத்தி வைத்துக்கொள்வதால் இம்மாநிலத்திற்கு இக்கட்டான நிலைமை ஏற்படுகிறது. இது தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான காவிரி கழிமுகப்பகுதியில் நெல் உற்பத்தியை மிகவும் பாதிக்கிறது. பிறகு தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்றுங்கள் என்று நாம் நம்முடைய அண்டை மாநிலமான கருநாடகத்துக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். நீர் காணாமல் வாடிக் கொண்டிருக்கும் பயிர்களில் ஒரு பகுதியையாவது காப்பாற்றும் பொருட்டு, நமக்குக் கிடைக்க வேண்டிய நீரில் ஒரு சிறிதளவேனும் திறந்து விடுமாறு அம்மாநில முதலமைச்சருக்கு நட்புணர்வின் பேராலும் ஒத்துழைப்பின் பேராலும் வேண்டுகோள் விடுக்கிறோம். அவர் மிகுந்த பரிவு காட்டி, நாம் கேட்பதில் பாதி அளவுக்கு, அல்லது 40% அளவுக்கு நீர் அளிப்பதாக ஒப்புக் கொள்கிறார். உரிய நேரத்தில் இவ்வுதவி செய்ததற்காகக் கருநாடகத்திற்கு தமிழ்நாட்டிலுள்ள நாம் மிகவும் கடமைப்பட்டவர்கள் ஆகிறோம்.

என்றாலும் இவ்வாறு நீர் வழங்குவதற்காக நாம் கொடுப்பது என்ன? நமக்கே மின்சாரப்பற்றாக்குறை இருக்கின்ற நிலையில் அம்மாநிலம் நமக்கு வழங்கும் இந்நீருக்குப் பதிலாக நாம் அவர்களுக்கு மின்சாரம் வழங்குகிறோம். பழமொழி ஒன்றில் கூறப்பட்டுள்ளது போல இச்செயல் அமைந்துள்ளது என்பதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். காவிரி நீர்ப் பங்கீடு பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இத்தகராறு இனிமேலும் காலதாமதமின்றி நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட வேண்டுமென்று நான் பெரிதும் வலியுறுத்த விழைகிறேன். இவ்வாறு காவிரி நீர்த்தகராறை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுவதன் மூலம் மட்டுமே வளமான காவிரிக் கழிமுகப் பகுதியில், தற்போது நிலவி வருகின்ற – உற்பத்தி சீராக இல்லாதிருக்கிற - நிச்சயமற்ற தன்மையை நீக்கமுடியும். அத்துடன் அப்பகுதியில் பாசனமுறை முழுவதையும் நவீனமயமாக்குதல் மாநில அரசுக்குப் பேருதவியாக அமையும். இவ்வாறு பாசன முறையை நவீனமயமாக்குவதற்கு உலக வங்கியிடமிருந்து உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இம் மாநிலத்தில், குறிப்பாகச் சென்னை மாநகரில், குடிநீர்ப் பற்றாக்குறை கவலைதரும் பிரச்சினைகளில் மிக முக்கியமானதாக உள்ளது. சுமார் 135 பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுகின்றது. துளைக்கிணறுகள் தோண்டியும், குடிநீரை லாரிகளில் கொண்டு வந்தும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கப் பெரும் நிதியினைச் செலவிட்டு வருகிறோம்.

நாற்பது இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட சென்னை மாநகர், குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுகின்ற மாநகரங்களில் ஒன்றாகும். இக்குறையைப் போக்க, போர்க்கால அடிப்படையில் பெரும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், நாளொன்றுக்கு ஒருவருக்கு 7 கேலன் என்ற அளவிலேயே குடிநீர் வழங்க இயலுகிறது. இது, இவ்வுலகில் எந்தவொரு இடத்திலுமுள்ள, எந்தவொரு பெரிய மாநகரிலும் 'வழங்கப்படும்' குடிநீர் அளவைவிட மிகக் குறைவேயாகும். அன்றாட அவசியப் பயனுக்காக நாளொன்றுக்கு 30 கேலன் குடிநீர் வழங்கப்பட வேண்டும். நிலத்தடி நீர்வள வாயில்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. திறம்பட்ட நிவாரண நடவடிக்கையை மேற்கொள்வதில் இனியும் நாம் காலங்கடத்தக்கூடாது.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தை அல்லது தெலுங்கு கங்கை குடிநீர்த் திட்டத்தைச் செயற்படுத்துவதே உண்மையில் பயன்தரத்தக்க நடவடிக்கையாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதிலும் பல தடைகள் ஏற்பட்ட வண்ணம் உள்ளன. அவற்றை நீக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேச அரசுக்கு ஏற்கெனவே 47கோடி ரூபாயை வழங்கியுள்ளது. இத்திட்டம் தொடர்பான சில பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால், இத்திட்டத்தை மேற்கொண்டும் செயற்படுத்துவதில் பல புதிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஆந்திரப் பிரதேச அரசுக்கு வழங்குவதற்கென்று நாம் அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 30 கோடி ரூபாய் நிதி யொதுக்கீடு செய்துள்ளோம். ஆனால் இத்திட்டத்தை மேற்கொண்டு செயற்படுத்த, விரைவாக முடிவு ஒன்றை எடுக்க வேண்டும். இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் தடையாகவுள்ள முட்டுக்கட்டைகளை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்ப் பற்றாக்குறை ஒன்று மட்டுமே சென்னை மாநகரின் பிரச்சினையல்ல. சுற்றுப்புறச் சூழல் மாசடைவது பல ஆண்டுகளாகத் தடுக்கப்படவில்லை. அது, தற்போது இம்மாநகரில் கவலைக்கிடமான நிலையை உருவாக்கியுள்ளது. இம்மாநகரின் மக்கள் தொகையில் 25 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் குடிசைப் பகுதிகளில் வசிக்கின்றனர். இம்மாநகரில் ஓடும் ஆறுகள்-அதாவது கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் போன்றவை கழிவுப்பொருள், குப்பை கூளம் ஆகியவை நிறைந்த துர்நாற்றம் வீசும்-நீர்தேங்கி நிற்கும் சாக்கடைகளாக உள்ளன. கடந்த மூன்று வாரங்களாக, இம்மாநகரைத் தூய்மைப்படுத்துவதற்கானமுனைப்புத் திட்டமொன்றைச் செயல்படுத்தி வருகிறோம். வழக்கமாகத் துப்புரவுசெய்வதுடன், இம்முனைப்புத் திட்டத்தின் மூலம் கடந்த பதினான்கே நாட்களில் சென்னை மாநகரத் தெருக்களிலிருந்து 2500 டன் குப்பை கூளங்களும், 2600 டன் கட்டட இடிபாடுகளும் அகற்றப்பட்டுள்ளன என்று நான் கூறினால், இம் மாநகரின் தற்போதைய இரங்கத்தக்க நிலையை நீங்கள் உணரலாம். இம்மாநகரைத் தூய்மைப்படுத்தும் முனைப்புத் திட்டம் இம் மாநகரைத் தூய்மையாக வைத்திருக்க ஓரளவே உதவும்.

இம்மாநகர் நீர்வழிகள் மூலமாகப் போதிய அளவிற்குக் குடிநீர் வழங்குவது, ஆற்றங்கரைகளில் அமைந்துள்ள குடிசைகளை அகற்றி அங்கு வாழ்வோருக்கு வேறு இடங்களில் குடியிருக்க வசதி செய்து கொடுப்பது ஆகியவையே இம்மாநகரில் நிலவும் பிரச்சினைகளைக் களைவதற்கான நீண்ட காலத் தீர்வு நடவடிக்கைகளாக அமையும் என்பது உறுதி. நீர் வழிகளைத் தூய்மைப்படுத்துவதற்கான பெருந்திட்டமொன்று, இங்கிலாந்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் விரைந்து செயல்படுவதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு, நான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சினைகள் குறித்து மட்டுமே நான் இங்கு தெரிவித்துள்ளேன்.

பாரதப் பிரதமர் அவர்களே! எங்கள் மாநில முன்னேற்றத்தில் தாங்கள் தொடர்ந்து அக்கறை செலுத்திவருவதாலும், அண்டை மாநிலங்கள் எங்கள் பிரச்சினைகளைப் புரிந்து ஒத்துழைப்பு நல்குவதாலும், இப்பிரச்சினைகளுக்கு நாங்கள் விரைவில் தீர்வு காணக் கூடும் என்று நம்புகிறேன்.



# இந்தியக் குடியரசுத் தலைவர் தமிழகம் வருகை

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 21-3-'88 அன்று சென்னை வந்தார். விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் ஜவ்வாது மாலை அணிவித்து அவரை வரவேற்றார்.

மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப.சிதம்பரம், ஆளுநர் ஆலோசகர்கள் திரு சித்து, திரு அ. பத்மநாபன், இ.ஆ.ப., தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு எம். எம். ராஜேந்திரன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத்தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம், சென்னை உயர்நீதி மன்றத் தற்காலிகத் தலைமை நீதிபதி திரு ரத்தினவேல் பாண்டியன் மற்றும் உயர் அலுவலர்களும், பிரமுகர்களும் குடியரசுத் தலைவரை வரவேற்றனர்.

பிறகு,விமானப்படை வீரர்களின் அணிவகுப்பைக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஏற்றார்.

**குடியரசுத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு:**

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு வெங்கட்ராமன் அவர்களுக்கு, சென்னை நகர மக்கள் சார்பில் 21-3-88 அன்று மியூசிக் அகாடமியில் பாராட்டுவிழா நடந்தது. இந்த விழாவிற்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாத் தொடக்கத்தில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி இறை வணக்கம் பாடினார்.

தொழில் அதிபர் திரு கே. எஸ். நாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவில், தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

'சுதந்திரப் போராட்டக் காலத்தில் நானும், உயர்ந்த பதவியில் இருக்கின்ற இந்திய ஜனாதிபதி அவர்களும் ஒன்றாக நாட்டு விடுதலைக்காகப் போராட்டம் நடத்தியபோது ஜெயிலில் இருந்தோம். அப்போது ஜனாதிபதியாக வருவார் என்று எண்ணியதில்லை. தமிழ் நாட்டில் தொழிற் புரட்சிக்கு வித்திட்டவர். வயதில் மூத்தவன் என்ற முறையில் அவர் நீண்ட காலம் வாழ வாழ்த்துகிறேன்.''

தொழில் அதிபர் திரு ஏ.எம்.எம். அருணாசலம் பேசுகையில் கூறியதாவது:

''சமுதாயத்தில் ஒரு சிலரே அரசியல், பொருளாதாரம், தொழில் துறை போன்றவற்றில் சிறந்து விளங்குவர்; அதில் ஜனாதிபதியும் ஒருவர். பல்வேறு வகையான பணிகளில் பணியாற்றியபோது தன்னுடைய முத்திரையை அதில் பதித்துள்ளார், ஜனாதிபதி அவர்கள். சமுதாயத்தில் அவர் சிறந்தவராக மேலும் மிளிர எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

தொழிற்சங்கத் தலைவர் திரு ஜி. ராமனுஜம் பேசுகையில் கூறியதாவது:

''ஜனாதிபதி அவர்கள் தொழிலாளர் யூனியனில் 1946 முதல் பணியாற்றினார். ஆனால் இன்று இந்திய யூனியனின் தலைவராகத்

## அட்டை சொல்லும் செய்தி

திகழ்கிறார். தொழிற்சங்கத்தில் சிறந்த தலைவராகப் பணியாற்றினார். பதவிகள் இவரைத் தேடி வந்தன என்றால் அது மிகையாகாது.''

நீதிபதி மு.மு. இஸ்மாயில் பேசுகையில் கூறியதாவது: ''நீங்கள் ஜனாதிபதியானதன் மூலம் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஜனாதிபதியாகிவிட்டது போல கருதத் தோன்றுகின்றது. தாங்கள் 40 ஆண்டுக் காலமாகச் சிறந்த முறையில் பணியாற்றியதன் விளைவாக இந்திய அரசின் உயர் பதவியை அடைந்துள்ளீர்கள்.''

ஐ. நா. சபையின் முன்னாள் பொதுச்செயலாளர் திரு சி.வி. நரசிம்மன் பேசுகையில் கூறியதாவது:

ஐ. நா. சபையில் இந்தியாவின் பிரதிநிதியாகப் பல்வேறு அரசுப் பணிகளை மேற்கொண்டு திறமையாக ஜனாதிபதி அவர்கள் பணியாற்றியுள்ளார்கள்.''

தொழிலதிபர் எஸ். நாராயணசாமி அவர்கள் பேசுகையில் கூறியதாவது :

''இங்கு பேசுவதற்கு 5 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன. 50 வருடக் காலச் சேவைக்கு, ஒரு நிமிடத்திற்கு ஒரு டிகேட் என்று கூறலாம். இவரது பல்வேறு ஆக்கப்பணிகளுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

மைய அரசின் முன்னாள் நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:

''ஐ. நா. சபையில் பல்வேறு பொறுப்புக்களை வகித்தும், தொழிற்சங்கத் தலைவராக, நாடாளுமன்ற உறுப்பினராக,மைய அரசின் பல்வேறு துறையின் அமைச்சராக, தமிழகத்தில் அமைச்சராக, இந்தியாவின் உதவி ஜனாதிபதியாகப் பதவி வகித்து நாட்டின் உயர் பதவியாகிய ஜனாதிபதியாக உயர்வு பெற்றுள்ளீர்கள். மூதறிஞர் இராஜாஜி இந்தியாவின்முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தார். அதேபோல் தாங்களும் முதல் ஜனாதிபதியாக தமிழகத்திலிருந்து ஆகியுள்ளீர்கள். நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உங்களின் யோசனைகள் பயன்பட வேண்டுமென்று விரும்புகின்றேன். தொழில்துறையில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சுமுகமான உறவு நிலவ்க்க நீங்கள் பாடுபட்டதை மறக்க முடியாது. தமிழகம் தொழில்மயமானது தங்களது காலத்தில் என்பது வரலாற்று உண்மையாகும்.''

மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நகர மக்கள் குழு சார்பாகத் தொழில் அதிபர் திரு சிவசைலம் வாசித்த வாழ்த்து மடல் கேடயத்தை, மேதகுஆளுநர் அவர்கள் வழங்கினார்.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமை உரையாற்றுகையில் கூறியதாவது:

''பொது வாழ்வில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகப்பணியாற்றி இன்றைக்கு ஜனாதிபதியாக வந்து இருக்கிறீர்கள். தமிழகத்தின் தவப் புதல்வராகத் திகழ்கிறீர்கள். ஜனாதிபதி அவர்களுக்கு விழா எடுப்பதிலே மக்களே மகிழ்கின்றனர். கடந்த 1957–ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை தாங்கள் தொழில் அமைச்சராகத் தமிழகத்தில் இருந்தபோதுதான் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது.

''பண்டித நேரு காலத்தில்தான் தொழில் வளர்ச்சி தொடங்க ஊக்கம் அளிக்கப்பட்டது. அதைத் தமிழகம் பயன்படுத்திக் கொண்டு உங்கள்மூலமாகத் தொழில் வளர்ச்சி பெற்றது. நேருவின் திட்டத்தைப் பயன்படுத்தி ஒரு சில மாநிலங்கள் தான் முன்னேறின. அதில் தமிழகம் ஒன்று. அதற்கு ஜனாதிபதிதான் காரணம். ஆனால் இன்று தொழில் துறையில் தமிழகம் கீழிலிருந்து 3-வது இடத்தில் பின்தங்கியுள்ளது.

''தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பயன்பட்ட தங்களின் 10 ஆண்டுக்காலப் பணிபோல இந்திய நாட்டில் வளர்ச்சிக்கும் தங்களின் பணி பயன்பட வேண்டும் என விரும்புகிறேன்.''

''பெரும்பாலும் நிதி அமைச்சர் பொறுப்பில் இருப்போர் எந்தத் திட்டத்துக்கு நிதி கேட்டாலும், ஏன்? எதற்கு? என்ற கேள்விகளை எழுப்பியே திட்டத்தை முடக்கி விடுவதுண்டு. ஆனால் ஆர்.வி.யும், சி. சுப்பிரமணியமும் அப்படியின்றி, தொழில் முன்னேற்ற உணர்வுடன் தான் நடந்துகொண்டனர். தென்னாட்டிலேயே தமிழகத்தில்தான் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்போர் எண்ணிக்கை குறையவில்லை.

'தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறை இருந்து வருவது நமது முன்னேற்றப் பணிகளைப் பாதிக்கிறது. நமது வளர்ச்சியைத் தடுக்கும் இது போன்ற அபாய அறிகுறிகளை நாம் சந்திக்க வேண்டி இருக்கிறது.

'தமிழகம் இந்த அபாய நிலையில் இருந்து மீள வேண்டுமானால் மீண்டும் தொழில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டும். நலிந்து போன தொழிற்சாலையைச் செம்மைப்படுத்தி இயக்க வேண்டும். இதனால் தமிழகத்தில் அதிக அளவு வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.''

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

''எனது வாழ்நாளில் என்னிடம் எதிர்பார்த்தவர்கள் யாரையும் நான் ஏமாற்றியதே இல்லை. நான் ஆங்கில இலக்கியத்தில் பெரும் ஈடுபாடு கொண்டு இருக்கிறேன். எனினும் என்னைப் பாராட்டிப் பேசியவர்களுக்கு நன்றிகூற எனக்கு சரியான ஆங்கில வார்த்தை கிடைக்கவில்லை.என்னைப் பற்றிப் பேசியோர் என் சாதனைப் பக்கத்தை மட்டுமே விளக்கினர். என் மறு பக்கமான இயலாமைகள், தோல்விகள் ஆகியவற்றைப் பற்றி யாரும் பேசவில்லை.

'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தின்போது இரு வீர இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது. இதனை ரத்து செய்யும்படி இராஜாஜி முறையீடு செய்தும் ஏற்கப்படவில்லை. அப்போது நான் அவரிடம் வேறு ஒரு உபாயத்தைக் கூறினேன். ஆனால் அதை அவர் நம்பவில்லை. அரைமனதோடு அந்தப் பணியை என்னிடம் ஒப்படைத்தார்.

''நான் வக்கீல் என்ற முறையில் அந்த வழக்கு தொடர்பாகப் பிரிவியூ கவுன்சிலுக்கு அப்பீல் செய்தேன். அது ஏற்கப்பட்டது. இந்த விவரத்தை அரசுச் செயலருக்குத் தெரியப்படுத்தினேன். இந்தப் பணிகளைச் செய்வதில் நான் 'பிசியாக' இருந்ததால், இதுபற்றி ராஜாஜிக்குக் கூடத் தெரிவிக்க முடியவில்லை. விடிந்தால் தூக்கில் தொங்க இருந்தவர் இரு வாலிபர்கள். இரவு முழுவதும் என்மீது இராஜாஜி கோபமாக இருந்தார். என்ன ஆயிற்று என்றே தெரியாமல் தவித்தார்.

''இந்த நிலையில்தான் மறுநாள் காலை இந்துப் பத்திரிகையில் இந்தச் செய்தி வந்தது. அந்த இரு இளைஞர்களும் தூக்கிலிடப்படவில்லை என்று செய்தி பரவியது. இதனால் இராஜாஜிக்கு என்மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டது. நான் ஒரு ஜீனியஸ் (மேதாவி) என்று அவர் கூறினார். அன்றிலிருந்து எனக்கு முக்கியமான பொறுப்புகளை எல்லாம் கொடுக்க ஆரம்பித்தார்.

''நான் சிங்கப்பூருக்கும் பிறஉலக நாடுகளுக்கும் சென்று வாதாடும் வாய்ப்புகளை இராஜாஜி ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த வளர்ச்சியின்போது தான் நான்

பார்லிமெண்டுக்குச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தார். காமராஜிடமும் அதைத் தெரிவித்தார். எடுத்த பணியை முறையாகவும், தீர்க்கமாகவும் செய்து முடிக்கும் இயல்பு கொண்டவர் இராஜாஜி. அவரது அந்தப் பண்பைத்தான் நானும் கடைப்பிடித்து வருகிறேன். அரசியல் வாழ்வில் மட்டுமன்றி, ஆன்மீக வாழ்விலும் இதே கொள்கையைத்தான் கொண்டு வாழ்கிறேன்.

''தொழிலாளர்களின் பிரச்னையைக் கவனித்துத் தீர்க்கும் பொறுப்பை காமராஜ்தான் முதன் முதலில் எனக்கு வழங்கினார். கொண்டிசெட்டித் தெருவில் எனது தொழிற்சங்க வாழ்வு துவங்கியது. அதன் பின்புதான் தொழிலாளர்களின் துயரங்களை நான் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிந்தது. தொழிலாளர்களின் கடின உழைப்பு இல்லாமல் நாடு முன்னேற்றம் காண முடியாது என்பதை உணர்ந்தேன். அதனால்தான் தொழிலாளர் நலத் திட்டங்களை அமல் செய்வதில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறேன். இதனால் நான் தேடிப் போகாமலே வளர்ச்சி என்னை நாடி வந்தது.

'பாராளுமன்றத்தில் 7 ஆண்டுக் காலம் பணிபுரிந்து நாட்டின் பிரச்சினைகளை நன்கு புரிந்துகொண்டேன். நாட்டின் தேவைகளையும் நன்கு அறிந்து கொண்டேன். நமது நாட்டில் 70 சதவீதம் மக்கள் கிராமப் பகுதிகளில் இருக்கின்றனர். அவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது சிரமமான காரியம்தான். இவர்களின் நலனில் அக்கறை செலுத்திக் கொண்டு இருந்தபோது, புதிய தொழில்கள் தொடங்கவும் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தைப் பெருக்கவும் நேரு தீவிரக் கவனம் செலுத்தினார். 50 சதவீதம் மக்கள், தொழில் துறைகளில் ஈடுபட வேண்டும் என்று அவர் முயற்சி எடுத்துக் கொண்டார். அப்போது டில்லியில் இருந்த என்னை காமராஜ் அழைத்தார். 'சென்னையில் தொழில் துறையில் பெரும் வளர்ச்சி செய்ய வேண்டி இருக்கிறது. இந்தப் பணியைச் செய்ய உங்களால் முடியுமானால் தமிழகத்துக்கு வாருங்கள். இல்லையென்றால் டில்லியிலேயே இருந்து விடுங்கள்' என்று காமராஜ் என்னிடம் கூறினார். இந்த அழைப்பையே நான் ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டேன். சென்னையில் புதிய தொழில்களைத் துவக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டேன்.

''அந்தச் சமயத்தில் சென்னை மாகாண மந்திரி சபையில் இருந்த அனைவரும் 'மாநிலம் முன்னேற்றம் காண வேண்டும்' என்ற ஒரே குறிக்கோளுடன் செயல்பட்டனர். இதில் ஒருவருக்கொருவர் பொறாமையோ பூசலோ கொண்டதில்லை. இவருக்கு அதிக விளம்பரம் கிடைக்கிறதே என்று மற்றவர் நொந்து கொண்டதில்லை. ஒரே உணர்வுடன் 10 ஆண்டுக் காலம் உழைத்தோம். அப்போது மாநிலம் பெரும் வளர்ச்சி பெற்றது.

''எப்போது வெளிநாட்டுக்குப் போகப் போகிறீர்கள்?'' என்று ஒரு முறை என்னைக் காமராஜ் கேட்டார்.

''இங்கு அவசர வேலை இருந்தால் அதை முதலில் பார்க்கிறேன். பிறகு வேண்டுமானால் வெளிநாட்டுக்குப் போய்க் கொள்கிறேன்'' என்று நான் பதில் அளித்தேன்.

''சீக்கிரம் வெளிநாட்டுக்குப் போய்விட்டு வாருங்கள். அப்போதுதானே தமிழகத்துக்கு அயல் நாட்டுக் கூட்டுடன் பெரும் தொழில் ஒன்று கிடைக்கும்' என்று காமராஜ் கூறினார்.

காஞ்சி பெரியவர் பரமாச்சாரியார் சுவாமிகளின் அருளாசியினால் தான், நான் இந்த அளவுக்கு உயர முடிந்தது.''

விழா முடிவில் சென்னை நகர செரீப் திரு எம். பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**சிறுவர் தோட்டப்பள்ளி பொன் விழா**

சென்னை மைலாப்பூர் சிறுவர் தோட்டப் பள்ளியின் பொன்விழா, சென்னை மியூசிக் அகாடமியில் 22-3-88 அன்று நடைபெற்றது.

பொன்விழா மலரை இந்தியக் குடியரசுத் தலைவர் வெளியிட, அதைப்பட அதிபர் திரு ஏ.வி.எம். சரவணன் பெற்றுக் கொண்டார்.

விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''பள்ளிக் கட்டடத்துக்குச் செல்லும் முன்பே குழந்தைகளுக்கு தேசப் பற்றையும், கட்டுப்பாட்டு உணர்வையும் ஊட்ட வேண்டும்.

''பள்ளிக்கூடங்களுக்கு வருவதற்கு முன்பும், பள்ளிக்கூடங்களுக்கு வந்த பிறகும் மற்ற மதங்களை மதிக்கும் தன்மையை மாணவர்களுக்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் சொல்லித் தரவேண்டும்.''

விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் கூறியதாவது:



**''கல்வித் துறை சிறந்து விளங்கும் நிலை ஏற்படுவதாயின் ஒவ்வோர் ஊரிலும் நூல் நிலையம் மிகச் சிறந்த கட்டடமாக விளங்குதல் வேண்டும். நூல் நிலையக் காப்பாளர் பேரறிஞர்களாக மக்களிடையே பெருமதிப்பு உள்ளவர்களாக விளங்குதல் வேண்டும்.**

**—திரு.வி.க**

''பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்குத் தரமான கல்வியைக் கொடுக்க ஆசிரியர்களும், பள்ளிக்கூட நிர்வாகிகளும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட வேண்டும்.''

**சத்தியமூர்த்தி மேல் நிலைப்பள்ளி**

அனாதைக் குழந்தைகள் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள சென்னை பாலமந்திர், காமராசர் அறக்கட்டளையின் சார்பில் சென்னை தியாகராய நகரில் உள்ள சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு வருகிறது. அந்தப் பள்ளிக்கூடம் மேல்நிலைப் பள்ளிக்கூடமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சத்தியமூர்த்தி மேல்நிலைப் பள்ளிக் கூடத்திற்கு 22-3-88 அன்று அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினார்.

அறக்கட்டளையின் சார்பில் 'பால மந்திர் விநாயகா கிளினிக்' கட்டடத்திற்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அடிக்கல் நாட்டினார்.

**காஞ்சியில்**

22-3-88 அன்று மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் அவரது துணைவியாரும் காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சி சங்கராச்சாரியாரைச் சந்தித்து ஆசி பெற்றனர்.

23-3-88 அன்று மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் தனது சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு சென்னை விமான நிலையத்தில் இருந்து கொச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார். சென்னை விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநர், ஆளுநரின் ஆலோசகர்கள், மற்றும் உயர் அலுவலர்களும் பிரமுகர்களும் வழியனுப்பி வைத்தனர்.

**—நமது செய்தியாளர்**



# அன்னை இந்திராகாந்தி பொன்மொழிகள்

நாம் நல்ல இந்துவாக, நல்ல முஸ்லீமாக, நல்ல கிறிஸ்துவராக, நல்ல சீக்கியராக அல்லது வேறு ஏதாவது ஒரு சமயத்தைச் சேர்ந்தவராக இருந்து கொண்டே, நல்ல இந்தியராகவும் இருக்கலாம்.

பல்வேறு பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் கொண்ட மக்கள் இந்தியாவில் வசிக்கின்றனர். இந்தப் பலதிறப்பட்ட அம்சங்களை நாம் வரவேற்கும் அதே சமயத்தில், பூரண ஐக்கியத்தைப் பாதுகாத்து வர வேண்டும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டும். நாட்டின் எந்தப் பகுதியும் தனியாக முன்னேற முடியாது.

ஐக்கிய உணர்வுடன் பாடுபட மக்கள் உறுதி கொண்டால், தேசத்தை எதிர்நோக்கியுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும்.

ஒற்றுமையாக இருந்து, கடுமையாக உழைப்பதன் மூலமே, நாம் உருவாக்க விரும்பும் சோஷலிச சமுதாயத்தை நிறுவ முடியும்.

நம்மிடையே ஒற்றுமை, கட்டுப்பாடு, சகோதர உணர்வு, இல்லாவிட்டால், நம்மால் எதையுமே சாதிக்க முடியாது என்பதை நாம் என்றும் உணர்ந்திருக்க வேண்டியது அவசியம்.

எல்லாப் பெண்களுமே சமூகத்தின் ஆசிரியர்கள், வழிகாட்டிகள்; அதனால்தான் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறோம்.

கல்வி கற்பதும், போதிப்பதும், முக்கியமானவை. அதே நேரத்தில் சிறந்த மனிதனை உருவாக்குவதாக அவை அமைய வேண்டும்.

உலகம் முழுவதும் ஒரு குடும்பமே என்னும் உணர்வுடன் வாழ வேண்டும். இந்தக் கருத்தை இளம் வயதிலேயே குழந்தைகள் மனத்தில் பதியச் செய்ய வேண்டியது அவசியம்.

சமூகக் கேடுகளை எதிர்த்துப் போராட இளைய தலைமுறையினர் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டின் முக்கிய விரோதி ஏழ்மை; இவ் விரோதியை முறியடிக்க, கடும்போர் புரிய வேண்டும் என்று மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மக்களின் முதல் சேவகியாக என்னைக் கருதுகிறேன். எத்தனை பெரிய பதவியாக இருந்தாலும், அந்த அளவுக்கு நீடித்த சேவையும் தேவைப்படுகிறது.

நான் உயிர் வாழ்கிறேனோ அல்லது செத்து மடிவேனோ என்பதைப் பற்றியெல்லாம் எனக்குத் துளிக்கூட கவலை இல்லை. என் இறுதி மூச்சுவரை நான் என்னுடைய நாட்டுக்காகவே பணிபுரிவேன். நான் இறக்கும்போது என் இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் இந்தியாவை வலுப்படுத்தி, ஒன்றுபட்டதோர் இந்தியாவை நிலைபெறச் செய்யும்.

தொகுப்பு : வ. இராசமனோகரன்




# படமும் செய்தியும்

மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களுக்கு 21.3.88 அன்று சென்னையில் நகர மக்கள் குழுவின் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

சோவியத் மகளிரின் வாழ்க்கையை விளக்கும் கண்காட்சியை மாண்புமிகு மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் திருமதி மார்க்கரெட் ஆல்வா அவர்கள் 20.3.88 அன்று சென்னையில் துவக்கி வைத்தார்.







மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்களும், ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் அவர்களும் 21.3.88 அன்று ஆளுநர் மாளிகையில் மரக்கன்றுகளை நட்டனர்.

இந்தியாவில் 67 போக்குவரத்துக் கழகங்களில் சிறந்த பேருந்து இயக்கச் செயல் திறனிற்காக, 1987 ஆம் ஆண்டு அகில இந்தியப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பு விருதினைத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பெற்றது. இவ்விருதுகளை ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து அவர்கள் தலைமைச் செயலகத்தில் 21.3.88 அன்று பார்வையிட்டார்.





ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் பிரதிநிதிகள் 21.3.88 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன். இ.ஆ.ப. அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

சென்னை தீவுத்திடலிலுள்ள சிற்றரங்கத்தில் 20.3.88 அன்று பிரெஞ்சுக் கலைஞர்களின் இந்திய இசை நடன நிகழ்ச்சிகளை, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசு சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு சி.என். இராமதாஸ், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.





மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 20.3.88 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற ஊனமுற்றோர் உலக நாள் விழாவில், ஊனமுற்றோர்க்கான மாநில விருதுகளை வழங்கினார்.

குடும்பநலத் திட்டச் சாதனைக்காக, மூன்றாவது முறையும், முதல் பரிசு பெற்றுள்ளது தமிழ்நாடு. அப்பரிசினை மாண்புமிகு மத்திய நல்வாழ்வு குடும்பநலத்துறை அமைச்சர் திரு மோதிலால் வோரா அவர்களிடமிருந்து தமிழக அரசு நல்வாழ்வுத்துறை ஆணையர் செயலர் திரு என்.நாராயணன், இ.ஆ.ப., பெறுகிறார்.





# தாய் சேய் நலம் காப்போம்!

**கோ. ராதாகிருஷ்ணன்**
**கூடுதல் இயக்குநர்**
**(குடும்பநல விளம்பரம்)**

குடும்ப நலத்திட்டம் தமிழகத்தில் 1956ஆம் ஆண்டு முதல் மிகச் சிறப்பாக ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்பட்டுவருகிறது.

நம் நாட்டில் 'பி' பிரிவு மாநிலங்களுக்குள் தமிழ்நாடு 1984-85, 1985-86, 1986-87 ஆகிய ஆண்டுகளில் இலக்கை அடைவதில் முதலாவது நிலையை அடைந்து, தேசிய விருதைத் தொடர்ந்து பெற்று வந்திருக்கிறது. முனைப்பியக்க காலத்தில் தமிழ்நாடு மிகச்சிறந்த சாதனை புரிந்ததற்காக இந்திய அரசு பாராட்டி, தமிழ்நாட்டிற்கு ரூ.1.92 இலட்சமும் மற்றும் ரூ.2.5 இலட்சமும் நிதி அளித்துள்ளது.

தமிழகத்தில் குடும்பநலப்பணிகளை நிறைவேற்ற, 383 கிராமப்புற குடும்ப நலத்திட்ட நிலையங்களும், 268 நகர்ப்புற குடும்ப நலத்திட்ட நிலையங்களும் உள்ளன. 5,000 மக்கள் தொகைக்கு ஒன்று என்ற வீதத்தில் 7558 துணைச் சுகாதார நிலையங்கள் உள்ளன. மேலும் 13 தன்னியக்க நிறுவனங்கள் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் குடும்பநலச் சேவையை மக்களுக்கு அளித்து வருகின்றன.

1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 4.84 கோடி ஆகும். இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு தான் மிக மிகக் குறைவான மக்கள் தொகை வளர்ச்சியுடையதாக உள்ளது. 1985ஆம் ஆண்டு நிலவரத்தின்படி தமிழகத்தின் பிறப்பு மற்றும் இறப்பு விகிதம் முறையே 24.8 மற்றும் 9.5 ஆகும். உயிருடன் பிறக்கும் 1000 சிசுக்களில் 80 சிசுக்கள் இறக்கின்றன என்பது தமிழகத்தின் சிசு மரண விகிதமாகும்.

## தேசிய நல்வாழ்வுக் கொள்கை

கி.பி.2000ல், ஒரு தாய், ஒரு பெண் குழந்தையை மட்டுமே தனக்குப் பதிலாகப் பெற்றெடுக்கிறாள் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்பது தேசிய நல்வாழ்வுக் கொள்கையின் நோக்கமாகும். அந்த நோக்கத்தை, 1991-1992ஆம் ஆண்டிலேயே தமிழகத்தில் ஈடேற்ற வேண்டி உள்ளது. இதன் பொருட்டு, பிறப்பு, இறப்பு வீதங்களை முறையே 21 மற்றும் 9என்று குறைக்க வேண்டும்.

1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய குடும்பநலத் திட்டத்தின் மூலம் பாதுகாப்பளிக்கப்பட்ட தம்பதியர் 46.3 சதவீதத்தினர் ஆவர். இது 1988ஆம் ஆண்டு மார்ச் மாத முடிவில் 50 சதவிகித அளவையும் தாண்டிச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1991-92ஆம் ஆண்டுக்குள் 60 சதவிகிதத் தம்பதியரைக் குடும்ப நலத்திட்டத்தின் மூலம் பாதுகாத்ததாக வேண்டும். எனவே அடுத்த 10 சதவிகிதத்தினர் ஆண்டுக்கு 2.5 சதவீதத்தினராக, 1988-89லிருந்து 1991-92ஆம் ஆண்டுக்குள், நான்கு ஆண்டுகளில் குடும்பநலத்திட்டப் பாதுகாப்பைப் பெறுமாறு செய்ய வேண்டும். கருத்தடை அறுவைச் சிகிச்சை மூலமாக மட்டும் அல்லாது, தற்காலிக கருத்தடை முறைகள் மூலமாகவும் ஆவன செய்ய வேண்டுமென்பதே இதற்கான உத்தியாகும்.

## மக்கள் ஒத்துழைப்பு

கடந்த காலச் சாதனைகளை (1980-81 முதல் 1987-88 வரை) வைத்துப் பார்த்தால், குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் மிகவும் முன்னணியிலுள்ளது என்பது தெரியும். குறிப்பாக 1983-84முதல் 1986-87 வரையிலான நான்கு ஆண்டுகளில் ஆண்டுதோறும் நூறு விழுக்காட்டிற்கும் மேலாகத் தமிழ்நாடு சாதனை ஏற்படுத்தியுள்ளது. இந்த அளப்பரிய சாதனையைப் பொது மக்கள், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், தன்னியக்க நிறுவனங்கள், அரசாங்க அலுவலர்கள், மற்றும் ஊழியர்கள், தொழில் அதிபர்கள், மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் அளித்த முழு ஒத்துழைப்பால்தான் ஏற்படுத்த முடிந்தது.

கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதே பெரிதும் விரும்பப்படுகிறது என்ற போதிலும், பல குழந்தைகளையுடைய தகுதி வாய்ந்த தம்பதியர் அனைவரும் அநேகமாக கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுவிட்டனர் என்ற நிலையில், தற்காலிகக் கருத்தடை முறைகளை ஏற்பது-குறிப்பாகக் கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வது பெருகி வருகிறது.

குடும்ப நலப்பணிகளில் மக்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில், அலுவலர்கள், அலுவல் சார்பற்றவர்கள் அடங்கிய குழுக்கள் 17 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு குழந்தைகளுடன் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குப்பச்சைநிறஅட்டைகள் வழங்கப்படுகின்றன. இது வரையில் 6 இலட்சம் பச்சை அட்டைகள் தயாரிக்கப்பட்டு, எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இந்திய அரசின் அறிவுறுத்தலுக்கிணங்க, கணவன், மனைவி ஆகியோரின் படங்கள் இந்தப் பச்சை அட்டைகளில் ஒட்டப்பட்டுள்ளன. பச்சை அட்டை உடையவர்களுக்கு மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை எழும்பூர், சேலம், காந்திகிராமம் ஆகிய இடங்களில் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையங்கள் இயங்கிவருகின்றன. இந்தப் பயிற்சி நிலையங்களில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் ஆகியோருக்கு பணியிடைப்பயிற்சி அளிக்கப்படுகிறது. குறிப்பாகப் பரம்பரை மருத்துவச்சியர் 33,215 பேர், அவர்களுக்கென பயிற்சி துவங்கப்பட்ட காலத்திலிருந்து இது வரை பயிற்சி பெற்றுள்ளனர்.

**சிறப்புத் திட்டங்கள்**

தற்போது, பேறுகால பின்பணித் திட்ட நிலையங்கள் 97 தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இவற்றில் மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவ மனைகளில் 9 நிலையங்களும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 18 நிலையங்களும், தன்னியக்க நிறுவனங்களைச் சார்ந்த மருத்துவ மனைகளில் 4 நிலையங்களும், உள்ளாட்சி நிறுவனங்களைச் சார்ந்த மருத்துவ மனைகளில் 4 நிலையங்களும், கோட்டாட்சி அளவிலான மருத்துவ மனைகளில் 62 நிலையங்களும் உள்ளன. மருத்துவ முறையிலான கருச்சிதைவு செய்வதற்கு 212 நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் இராசாமிராசுதார் மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை ஆகியவற்றில் ஆய்வுக்கான சிறப்பு வசதிகள் உள்ளன. 1985-86ஆம் ஆண்டில் 124 ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள பிரசவ அறைகளை பெண்களுக்கான அறுவைச் சிகிச்சைக்கூடமாக மாற்றியமைக்க அரசு அனுமதித்துள்ளது. 1987-88ஆம் ஆண்டில் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் உள்ள பிரசவ அறைகளைப் பெண்களுக்கான அறுவைச் சிகிச்சைக் கூடங்களாக மாற்றியமைக்க அனுமதிப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

நகர்ப்புறக் குடிசைப் பகுதிகள் மற்றும் மக்கள் நெருக்கம் அதிகமாக வுள்ள பகுதிகளில் நல்வாழ்வு-குடும்ப நலச் சேவைகளை மேம்படுத்துவதன் பொருட்டு சிறப்புத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் கீழ்வரும் நான்கு வகையான 100 நலவாழ்வு மையங்களையும், நகரத்துக்கென இரண்டு குடும்ப நலத்திட்டச் செயலகங்களையும் அனுமதித்துள்ளன.

**தாய்சேய் நலத் திட்டப்பணிகள்**

நகர்ப்புறக் குடிசைப்பகுதிகளிலும், கிராமங்களிலும், குக்கிராமங்களிலும் வாழும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 70 சதவீதத்தினராக உள்ளனர். அவர்களுக்குத் தரமிக்க தாய்-சேய்நலச் சேவையை நல்கி, தாய்மார்கள் குழந்தைகள் மரணவீதத்தைக்



குறைப்பதற்கான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இந்த நோக்கத்தை ஈடேற்றுவதற்காக கிராமப்புறப் பகுதிகளில் 8,058 துணைச் சுகாதார நிலையங்களும் மற்றும் 689 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் 128 பேறுகால விடுதிகளும், 373 பேறுகால மையங்களும் உள்ளன. இவை பேறுகாலத்திற்கு முன்பும், பேறுகாலத்தின் போதும், பேறு காலத்திற்குப் பின்னும் தாய்மார்களுக்கு நல்வாழ்வுப் பாதுகாப்பளிப்பதுடன், குழந்தை நலனைப் பாதுகாப்பதற்கும் நற்பணி ஆற்றுகின்றன.

கருவுற்ற 12ஆவது வாரத்திலேயே கருவுற்ற தாய்மார்களின் பெயர்கள் இம்மருத்துவமனைகளில் பதிவு செய்யப்படுகின்றன.

பேறுகால உதவியாளர்கள், பலநோக்கு நல்வாழ்வுப் பணியாளர்கள் மற்றும் நல்வாழ்வுக் கண்காணிப்பாளர்கள், கருவுற்ற தாய்மார்களின் வீடுகளுக்கு உரிய தவணைகளில் சென்றும், பேறுகால மற்றும் குழந்தைகள் நல நிலையங்களுக்குத் தாய்மார்கள் வரும் போதும், அவர்களைப் பரிசோதித்து உரிய நல்வாழ்வுச் சேவைகளை ஆற்றிவருகின்றனர்.

ஆபத்தான நிலையில் உள்ளவர்கள் எனவும், சிறப்புக்கவனம் தேவைப்படுபவர்களாக உள்ளவர்கள் எனவும் கருதப்படும் தாய்மார்கள் பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். பேறுகாலத்திற்கு முன்பு அளிக்கப்படும் சேவையாக 'ஐ.சி.எம்.ஆர்' பரிந்துரைகளின்படி தாய்மார்களுக்கு, அவர்கள் கருவுற்றிருக்கும் கடைசி நூறு நாட்களில், இசிவு நோய் வராமல் காக்க இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. எடை பார்த்து அதற்குத் தக்கவாறு நல்வாழ்வுச் சேவை அளிக்கப்படுகிறது. நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்து பற்றிய கல்வி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவச்சிகள் (Dais) தூய்மையும் தரமும் மிக்க பேறுகாலச் சேவைகளைத் தாய்மார்களுக்கு நல்கி வருகின்றனர்.

**குடும்பநல விளம்பரப்பணி**

மக்களிடையே குடும்பநலத் திட்டம் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி தம்பதியர் சிறு குடும்ப நெறியை ஏற்கும் வகையில் குடும்ப நல விளம்பரப் பணிகள் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. ''ஒரு குடும்பம் ஒரு வாரிசு'' என்ற குடும்பநல மொழி தமிழகத்தின் கிராமப்புறப் பகுதிகளில் நல்ல பலனை ஏற்படுத்தியுள்ளது. திரைப்படங்கள் காண்பித்தல், பொருட்காட்சிகள் நடத்துதல், கிராமிய மற்றும் நகர்ப்புற குடும்ப நலக் கலைவிழாக்கள், நாடகங்கள் நடத்துதல், செய்தித்தாளில் விளம்பரங்கள் வெளியிடுவது ஆகியவை குடும்பநலத் திட்ட விளம்பரப் பணிகளாக முறையாகவும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. வானொலி, தொலைக்காட்சித் துறையினரோடு ஒருங்கிணைந்து குடும்பநலத்துறை பிரச்சாரப் பணிகளைச்செவ்வனே ஆற்றுகிறது. வெளிவிளம்பரமாக, சுவர் சித்திரங்கள், சுவரொட்டிகள், ஒட்டும் தாள்கள், தகரப்பலகை விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலம் குடும்பநலச் செய்தி மக்களிடையே பரப்பப்படுகிறது. பெண் கல்வி, தாய்சேய் நலம், சிறுகுடும்ப நெறி வலியுறுத்தும் ஒரு நிமிட நேரத் திரைப்படங்கள் எடுக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் தொலைக்காட்சியின் மூலம் மக்களுக்குக் காட்டப்படுகின்றன.

# நிலத்தடி நீர் கண்டுபிடித்தல் சில நம்பிக்கைகள்

**டாக்டர் ப. கந்தசாமி,**
**இயக்குநர்,**
**நீர் நுட்ப மையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை.**



நிலத்தடி நீரைக் கண்டுபிடிக்கப் பழங்காலத்திலிருந்து பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. நமது கிராமங்களில் இருக்கும் பல விவசாயிகள் தங்கள் அனுபவத்திலிருந்து நீர் இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டுக் கூறும் அனுபவ அறிவைப் பெற்றிருக்கிறார்கள்.

நிலத்தடி நீர் இருக்கும் இடங்களில் மேல் மண்ணிலும் சிறிது நீர்ப்பிடிப்பு அதிகமாக இருக்கும். இந்த இடங்களில் வளரும் மரங்கள் பசுமையாகவும், அடிமரம் பெருத்தும் இருக்கும். குறிப்பாக இப்படிப்பட்ட மரங்கள் மழை நீர் வடியும் ஓடைகள் அருகில் இருக்கும். அப்படிப்பட்ட இடங்களில் கிணறுகள் வெட்டினால் நீர் கிடைக்கும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். இம்மாதிரி குறிப்புகளைக் கொண்டு அனுபவம் மிக்க பெரிய விவசாயிகள் கூறும் இடங்களில் பொதுவாக கிணறுகள் வெற்றிகரமாக அமையும்.

நிலத்தடி நீர் நிலைகள் அதிகம் இருக்கக்கூடிய இடங்களை அறியும் குறிப்புகள் வருமாறு:

1. மழைநீர் ஓடைகள், ஆறுகள் இவைகளின் பக்கத்தில் உள்ள நிலங்கள்.

2. நன்றாக வளர்ந்து கோடையிலும் பசுமையாக இருக்கும் மரங்கள் உள்ள இடங்கள்.

3. மேடு பள்ளமான பூமியில் பள்ளக்கால் பகுதிகள்.

4. குளம் குட்டைகளின் பாசனப் பகுதிகள் மற்றும் நீர் தேங்கும் பகுதிகள்.

5. ஏற்கெனவே வெட்டப்பட்டுத் தண்ணீர் நிறைய ஊறும் கிணறுகள் உள்ள பகுதி.

இந்த அனுபவ முறை தவிர, பலவிதமான நம்பிக்கைகள் மக்கள் மனதில் வேரூன்றி இருக்கின்றன. அவற்றில் சில வருமாறு:

1. பசுமாட்டுக் கன்றை ஒருநிலத்தில் ஓடவிட்டு, அது எங்காவது நின்று மூத்திரம் பெய்தால் அந்த இடத்தில் கிணறு வெட்டலாம்.

2. ஆட்டுக்கிடாவை அந்த நிலத்தில் ஓடவிட்டால் அது ஏதாவது ஒரு இடத்தில் நின்று தலையைக் குலுக்கினால் (ஆட்டினால்) அந்த இடத்தில் நீர் இருக்கும்.

3. சிலருக்கு உடம்பில் ஒரு விதமான காந்த சக்தி இருக்கிறது. அவர்கள் ஒரு மரத்தில் சிறிய கிளையையோ அல்லது செம்பு வளையத்தையோ கையில் எடுத்துக் கொண்டு ஒரு நிலத்தில் நடந்தால் நீர் இருக்கும் இடத்தின் மேல் அவர்கள் வரும்போது அந்தக்குச்சி அல்லது வளையம் சுற்றும். அந்த இடத்தில் கிணறு வெட்டலாம்.

4. நிலத்தின் வரைபடத்தையும், நிலச் சொந்தக்காரரின் ஜாதகத்தையும் பார்த்து, எந்த இடத்தில் கிணறு வெட்டலாம் என்று ஜோசியர் மூலம் அறிதல்.

5. ஒரு சிறிய கண்ணாடி பாட்டிலில் நீர் நிறைத்து, அதை நூலினால் கட்டி, நூலின் நுனியைப் பிடித்துக் கொண்டு போனால், நீர் நிலை உள்ள இடத்தில் இந்த பாட்டில் அதிகமாக ஆடும்.

இவை யாவும் மனித மனத்தின் நம்பிக்கையைப் பொறுத்துப் பலன் அளிக்கும். விஞ்ஞான ரீதியாக இவற்றிற்கு எந்த விதமான காரண காரிய விளக்கங்கள் கொடுப்பதற்கில்லை. பல்லாண்டுக் காலமாக இவ்வித நம்பிக்கைகள் நம் நாட்டில் மட்டுமல்லாது, மேலை நாடுகளிலும் இருந்து வருகின்றன. வைத்தியரை முழுமனதோடு நம்பினால்தான், அவர் கொடுக்கும் மருந்து நோயைக் கட்டுப்படுத்தும். நம்பிக்கையில்லாமல் போனால் எப்படிப்பட்ட உயர்தர மருந்தும் பலனளிக்காது.

நம்பிக்கைகள், ஆருடம், சகுனம், ஜோசியம் இவை ஒவ்வொருவருடைய தனிப்பட்ட மன இயல்பு, இவை ஏன் நடைமுறை வாழ்க்கையில் ஒன்றிப் போய்விட்டன என்று காரணம் காட்டி விளக்குவது கடினம். ஆனால் குறிப்பாக, சில இடங்களில் கிணறுகள் வெட்டக்கூடாது என்று எல்லோராலும் நம்பப்படுகிறது. அவையாவன :

1. பாறைகள் வெளியே தெரியும் நிலப்பகுதி.

2. மேட்டுப்பாங்கான பூமி.

3. மண்கண்டம் மிகவும் குறைவான பகுதி.

4. சிதைந்த பாறைகள்அதாவது கிணற்று மண் என்று சொல்லப்படும் 'நொரம்பு' குறைவாக உள்ள பகுதிகள்.

இப்பகுதிகளில் கிணறுகள் வெட்டுவது கூடாது.

விஞ்ஞான முறையில் நிலத்தடி நீர் நிலைகளைக் கண்டுபிடிக்கப் பல உத்திகள், கருவிகள் வந்துள்ளன.



## பெரியார் மாவட்டத்தில்

# மண்-நீர்வளப் பாதுகாப்புப் பணிகள்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்குஆதாரமாக அமைவது அந்நாட்டின் நிலவளமும் நீர்வளமுமே ஆகும். இந்த இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலம் அந்நாடு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதுடன் உலக சமுதாயத்திலே ஓர் உயர்ந்த நிலையையும் அடைய முடிகிறது. எனவே, அடிப்படைத்தேவைகளான நிலத்தையும் நீரையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். அரசு இதனையுணர்ந்து வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக நிலவளத்தையும் நீர்வளத்தையும்பாதுகாக்கப் பல நற்பணிகளைச் செய்து வருகிறது.

### மண்வளப் பாதுகாப்பு

பயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாத சத்துகள் மேல் மண்ணில்தான் உள்ளன. ஆனால் தவறான முறையில் நிலத்தைப் பயன்படுத்துவதன் காரணமாகவே சத்தான மேல்மண் நீரினாலும், காற்றினாலும்அடித்து செல்லப்படுகிறது. அதாவது நிலத்தின் தன்மைக்கும், சரிவுக்கும் தகுந்தாற்போல் சாகுபடி செய்யாமல், நமது தேவைக்கேற்பச் சாகுபடி முறைகளையும் பயிர்களையும் மாற்றிக் கொள்வதும், மரங்களை வெட்டுதலும், மண் அரிப்பிற்கு முக்கியக் காரணங்கள் ஆகின்றன. மண் அரிப்பு பெரும்பாலும்மானாவாரி நிலங்களில் ஏற்படுகிறது.

பெரியார் மாவட்டத்தில் நிலச் சரிவு 2 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் வரை உள்ளது. எனவே மண் அரிப்பைத் தடுப்பதற்கு வேளாண்மைப் பொறியியல் துறையினர் நிலத்தின் சரிவிற்கேற்ப, சரிவிற்குக் குறுக்காக 2 மீட்டர் கீழ் அகலமும், 0.45 மீட்டர் உயரமும், 0.50 மீட்டர் மேல் அகலமும் கொண்ட சமஉயர வரப்புகளைநில மட்டத்திற்கேற்பத் தேவையான நீளத்தில் அமைத்துக் கொடுக்கிறார்கள். இதனால் மழைக்காலங்களில் சரிவில் ஓடிவரும் மழை நீர், குறுக்கில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சம உயர வரப்புகளினால் தடுக்கப்பட்டு தேக்கி வைக்கப்படுகிறது. இதனால் புன்செய் நிலங்களில் ஈரப்பசை நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்கப்படுகிறது. மானாவாரிப் பயிர்கள் இதன்காரணமாக நல்ல விளைச்சலைக் கொடுப்பதுடன் விவசாயக் கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதால், மானாவாரி நிலங்கள் தோட்டக்கால் பயிர் செய்ய ஏதுவாகின்றன. மேலும் நிலையான மற்றும் பசுமையான தாவரப் போர்வைகள் மூலம் மண் அரிப்பு தடுக்கப்படுவதுடன், நிலத்தின் ஈரத் தன்மையும் பாதுகாக்கப்படுகிறது. எனவே இதற்காக சம உயர வரப்புக்களில் தேவையான இடைவெளி விட்டு மரக்கன்றுகள் (பனங்கொட்டை விதைகள்மற்றும் ஊஞ்சமரத்தின் விதைகள் ஆகியவற்றை) நட்டு அவற்றைப் பராமரிக்கவும் வேளாண்மைப் பொறியியல் துறையினர் வழி வகைகள் செய்து கொடுக்கின்றனர்.

இப்பணிகளை மேற்கொள்ளமுன் வரும் விவசாயிகளுக்கு அரசாங்கம் செலவிடும் தொகையில் 25 சதவிகிதம் மானியம் அளித்து உதவி வருகிறது. மேலும் விவ்சாயி ஆதி திராவிட வகுப்பு அல்லது ஆதி திராவிடப் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவராயின் அவருக்கு 50 சதவிகிதம்மானியம்அளிக்கப்படுகிறது. மானியம் போக மீதித் தொகையினைப் பணி முடிக்கப்பட்ட 2 ஆண்டு கழித்து, பத்து ஆண்டுத் தவணைகளில் அரசாங்கத்திற்குத் திருப்பிச் செலுத்த வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

### நிலம் சமன் செய்தல்

நீர்ப்பாசனத்தைத் திறமையாகவும், சிக்கனமாகவும் செய்ய, மேடு பள்ளமாக உள்ள நிலங்களைச்சமன் செய்வதும், மற்றும் ஒரே சீரான சரிவுள்ள நிலங்களாக மாற்றுவதும் 'நிலச் சீரமைத்தல்' அல்லது 'நிலச் சமன் செய்தல்' எனப்படும். பயிர் செய்வதற்கு ஏற்றதாகவும், அதே சமயத்தில் குறைந்த செலவிலும் சீரமைக்க வேளாண்மைப் பொறியியல் துறையினர் புல்டோசர்களை குறைந்த வாடகைக்குக் கொடுத்து உதவுகின்றனர். இதற்கும் அரசாங்கம் 25 சதவிகிதம் மானியம் அளிக்கிறது. ஓர் ஏக்கருக்கு ரூபாய் 1,500 என்ற வீதத்திலும், மொத்தமாக ஒரு விவசாயிக்கு ரூ. 7,500 என்ற வீதத்திலும் இப்பணி செய்து கொடுக்கப்படுகிறது.

### நிலத்தடி நீர்க்குழாயமைத்தல்

தாழ்வான நிலப்பகுதியிலிருந்து மேட்டுப் பாங்கான நிலப்பகுதிக்கு நீர் பாய்ச்சுவது மிகவும் கடினம்.

ஆனால் இதற்கும் வேளாண்மைப் பொறியியல் துறையினர் தங்களது ஒத்துழைப்பைப் பெருமளவு நல்கி வருகின்றனர். கிணற்றுக்கு அருகில் நீர்த் தொட்டி (காற்றழுத்தத் தொட்டி) கட்டி, அங்கிருந்து பூமிக்கடியில் சிமெண்ட் குழாய்கள் பதித்து, தேவையான இடங்களில் காற்று வெளிப்போக்கிகள் அமைத்துத் தண்ணீரை வெளிச் செல்வாய்களின் மூலம் வெளிக் கொணருகின்றார்கள். இப்பணியும் ஓர் ஏக்கருக்கு ரூ. 1,500 என்ற விகிதத்திலும், ஒரு விவசாயிக்கு ரூ. 7,500 என்ற வீதத்திலும் வேளாண்மைப் பொறியியல் துறையினரால்செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்கும் அரசாங்கம் 25 சதவிகிதம் மான்யம் கொடுத்து உதவுகிறது.



### கசிவு நீர்க்குட்டைகள் - பண்ணைக் குட்டைகள் அமைத்தல்

அதிகப்படியான நீரை பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள்மற்றும் கசிவு நீர்க்குட்டைகள் ஆகியவற்றில் சேகரிப்பதால் திடீர் வெள்ளங்கள் தடுக்கப்படுவதுடன்,அணைகளிலும் குளங்களிலும் வண்டல் படிவதைத் தடுக்க முடிகிறது. மேலும் கால்நடைகளுக்கும், பாசனத்திற்கும், நிலத்தடி நீர்வளம் பெருக்கவும், கசிவு நீர்க் குட்டைகள் மற்றும் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படுகின்றன.

கசிவு நீர்க் குட்டைகள் நீரோடைகளின் குறுக்காகக்கட்டப்படுகின்றன. மேலும் இவை பெரும்பாலும் புறம்போக்கு நிலங்களிலேயே அமைக்கப்படுகின்றன. கசிவு நீர்க்குட்டைகள் கட்டுவதற்குத் தகுந்த இடம் சொந்த நிலங்களில் அமைந்தால், விவசாயிகள் தாங்களாக முன்வந்து தானமாக அரசாங்கத்திற்குக் கொடுத்தால், அங்கும் கசிவு நீர்க்குட்டைகள் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இக்குட்டைகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் பராமரிப்பதற்காக அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

### நிலத்தடி நீர்நிலை காணுதல்

குழாய்க் கிணறுகள் மற்றும் கிணறுகள் அமைக்க விரும்பும் உழவர்களுக்குத் தக்க இடங்களைத் தேர்வு செய்து, அக்கிணறுகள் நீர்வளம் குன்றாத கிணறுகளாக அமைந்திட, வேளாண்மைப் பொறியியல் துறையினர் புவியியல் உதவியாளர்கள் மூலம் உதவி வருகின்றனர். இதற்கென ரெசிஸ்டிவிடி மீட்டர் என்ற கருவி உள்ளது. இதனைக் கொண்டு நிலத்தில் 'சோதனைக் கிணறு' என்று ஏதும் அமைக்காமலேயே தண்ணீர் எவ்வளவு ஆழத்தில் உள்ளது. நிலத்தடியில் எத்தகைய பாறைஉள்ளது, நீர்சார்ந்த மணல் உள்ளதா அல்லது களிமண் கலந்த மணலா என்பவை போன்ற விவரங்களைக் கண்டறிய முடிகிறது. விவசாயத்திற்கென இக்கருவி உபயோகப்படுத்தப்படுமேயானால், ஒரு பாயிண்டிற்கு ரூ. 150, வீட்டு உபயோகத்திற்காகவென்றால் ரூ. 300 வாடகையாக வசூலிக்கப்படுகிறது.

### மரம் நடுதல்

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பரப்புகளில் 1987-88-இல் மட்டும் 2 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### தெளிப்பு நீர் - சொட்டு நீர்ப்பாசன முறைகள்

வறட்சிக் காலத்தில் கிணற்றில் நீர் குறைந்துவிட்டதே என விவசாயிகள் கவலைப்பட வேண்டியதில்லை. வேளாண்மைப் பொறியியல் துறையினரை அணுகினால் பயிரின் வகைகளுக்கேற்ப சொட்டு நீர் அல்லது தெளிப்பு நீர்ப்பாசன முறைகளை அமைத்துக் கொடுக்கிறார்கள். இப்பாசன முறையினால்,

1. நீர் மிச்சப்படுத்தப்படுகிறது.
2. உற்பத்தி அதிகமாகிறது.
3. உர அளவு குறைகிறது.
4. மின்சாரச் செலவுகுறைகிறது.
5. நிலத்தைச் சமன் செய்ய வேண்டுமென்ற தேவையில்லை.
6. களைச் செடிகள் அதிகம் முளைப்பதில்லை.
7. உப்பு நீராயினும் அதிகமகசூல் கொடுக்கும்.
8. குறுகிய காலத்தில், ஒரே நேரத்தில் அறுவடை செய்யலாம்.
9. குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு அதிகப் பரப்பிற்கு நீர் பாய்ச்சலாம்.
10. மண் அரிப்பு இன்றி நீர் பாய்ச்சலாம்.
11. எல்லாவற்றிற்கும் மேலாக வாய்க்கால் அமைக்க எடுத்துக் கொள்ளப்படும் நிலம் அனைத்தும் பயிரிடலாம்.

இப்பாசன முறைகளை மேற்கொள்ளுவதற்கு, தேசிய வங்கிகள் மூலமாக, கடன் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு விவசாயிக்கு ரூ.5,000 அல்லது இம்முறையினை மேற்கொள்ள ஆகும் செலவில் 50 சதவிகிதம், இதில் எது குறைவோ அது மான்யமாக அளிக்கப்படுகிறது.

### நிலச் சீரமைப்புக் கருவிகள் சிறுபாசனக் கருவிகள்

இம்மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறையின் நிலத்தைச் சமன்படுத்தவும், நிலத்தை உழவு செய்யவும் புல்டோசர், டிராக்டர், டிராக்டர் டிரெய்லர் முதலிய இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படுகின்றன.

பாசறைவெடிக்கருவி,நீள்துளைக் கருவி, 4.5'' துளைபோடும் கருவி, பெர்கியூசன் டிரில், தூர் வாரும் இயந்திரம் போன்ற கருவிகள்பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட கருவிகள் மூலம் இம்மாவட்டத்தில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

**கா. சம்சுதீன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெரியார் மாவட்டம்.**





# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*



# புவனகிரியில் பெட்ரோல் உற்பத்தி



தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் அருகேயுள்ள புவனகிரியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பெருமாத்தூர் என்ற இடத்தில் பெட்ரோல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அந்தப் பணி அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டது.

## தரம் உயர்ந்த பெட்ரோல்

நாளொன்றுக்கு 200 பீப்பாய்கள் எண்ணெய் தற்போது தோண்டி எடுக்கப்படும். இப்பெட்ரோல் கிணற்றிலிருந்து கிடைக்கும் கச்சா எண்ணெய் மிகவும் சுத்தமானதாகவும் தரத்தில் உயர்ந்ததாகவும் உள்ளது. இந்தியாவிலேயே அதிக ஆழம் தோண்டப்பட்ட (4,700 மீட்டர் ஆழம்) இக்கிணற்றில், 3,660 மீட்டர் ஆழத்திலேயே எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டு நாற்பது நாட்களிலேயே கச்சா எண்ணெய் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## அந்நியச் செலாவணி ரூ. 40 கோடி சேமிப்பு

தமிழ்நாட்டிலுள்ள காவிரிப் படுகையில் எண்ணெய் கண்டுபிடிப்பதற்காக இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக்கழகம் இதுவரை ரூ. 260 கோடி வரை செலவிட்டுள்ளது. இதில் ரூ. 174 கோடி புவனகிரி அருகே பெட்ரோல் எடுக்கச் செலவு செய்யப்பட்டுள்ளது. காவிரிப்படுகையில் எண்ணெய் வளம் காணும் பணிக்கென ஆண்டுதோறும் ரூ. 100 கோடி செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த 2 ஆண்டுகளில் காவிரிப் படுகையில் 2 லட்சம் டன் எண்ணெய் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது; இதன் மூலம் இந்தியாவிற்குச் சுமார் ரூ. 40 கோடி அந்நியச் செலாவணியைச் சேமிக்க முடியும்.

சிதம்பரத்திற்கு அருகிலுள்ள குமராட்சி மற்றும் சாத்தப்பாடி ஆகிய இடங்களிலும் காவிரிப் படுகையின் பல்வேறு இடங்களிலும் பெட்ரோல் கண்டுபிடிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன; இங்கே கிடைக்கும் வாயு மூலம் 5 மெகா வாட் வரை மின் உற்பத்தி செய்யவும் சாத்தியக்கூறு உள்ளது என்று இந்திய எண்ணெய் மற்றும்இயற்கை வாயுக்கழகத் தலைவர் கர்னல் எஸ். பி. வாசி தெரிவிக்கிறார்.

புவனகிரியில் பெட்ரோல் கிடைப்பது தமிழகத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய நன்மை. மேலும் புவனகிரியிலிருந்து இராமேஸ்வரம் வரை பெட்ரோல் வளம் உள்ளது என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இத்தகைய எண்ணெய் வளத்தின் காரணமாகத் தமிழகத்திற்குத் தனிப்பெருமை ஏற்படப் போவது உறுதி.

நமது மாவட்டச் செய்தியாளர்.

# பெரியப்பா

**– ஜோதிர்லதா கிரிஜா**

"என்னங்க, இங்க கொஞ்சம் வாங்களேன்,'' என்று லல்லி கூவிய கூவல் எட்டு வீடுகளுக்குக் கேட்கக்கூடியது போல் அவ்வளவு இரைச்சலாக இருந்தது. சதாசிவமூர்த்தி சற்றே எரிச்சல் பட்டுத் தலையை மட்டும் திருப்பி அடுக்களைப் பக்கம் பார்வையைச் செலுத்தினானேயன்றி, ''என்ன'' என்றோ, 'இதோ வந்துட்டேன்' என்றோ மனைவிக்குப் பதில் குரல் கொடுக்கவில்லை.

''உங்களைத்தானே! கொஞ்சம் எந்திரிச்சுத்தான் வரக்கூடாதா? நான் அடுப்பில கைக்காரியமா இருக்குறனில்ல?''

படித்துக் கொண்டிருந்த நாளிதழை மடித்து மேசை மீது கிடத்தி விட்டு அவன் எழுந்து நடந்து அடுக்களை வாசற்படிக்கு இந்தப் பக்கம் ஒரு காலும், அதன் அந்தப்பக்கம் ஒரு காலுமாய் நின்று, ''என்ன?'' என்றான். குரல் அவனது எரிச்சலைத் துல்லியமாய் வெளிப்படுத்தியதை உணர்ந்து அதைப் பொறுத்துக்கொள்ள மாட்டாத ஆத்திரத்துடன், '' அடியம்மா பேப்பர் படிக்கறப்ப கூப்பிட்டுடக் கூடாதே, ஆனா நீங்க மட்டும் நான் பால் காய்ச்சிக்கிட்டிருக்கிறப்ப கூட அடுப்பை நிறுத்திட்டு வரச்சொல்லுவீங்க.. இந்தாங்க, இந்தப் பத்திரிகையில உங்க அருமைப் பெரியப்பா ஒரு கதை எழுதி இருக்காரு. படிச்சுப் பாருங்க.....'' என்றாள். வலக்கை அடுப்பில் இருந்த எதையோ கிளறிக்கொண்டிருக்க, அவளது இடக்கை அருகே கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த 'இளமதி' என்ற வார இதழை அவன் புறமாக நகர்த்தியது.

''அதுக்கா இம்புட்டு அவசர அவசரமா, எவனோ திருடன் வீட்டுக்குள்ள புகுந்துட்ட மாதிரி கூச்சல் போட்டே? சரிதான் போ. எங்க பெரியப்பா எழுதின கதையை நான் என்னிக்குப் படிச்சிருக்கேன்? பெரிய எழுத்தாளர்னு பேரு வாங்கினவரு. அப்பப்ப எழுதிச் சம்பாதிக்கிறாரு. உக்காந்த வாக்குல பென்ஷன் வாங்கறாரு. கிட்டத்தட்ட ரெண்டு லட்சம் போல பாங்க்ல பணம் போட்டு வச்சிருக்குறாரு. ஒரு சொந்த வீடு வச்சிருக்குறாரு. பாங்க்குல இருக்குற பணத்தைத் தன்னோட தம்பி பிள்ளையான அடியேனும், தங்கச்சி மகளான பரமேசுவரியும் ஆளுக்குப் பாதியாப் பங்கு போட்டுக்குறணும்னு என்னிக்கோ உயில் எழுதி வெச்சுட்டாரு. இதுக்கு மேல பெரியப்பா மேல் எனக்கு எந்த ஆர்வமும் கிடையாது. கதை படிக்கிற தாம் கதை. கதை படிச்சு நேரத்தை வீணடிக்கிற காரியமெல்லாம் எனக்கு என்னிக்குமே பிடிக்காது. பெரியப்பாவும் -இத்தனை கதைகளும் நாவல்களும் எழுதி இருக்காரே-படிச்சியாடா, என்ன நினைக்கிறேன்னு, வாயைத் திறந்து என்னை ஒரு தரம் கூடக் கேட்டதே கிடையாது.....''

''நீளமாய்ப் பேசிக்கிட்டே போகாதீங்க, இந்தக் கதையை நீங்க படிச்சுத்தான் தீரணும்....' என்ற லல்லி எரிதழலை நிறுத்திப் பாத்திரத்தையும் இறக்கி வைத்துவிட்டு, அந்த வார இதழை எடுத்துப் பெரியப்பாவின் சிறுகதை வெளிவந்திருந்த குறிப்பிட்ட பக்கத்தைப் பிரித்து அவனிடம் நீட்டினாள்.

''இந்தக் கதையை நான் படிச்சே தீரணும்கிற அளவுக்கு இதிலே என்ன விசேஷம்? இதிலே கொஞ்சம் கதையைச் சொல்லிடறது! மெனக்கெட்டு என்னோட நேரத்தை இதைப் படிக்கிறதுல நான் வீணடிக்கணுமாக்கும்?'' என்று முணுமுணுத்துக் கொண்டே சதாசிவமூர்த்தி அந்த வார இதழைப் பெற்றுக்கொண்டான்.

''இதுவரைக்கும் உங்க பெரியப்பா எழுதின எத்தனையோ கதைகளையும் நாவல்களையும் நான் விழுந்து விழுந்து படிச்சிருக்குறேனே ஒழிய, நீங்க படிங்கன்னு உங்ககிட்ட வந்து சொல்லி இருக்குறேனா? நீங்களே சொல்லுங்க.. இதைப் படிங்கன்னு குறிப்பா நான் சொன்னேன்னா அதுல ஒரு அர்த்தம் இருக்கும்கிறதைக் கூடவா உங்களால புரிஞ்சிக்க முடியாது?''

''ஏதோ காரணம் இருக்கிறதுனாலதான் பெரியப்பா எழுதின கதையை நீ என்னைப் படிக்கச் சொல்லி கட்டாயப் படுத்தறேங்கிறது எனக்கொண்ணும் விளங்காம இல்லே. லல்லி, நீயே சுருக்கமா விஷயத்தைச் சொல்லிடக்கூடாதா? இலங்கைத் தமிழர் பிரச்சினை பத்தி ஒரு எழுத்தாளர் நீளமா ஒரு கட்டுரை எழுதி இருக்காரு. பக்கத்து வீட்டுலேருந்து இப்பதான் இரவல் வாங்கிட்டு வந்தேன். தினப்பத்திரிகையைப் படிச்சிட்டு அதைத் தொடங்கலாம்னு இருந்தேன். நீ என்னடான்னா அத்த வைச்சுட்டு இத்தப்படின்னு கழுத்தை யறுக்கிறே....''

''இது கழுத்து அறுபடப்போற சமாச்சாரந்தாங்க... அதனாலதான் இதைப் படிங்கன்னு அவசரப்படுத்தறேன்.... சரி.. நீங்க கதையைப் படிக்கத் தொடங்குறதுக்கு முந்தி ஒரு கேள்வி.''

''என்ன?''

''பாங்குல உங்க பெரியப்பா போட்டு வச்சிருக்குற பணத்தை நீங்களும் பரமேசுவரியும் ஆளுக்குப் பாதியாய் பங்கு போட்டுக்குறணும்னு உயில் எழுதி வச்சிருக்கிறதைப் பத்திச் சொன்னீங்க. ஆனா அவரு கட்டி இருக்குற வீட்டைப் பத்தி என்னன்னு எழுதி வெச்சிருக்காரு?''

''உனக்குத்தான் தெரியுமே?''

''எனக்கொண்ணும் தெரியாது?''

''நிஜமாவா?''

''இதுலே போய் நான் பொய் சொல்லணுமாக்கும்! வீட்டை என்ன செய்யப்போறதா இருக்காருங்கிறது பத்தி ஏதாச்சும் எப்பவாச்சும் சொல்லி இருக்காரா உங்க பெரியப்பா?''

''வீட்டை வித்து, அது கிடைக்கிற தொகையையும் பரமேசுவரியும் நானும் சரி சமமாப் பங்கு போட்டு எடுத்துக்குறணும்னு உயில்ல குறிப்பிடப் போறதாத்தான் சொல்லிக்கிட்டிருந்தாரு.''

''அவரு எழுதின உயிலை ஒரு தரமாச்சும் உங்க கண்ணுல காட்டி இருக்குறாரா?''

''இல்லே,''

''சரி, நீங்க கதையைப் படிங்க முதல்ல,''

''என்ன கதைங்கிறதைச் சுருக்கமா நீயேதான் சொல்லக் கூடாதா? அரை மணிக்குள்ள இலங்கைப் பிரச்சினைக் கட்டுரையை நான் திருப்பிக் கொடுத்தாகணும்''.

''சரி! அப்ப அந்தக் கட்டுரையைப் படிச்சு முடிச்சுட்டு வாங்க. ஆனா இந்தக் கதையை நீங்க படிக்காம மட்டும் இருக்கக் கூடாது''.

சதாசிவமூர்த்தியினுள் ஒரு வியப்பு பரவி அவன் புருவங்களை உயர்த்தியது. பெரியப்பாவின் அந்தக் கதையை அவன் படித்தே தீரவேண்டும் என்று லல்லி கட்டாயப்படுத்துவதன் உட்கிடை முழுவதுமாய்ப் புரியாவிட்டாலும், அவரது உயில் பற்றிய ஏதோ ரகசியமான செய்தி அதில் அடங்கி இருத்தல் வேண்டும் என்கிற அளவுக்கு அவன் விளங்கிக்கொண்டான்.

''ரொம்பப் பெரிய கதையா?''

''அப்படி வாங்க வழிக்கு. பத்தே நிமிஷத்துல முடிச்சுடலாம். மூணோ நாலோ பக்கத்துக்குள்ளதான் இருக்கும். படிங்க....''

சதாசிவமூர்த்தி ஆவலுடன் 'இளமதி'யை வாங்கிக்கொண்டு மறுபடியும் தனது நாற்காலிக்குப் போய் உட்கார்ந்து பெரியப்பாவின் சிறுகதையைக் கவனமாய்ப் படிக்கத் தொடங்கினான்.

சிறுவயதில் மனைவியை இழந்த பிறகு மறுமணம் செய்து கொள்ளாமல் கடைசி வரையில் காலங்கழித்து விட்ட, ஒரு பெரியவர் பற்றிய கதை அது. மனைவியின் மீது மட்டற்ற அன்பு கொண்டிருந்த பெரியவர் இன்னொருத்தியை இறந்து போன தனது மனைவியின் இடத்தில் வைத்துக் கற்பனை செய்து பார்த்தலைக்கூட வெறுத்து அதன் விளைவாய் அவளது நினைப்பிலேயே வாழ்ந்து முடிக்கிறார். மனைவியின் மரணத்துக்குப் பின்னர் அவர் நிறையப் பொறுப்புக்களைத் தாமாய் ஏற்றுக்கொள்ளுகிறார். தம்பியின் குடும்பத்தைப் பெரும் அளவுக்குப் பராமரிக்கிறார். தம்பியின் சம்பளப் பற்றாக்குறையைத் தமது நான்கு இலக்கச் சம்பளத்தால் ஈடு கட்டுகிறார். தம்பியின் மகனை நன்றாய்ப் படிக்க வைக்கிறார். தங்கைக்குத் தமது செலவிலேயே திருமணமும் செய்து வைக்கிறார். பற்றாக்குறை நிறைந்த தம்பியிடமிருந்து ஒரு காசு கூடத் தங்கையின் திருமணச் செலவுக்கென்று பங்கு கேட்கவில்லை. தங்கையின் மகள் திருமணத்தைக் கூட ஓரளவுக்குப் பண உதவியைத் தங்கைக்கு அளித்து நடத்தி வைக்கிறார்.

தமக்கென்று ஒரு குடும்பம் இல்லாது போய்விட்ட நிலையால் தம் தம்பிக்கும் தங்கைக்கும் நிறையப் பொருளுதவிகளைச் செய்யும் அவர், சிறுகச் சிறுக ஓர் எழுத்தாளராக உருவாகிறார். அலுவலக நேரம் போக மீதி நேரங்கள் கனமாய் உறுத்திய சோகத்தைப்போக்கிக்கொள்ளும் முயற்சியில்தான் அவர் விளையாட்டாக எழுதத் தொடங்குகிறார். காலம் செல்லச் செல்லப் பலரும் விரும்புகிற ஓர் எழுத்தாளராக உருவாவதுடன், சொந்த வீடு கட்டுகிற அளவுக்கு, எழுத்தின் மூலம் சம்பாதிக்கவும் செய்கிறார்.

ஒரு கால கட்டத்தில் தம்மைச் சுற்றிலும் நிலவுகின்ற ஏழ்மை, பிணி, ஏற்றத்தாழ்வுகள் ஆகியவை, அவரைப் பெரிய அளவில் பாதிக்கின்றன. அவரை ஆழமாய்ச் சிந்திக்க வைக்கின்றன. 'தம்பியின் குடும்பத்துக்கு மிகப் பெரிய அளவில் உதவி செய்தாகிவிட்டது. தங்கைக்கு மணம் செய்தாகிவிட்டது. ஏன் அவள் மகளின் திருமணத்தில் கூட கணிசமான பங்கை ஏற்றாகிவிட்டது. தம்பியின் மகன் படித்து முடித்தது என்னால்தான். இப்போது நல்ல வேலையில் இருக்கிறான்!



வேலையும் எனது செல்வாக்கால்தான் அவனுக்குக் கிடைத்தது. என்னிடமுள்ள இரண்டு லட்ச ரூபாய்ப் பணத்தையும் இந்த வீட்டையும் என் தம்பி மகனும் தம்பி மகளும் பங்கு போட்டுக் கொள்ளும் விதமாக நான் எழுதியுள்ள உயிலைக் கிழித்துப் போட்டுவிட்டு மாற்றி உயில் எழுதும் நேரம் வந்துவிட்டது. இந்த வீடு யாரும் சந்தாக் கட்டாமல் படிக்கும் வாசகசாலையாக உருவாகவேண்டும். இந்தப் பணம் பெற்றுத்தரும் வட்டியிலிருந்து பத்திரிகைகளும் புத்தகங்களும் வாங்கிப் போடப்பட வேண்டும். மிகவும் ஏழ்மை நிறைந்த குடும்பத்துப் பையன் ஒருவனும் பெண் ஒருத்தியும் படிக்கவைக்கப்பட வேண்டும். இந்தப் பணமும் வீடும் இந்த நோக்கங்களுக்குத்தான் பயன்பட வேண்டும்...' இப்படியெல்லாம் ஒரு திடீர் யோசனைக்கு ஆட்படும் பெரியவர் உயிலை அவ்வண்ணமே மாற்றி எழுதிவிட்டு நிம்மதியுடன் புன்னகை செய்வதாய்க் கதை முடிந்தது.

''கிழவனுக்குப் புத்தி பேதலித்துப் போயிருச்சுன்னு தோணுது''.. என்று ஆற்றாமையுடன் கத்தியவாறு சதாசிவமூர்த்தி அந்த வார இதழைத் தூக்கி எறிந்தான்.

அடுக்களையிலிருந்து வெளிப்பட்ட லல்லி, ''பார்த்தீங்களா? அதுக்குத்தான் படிச்சுப் பாருங்கன்னேன். நீங்க சொல்றாப்பல கிழவருக்கு வயது காலத்துல கிறுக்குப் பிடிச்சிருச்சுன்னுதான் நினைக்கத்தோணுது. தம்பி குடும்பமும் தங்கச்சி குடும்பமும் கிழங்கு கிழங்கா இருக்குறப்ப எவங்களுக்கோ பொதுச் சொத்தாக்குறதாமே'' என்று பொருமினாள்.

''உங்க பெரியப்பாவுக்கு எம்புட்டு வயசு இருக்கும்?''

''அறுபது இருக்கும்....''

''அவரைத் தனியா இருக்க விட்டது தப்பு. கூடவே வச்சுக்கிட்டிருந்தா ஒரு வேளை இப்படியெல்லாம் புத்தி போயிருக்காது. மனுசங்க மேல ஒரு பாசம் ஏற்பட்டிருக்கும். அப்ப, வேற யாருக்கும் சொத்தை எழுதி வைக்கத் தோணாது!''

''அவரு ஆரம்பத்துலேருந்தே தனியாத்தானே சமைச்சுச் சாப்பிட்டு இருந்துக்கிட்ருக்காரு? தன்னோட தம்பி வீட்ல கூட அவரு தங்கலியே? அவரு ஒரு டைப், லல்லி, நாம கூப்பிட்டிருந்தால் கூட வந்திருக்க மாட்டாரு.''

''இருக்கலாம். ஆனா அவரைக் கூப்பிட்டுக் கூட வச்சுக்கிட்டு



அன்பு காட்டணும்கிறது நம்மள்ள யாருக்குமே இல்லாம போயிருச்சே! - தம்பிக்கும் சரி, தங்கச்சிக்கும் சரி, மனுசங்க எப்பவுமே ஒட்டுதலாக கூடவே இருந்தால்தான் பிரியம் கொடுக்கும்....''

''உண்மைதான். நாம கூடத்தான் கூப்பிட்டிருக்கலாம். ஏன் பரமேசுவரி கூடக் கூப்பிட்டிருக்கலாம். யாருமே செய்யலியே? வயசான ஓர் உறவுக்காரர் -குடும்பத்துக்கு எக்கச் சக்கமாப் பண உதவி செய்தவரு தனியா சமைச்சுச் சாப்பிட்டுக்கிட்டு ஒண்டியா இருக்காரே பாவம்கிற கரிசனை நம்ம யாருக்குமே வரல்லியே?''

''ஆனாலும் அதுக்குன்னு இப்படி சொந்தக்காரங்க கட்டை கட்டையா இருக்கிறப்ப அனாதை இல்லத்துக்கும் இன்னொன்னுக்குமா சொத்தைக் கொடுப்பாங்க? கொஞ்சங்கூட நியாயமே தெரியலை உங்க பெரியப்பாவுக்கு! சே, எல்லாம் போச்சு, அந்தப் பணம் வந்தா நாமே ஒரு வீடு கட்டிறலாம்னு நெனச்சிருந்தேன். எல்லாத்துலயும் மண்ணு?''

''எங்க அத்தைக்கும் இது அதிர்ச்சியாத்தான் இருக்கும். ஆனா பெரியப்பா கதையை அவங்க படிச்சாங்களோ இல்லியோ?''

''படிக்காம என்ன? அண்ணன் கதைக்கு ஒத்தை வரியைக் கூட ஒதுக்காம சோடா புட்டிக் கண்ணாடியை மாட்டிக்கிட்டு,தெவச மந்திரம் சொல்ற கணக்கா ரேழி நடையில குந்திக்கிட்டுப் படிப்பாங்களே ஒங்க அத்தை. நானே எத்தினியோ வாட்டி பார்த்திருக்குறேன்... ஏன்? உங்க அத்தை மக பரமேரிவரியும்தான் விழுந்து விழுந்து படிக்கும். எதுக்கும் இந்த மாதிரி பெரியப்பா ஒரு கதை எழுதி இருக்கிறதைப் பத்தி நாசூக்கா அவங்களுக்குத் தெரிவிக்கலாமா? ஒருவேளை படிக்கத் தவறி இருந்தாங்கன்னு வச்சுக்குவம்.

''எழுதி?''

''உங்க தலை... உங்க அத்தை தன் அண்ணனை எழுதிக் கேட்டாலும் கேக்கும்....''

''சரி. இன்னிக்கே எழுதறேன்.

சைக்கிள் மணியோசை கேட்டு ஆவலுடன் பொன்னம்பலம் வாசற் பக்கத்துக்கு விரைந்தார். சில அழைப்பிதழ்கள், இரண்டு பத்திரிகைகள் தவிர ஒரு கடிதமும் வந்திருந்தது. பொன்னம்பலம் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு முதலில் கடித உறையைப் பிரித்தார். அவருடைய தங்கைதான் அதை எழுதி இருந்தாள். 'உயில்' என்ற தலைப்பில் அவர் எழுதி இருந்த கதையைத் தான் படித்தது பற்றி வழக்கமான சேம லாபங்கள் குறித்து விசாரணைக்குப் பின்னர் தெரிவித்திருந்தாள். கதை நன்றாக இருந்ததென்றும், ஆனால் தமது சொத்துக்களை ஏழைகள் பயனுறும் வண்ணம் அவர் உயில் எழுதிவைத்தது தனக்குச் சம்மதமாக இல்லை என்றும், தங்கை வெளிப்படையாக எழுதி இருந்ததோடு, 'ஒரு வேளை நீயே அப்படிச் செய்துவிடலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறாயோ- அல்லது உயிலை மாற்றி ஏற்கனவே எழுதி முடித்து விட்டாயோ என்ற சந்தேகம் எங்களுக்கெல்லாம் வந்தது. அப்படி எதுவும் செய்துவிடாதே. உன்னை நம்பி எங்கள் இரண்டு குடும்பங்களும் எத்தனையோ ஆசைக் கனவுகளைக் கண்டு கொண்டிருக்கின்றன. மேலும், எங்கள் குடும்பங்கள் அப்படியொன்றும் உன்சொத்துக்களை வேண்டாமென்று உதறித் தள்ளும் அளவுக்குச் செயலுள்ள குடும்பங்களாக இல்லை என்பதை நீ அறிந்தே இருக்கிறாய். இந்நிலையில் உன் கடிதம் சதாசிவமூர்த்தியையும் என்னையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. அப்படி ஏதும் அசட்டுத்தனமாய்ச் செய்துவிடாதே. செய்திருப்பின் பழையபடியே உயிலை மாற்றிஎழுதிவிடு'' என்று ஒளிவு மறைவு என்பது துளியும் இல்லாமல் எழுதி இருந்தாள்.

பொன்னம்பலம் இரண்டு தடவைகள் கடிதத்தைப் படித்த பிறகு சிந்தனை வயப்பட்டார். ஓர் எழுத்தாளர் என்ற முறையில் மனித மனங்களின் செயல்முறையை அவர் அறிந்தே இருந்

தார். அண்மையில் தாம் எழுதிய கதையை அவர்கள் படிக்க நேர்ந்தால் அதிர்ச்சிக்கும் ஏமாற்றத்துக்கும் உட்படுவார்கள் என்பது அவர் ஒரு வகையில் எதிர் பார்த்ததுதான். ஆனால் வெட்கம் என்ற உணர்ச்சியே அற்றுப் போய் இவ்வளவு பட்டவர்த்தனமாய் ஒரு கடிதத்தைத் தம் தங்கை எழுதுவாள் என்று அவருக்குத் தோன்றவில்லை. பண ஆசை என்று வந்து விட்டால் மனிதர்களுக்கு நாகரிகமும், மான வெட்கங்களும் அறவே போய் விடுகின்றன என்பதைச் சொந்தமாக உணர்ந்து கசப்படைந்து போனார். கடிதத்தின் தொனி தம்பியின் குடும்பமும் தங்கையின் குடும்பமும் ஒருங்கிணைந்துதான் அந்தக் கடிதத்தைத் தமக்கு எழுதி இருந்திருக்க வேண்டும் என்பதாக அவரை ஊகிக்க வைத்தது. கசப்பையும் கடந்த அவருள் சிரிப்புப் பொங்கியது.

என்ன மனிதர்கள்! தம்பியின் குடும்பத்தைத் தாங்கு தாங்கென்று தாங்கியாகிவிட்டது. அவர் சம்பளமெல்லாம் அவனுக்காகவே செலவிடப்பட்டது. தம்பி மகனின் படிப்பையும் ஏற்றார். தங்கையின் திருமணத்தை ஏற்றார். தங்கை மகளின் திருமணச் செலவுக்குப் பெருந்தொகையைத் தங்கையிடம் தமது திருமணப் பரிசாக அளித்தார். சொந்தக்கால்களில் எல்லாரும் நிற்பதற்கான அனைத்தையும் அவர் அந்த இரு குடும்பங்களுக்கும் செய்து முடித்திருந்த நிலையில், அதற்குமேலும் ஆசைப்படுகிறார்களே என்ற எண்ணத்தால் கொஞ்சம் ஆத்திரம் கூட அவருள் கிளர்ந்தது. அந்தக் கடிதத்துக்குப் பதில் போடக்கூடாது என்று தீர்மானித்தார். தமது உயில் பற்றிய எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல அவர்களில் யாரும் தம்மைக் கட்டுப்படுத்த முடியாது என்று கோபப்பட்டார். தாம் யார் என்பதை அவர்களுக்குக் காட்டி விட வேண்டும் என்ற வீம்பு வந்தது. தம்மைத் தப்பாகப் புரிந்துகொண்டுள்ள அவர்களால் தமக்கு இறுதிக்கால உதவிகள் கிடைக்காமல போகக் கூடுமோ என்ற சாத்தியக்கூற்றையும் நினைத்துப் பார்த்த பிறகும் தமது உயில் பற்றி மூச்சு விடுவதில்லை என்ற முடிவை மாற்றிக் கொள்ள அவர் தயாராக இல்லை.

இரண்டு வாரங்கள் கழித்த பிறகு அவர்தம் தங்கைக்குக் கடிதம் எழுதினார். உயில் பற்றி எதுவுமே சொல்லாமல், வயோதிகத்தால் தாம் உடல் நலமிழந்துள்ளதாகவும், தம் கடைசி நாட்களை அவளுடன் கழிக்க விரும்புவதாகவும் மட்டும் எழுதினார். எனினும் அவள் கடிதம் தமக்குக் கிடைத்ததை மறக்காமல் குறிப்பிட்டார். கைநடுக்கம் வந்துள்ளதாகவும், இனி தம்மால் எழுத முடியாது என்றும் பொய்யாகத் தெரிவித்தார். தங்கைக்கு எழுதிய கையோடு தம்பி மகனுக்கும் எழுதினார். இரண்டு வாரங்கள் வரையில் ஒருவரிடமிருந்தும் பதில் வரவில்லை.

ஒருவேளை தம்பி உயிருடன் இருந்திருந்தால், நிலைமை வேறு மாதிரி இநக்குமோ என்ற எண்ணம் வந்தது. ஆனால் தம்பியைக் காட்டிலும் சாதாரணமாய்த் தங்கை உறவில் உள்ளவர்க்குப் பிரியம் அதிகமாயிற்றே என்ற நடைமுறை ஞாபகத்துக்கு வர, தங்கையே இப்படி நடந்துகொள்ளுகையில், தம்பியா சரியாக நடந்து கொண்டிருக்கப் போகிறான் என்ற எண்ணத்தில் சிரிப்பு வந்தது. தம்பி மகனை இரட்டைப் பட்டதாரியாக்கினார், நல்ல வேலையில் அமர்த்தி உதவினார். அவனும் மவுனம் சாதிக்கிறான். தங்கை மகளுக்கு அடுத்து ஒரு கடிதம் எழுதினார். தமது உயில் கதையை அவளும் படித்திருந்தாள் என்பதை அவளது மவுனமும் அவருக்கு உணர்த்த, அவரது சிரிப்பு அதிகமாயிற்று.

தமது காசு பணம், வீடு ஆகியவை தங்களுக்கு இல்லை என்று ஆன பிற்பாடு, தாம் அவர்களுக்கு வேண்டாதவராகிப் போன நிலை அவரை அதிர்ச்சிக்கு உட்படுத்தியபோதிலும், 'கேவலம் மனிதர்கள்தாமே! இறைவனின் படைப்புக்களிலேயே மோசமான படைப்பல்லவா? என்ற ஞானமும் அந்த அதிர்ச்சியைத் தொடர்ந்தது.

மறுபடியும் ஒரு கடிதத்தை மூவருக்கும் எழுதி வேடிக்கை பார்க்கலாமா என்ற எண்ணம் வர, அவர் சிரிப்புடன் தமது கடிதத் தாளேட்டை எடுத்து மடியில் கிடத்திக்கொண்டு பேனாவைத் திறந்த கணத்தில், வாயிற் கதவு தட்டப்பட்டது. எழுந்து போய்த் திறந்தார். அயலூர் சென்றிருந்த அவருடைய நண்பர் தீர்த்தகிரி புன்சிரிப்புடன் உள்ளே வந்தார்.

நண்பரைக் கண்டதும் மனத்தில் இருப்பதையெல்லாம் அவரிடம் கொட்டிவிட வேண்டும் என்று பொன்னம்பலம் தீர்மானித்தார். அவரைஉட்கார்த்தி விட்டுச் சமையற்கட்டுக்குப் போய் இருவருக்கும் காப்பி கலந்து எடுத்து வந்து நண்பருக்கு எதிரே உட்கார்ந்துகொண்டார். வழக்கமான விசாரிப்புக்களுக்குப் பின்னர் தாம் எழுதிய உயில் கதையைப் பற்றித் தீர்த்தகிரியிடம் அவர் கூறினார்.

கதையைக் கேட்டுவிட்டு, ''நிஜமாவே அப்படித்தான் செய்யறதா இருக்கியா?'' என்று கேட்டார்.

''நீ என்ன நினைக்கிறே, தீர்த்தகிரி? அது ஒரு நல்ல ஏற்பாடுதானே? புத்தகம் வாங்கிப் படிக்க வசதி இல்லாதவர்களுக்கு ஒரு இலவச வாசகசாலை கிடைக்கும். ஒரு ஏழைப் பையனும், ஒரு ஏழைப் பொண்ணும் பட்டப் படிப்புப் படிக்க முடியும். இவங்களுக்கெல்லாம் தான் நான் வேண்டியது செஞ்சாச்சே. தீர்த்தகிரி ஒரு மனுஷனுடைய எல்லாச் சொத்துமே சொந்தக்காரங்களுக்குத்தான் பயன்படணுமா? இப்ப தெரிஞ்சு போச்சு பாரு, என்னோட சொந்தக்காரங்கெல்லாம் நன்றி கெட்டவங்கன்னு! அவங்க லட்சணம் இவ்வளவு பச்சையாத் தெரிஞ்சு போயிட்ட பிறகும், என் சொத்துக்களை அவங்களுக்கே நான் தரணுமா? நீ சொல்லு... உண்மையில் நான் உயிலை மாத்த நினைக்கவே இல்லை. அது வெறும் கதை தான்?''


**தமிழரசு**

**தமிழ் - மாதம் இருமுறை**

**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா ரூ. 24.00
6 மாதச் சந்தா ரூ. 12.00

**'தமிழரசு' - ஆங்கிலம்**

ஆண்டுச் சந்தா ரூ. 12.00 6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தா தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்பவேண்டிய முகவரி: உதவி இயக்குநர்,
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

## கம்ப்யூட்டர் மூலம் கோ-ஆப்டெக்ஸ் பணிகள்

**மா**றிவரும் நாகரிகத்திற்கு ஏற்ப புதுமை பல படைத்துப் புகழ்க் கொடி நாட்டிவரும் கோ-ஆப்டெக்ஸ், இன்று கம்ப்யூட்டர் உலகில் அடி எடுத்து வைத்துள்ளது.

தற்சமயம் கோ-ஆப்டெக்ஸ் 550 விற்பனை நிலையங்களைக்கொண்டு சுமார் 1,500 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தயார் செய்யும் 450-க்கும் மேற்பட்ட துணி வகைகளை விற்பனை செய்து வருகிறது. சராசரியாக ஒரு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அதன் தயாரிப்புகளின் விற்பனைக்கென 550 விற்பனை நிலையங்களுடனும் தொடர்பு கொண்டு வருகிறது.

அளவிற்கதிகமான பிரதமச் சங்கங்களையும், விற்பனை நிலையங்களையும், கோ-ஆப்டெக்ஸ் தன்னகத்தே கொண்டுள்ளதால், இரகவாரியான விற்பனை, தயாரிப்பு மற்றும் சரக்கு இருப்பு முதலான தகவல்களை, உரிய நேரத்தில் பெறுவது போன்ற பல்வேறு பணிகளில் எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல் நெசவாளர்க்கும், பொதுமக்களுக்கும் இலகுவான முறையில் சிறந்த சேவை செய்யத் திட்டமிட்டது. அதற்கேற்ப சென்னையிலுள்ள கோ - ஆப்டெக்ஸ் நிறுவனம் கம்ப்யூட்டர் சாதனம் மூலம் அதன் பணிகளை ஆற்றத் தொடங்கி உள்ளது.

பிரதம சங்கங்களிடமிருந்து துணிகளைக் கொள்முதல் செய்வது சம்பந்தமான கணக்குகள் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டுள்ளன. பட்டுவாடா பட்டியல்கள், வங்கிகளுக்கு அனுப்பும் பட்டியல்கள் மற்றும் பட்டுவாடாவிற்கான அறிவுறுத்தல் பட்டியல்கள் முதலியவற்றை கம்ப்யூட்டர் தயார் செய்கிறது. இம்மூன்று படிவங்களையும் கம்ப்யூட்டர் நிமிடத்திற்கு 5 என்னும் வீதத்தில் அச்சிடும். கொள்முதல் பேரேடுகளைக் கையாளவும் கம்ப்யூட்டர் பயன்படுத்தப்படுகிறது.

''நீ எது செய்தாலும் சரியாத்தான் செய்வே, பொன்னம்பலம். நீ சொல்றாப்ல அவங்க நன்றியே இல்லாதவங்கங்கறதும், இப்ப வெட்ட வெளிச்சமாயிடிச்சு. தவிர நான் சொன்னாலும் சொல்லாட்டியும் உன் விருப்பம் போலதான் நீ செய்வே. இதுல என்னை எதுக்கு யோசனை கேக்குறே?''

''நீ என்ன சொல்றேன்னு பார்த்தேன். வேறு ஒண்ணுமில்லே, தீர்த்தகிரி, யாருக்குமே இப்ப நான் வேண்டாதவனாயிட்டேன் பார்த்தியா? எனக்குக் கையும் காலும் நல்லாத்தான் இருக்குது, உங்களுக்கெல்லாம் ஒரு பரீட்சை வெச்சேன். எல்லாரும் தோத்திட்டீங்க' அப்படீன்னு எழுதணும் போல கை நமைக்குதுடா.''

''எழுது. ஆனா அதுக்குப் பதில் வராது. ஆனா, உயிலை மாத்தலைன்னும், அவங்க பேர்லேயேதான் எல்லாம் இருக்குன்னும் எழுதிப்போட்டேன்னு வச்சுக்க, மறு தபால்ல பதில் எழுதிடுவாங்க''.

''தீர்த்தகிரி நீ இப்ப சொன்னதைக் கேட்டதும் எனக்கு ஒரு புது யோசனை வருதுடா''

''என்ன?''

''நீ இப்ப சொன்னபடியே ஒரு கடிதம் எழுதிப் போட்டுடறேன். கதைக்கும் உயிலுக்கும் சம்பந்தமே இல்லைன்னும், அவங்க தப்பா எடுத்துக்கிட்டு எழுதிக் கேட்டதும், அப்படி ஒரு பொய்யைச் சொல்லிப்பார்த்தா மனுசங்களுடைய சுயரூபத்தைத் தெரிஞ்சுக்க முடியுமேங்குறதுக்காக வேணும்னே அப்படி ஒரு கடிதத்தை எழுதினதாகவும், இப்ப அவங்க எல்லாரும் எங்கிட்ட தோத்துட்டதாகவும் ஒரு கடிதம் எழுதிப் போடறேன். என்ன எதிரொலி வருதுன்னு வேடிக்கை பார்ப்போம்,''

''உனக்கு எழுத்தாளன் மூளை! என்னமோ செய்யி,'' என்று சிரித்தார் தீர்த்தகிரி.

அவர் எதிர்பார்த்தவாறே மறு அஞ்சலில் அவருக்குக் கடிதங்கள் வந்தன. தமக்கு உடம்பு சரி இல்லை என்று சொன்ன கடிதத்துக்குத்தான் பதில் எழுதுவது போல் ஒருநடிப்பை அதில் காட்டி இருந்தார்கள். தங்கை தனக்கு உடம்பு சரி இல்லாதிருந்ததால் உடனே பதில் போடவில்லை என்றும், அதற்குள் அவர் தங்களைப் பற்றிக் கேவலமாக நினைத்துவிட்டதைச் சுட்டிக் காட்டி வருந்தியும் எழுதி இருந்தாள். தம்பி மகன் அவர் கடிதம் வந்த நாளில் தான் ஊரிலேயே இல்லை என்றும், அது வலகத் தொடர்பான நெடிய பயணத்தில் இருந்து அன்றுதான் திரும்பி வந்ததாகவும் அதற்குள் அவர் அவசரப்பட்டுத் தன்னை இழிவாக மதிப்பிட்டு விட்டது பற்றி வேதனைப் பட்டும் எழுதி இருந்தான். இருவருமே அவரைத் தங்களுடன் வந்திருக்க அழைத்திருந்தார்கள். இரண்டு கடிதங்களையும் எடுத்துக் கொண்டு அவர் தீர்த்தகிரியைப் பார்த்துவரக் கிளம்பினார்.

.....''பாருடா. தீர்த்தகிரி. ரெண்டு பேரும் எப்படிப் பொய் சொல்றாங்க பாரு. இன்னும் தங்கச்சி மககிட்டேருந்து பதில் வரலை. அவளும் ஏதாச்சும் பொய்க் காரணத்தை எழுதுவா.. என்ன சொல்றேன் உம் இப்ப நான் இன்னொரு வேடிக்கை காட்டப்போறேன் அவங்களுக்கு' என்று சிரித்து, பொன்னம்பலத்தைத் திகைப்புடன் பார்த்தார்.

''இப்ப ரெண்டு பேருமே என்னை வரச்சொல்றாங்க. தங்கச்சி மகளும் அப்படித்தான் எழுதப்போகுது. ஆனா நான் அவங்க கிட்டப் போகப் போறதில்லே. வயித்தியம்பார்த்துக்கிட்டதுல உடம்பு சரியாப்போச்சுன்னு சொல்லிடப்போறேன், ஆனா, உயிலை என் கதையில வர்ற மாதிரி மாத்தி எழுதி வச்சுடப் போறேன். உயில் அவங்க பேர்ல இருக்கிறதா ஒரு பிரமையிலேயே அவங்க எல்லாரும் வாழட்டும். ஒரு வேளை நான் உன்னைச் சாவிலேமுந்திக்கிட்டா நீயே எனக்குக் கொள்ளி வெச்சுடு, தீர்த்தகிரி. அதுக்கும் நான் தனியா ஒரு கடிதம் எழுதி உன்னண்டையே குடுத்துடறேன், என்ன சொல்றே''?

''நீ தான் பிடிவாதக்காரனாச்சே? எப்படி வேணுமோ செய்டா'', என்றார் தீர்த்தகிரி.

''ஒரு மனிதன் உதவி செய்ய ஆரம்பிச்சுட்டா அவன் தொடர்ந்து தங்களுக்கு உதவிக்கிட்டே இருக்கணும்னுல்ல மனுசங்க எதிர்பார்க்கிறாங்க? உதவியை நிறுத்தினாலும் இத்தினி நாளும் செய்த உதவியெல்லாம் மறந்தே இல்ல போயிடுது மனுசங்களுக்கு! சீ. தமிழ்ல ஒரு பழமொழி சொல்லுவாங்களே 'நிதமும் குடுக்கிற மூதேவி, ஒரு நாளும் குடுக்காத மகராசி' அப்படின்னு. அது தான் எனக்கு நெனப்பு வருது, தீர்த்தகிரி ஒரு வேளை நீ முந்திக்கிட்டா ,உன் மகன்கிட்ட எனக்குக் கொள்ளி வாங்கிக்கறேன்-உன் சம்மதத்தோட, சரியா?''

''நீ எது செய்தாலும் சரி தாண்டா ''என்றார் தீர்த்தகிரி.

# நூல் நயம்

### ஜகத்குரு சுவாமி சிவானந்தர் நூற்றாண்டு விழா மலர்

ஆசிரியர் : குலபதி டாக்டர் எஸ். பாலகிருஷ்ணஜோஷி
வெளியீடு: சிவானந்த தபோவனம் சிவானந்த நகர் அஞ்சல், மதுரை-652006.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தின் தென்கோடியில் பத்தமடையில் பிறந்து, எட்டயபுரத்தில் மக்கள் கவிஞர் பாரதியாருடன் பள்ளிப்படிப்பு பயின்று, பின்னர், திருச்சி கல்லூரியில் பட்டம் பயின்று தஞ்சையில் மருத்துவக் கல்வி பயின்று, மக்கள் சேவையில் இறைவனைக் கண்டு, இமயமலைச் சாரலில் தவவாழ்வு வாழ்ந்தவர் சுவாமி சிவானந்தர்; அவரது நினைவாக வெளிவந்திருக்கும் நூற்றாண்டு விழா சிறப்புமலர் படிப்போர் நெஞ்சில் அமைதியை, ஆனந்தத்தை, சேவை மனப்பான்மையை, உருவாக்க வல்லதாகத் திகழ்கிறது.

சேவை, அன்பு, கொடை, வாய்மை, தியானம், தெளிவு ஆகிய சீலங்களோடு நடமாடும் கோயிலாக வாழ்ந்த சுவாமி சிவானந்தரிடம் ஞானம் பயின்ற சீடர்கள், அவரது தெய்வநெறிக் கொள்கைகளில் இதயத்தைப் பறிகொடுத்த அன்பர்கள், ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ள கட்டுரைகள் கல்விமேதை டாக்டர் எஸ்.பாலகிருஷ்ணஜோஷி அவர்களால் தொகுக்கப்பெற்று, இம்மலரில் இடம் பெற்றுள்ளன. அவை படிக்கப்படிக்கத் தேனாக இனிக்கின்றன. அவை புலப்படுத்தும் தத்துவக் கருத்துக்கள் நெஞ்சிற்கு உரத்தையும், தெளிவையும் அளிக்கின்றன.

"இனிய வார்த்தைகளால் பிறருடைய இதயங்களைக் கவர்ந்து நில்லுங்கள்".
"பொய்மையிலிருந்து மெய்மைக்கு உங்கள் மனதை மாற்றுங்கள்"
"உங்களைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள்.
சமுதாயம் தானாகவே சீரடைந்து விடும்.
"அமைதி என்பது ஒரு தெய்வீகப் பண்பு"
"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு"

இப்படி மலரின் பக்கந்தோறும் சுவாமி சிவானந்தரின் அருள்மொழிகள் இடம் பெற்றுள்ளன.

சுவாமி சிவானந்தரின் திருவுருவைத் தாங்கிய வண்ண அட்டை மலருக்குத் தனி அழகைத் தருகிறது. இச்சிறப்பு மலர் நன்றின்பால் உய்க்கும் அறிவை நாடுவோர் அவசியம் படித்துப் பயன்பெறத் தக்கது.

வ.இராசமனோகரன்.

### காஞ்சி தந்த கலைஞர்கள்

ஆசிரியர்: டாக்டர் மு முத்துக் காளத்தி,
வெளியீடு: கண்ணம்மாள் பதிப்பகம்
விற்பனை உரிமை: பாரிநிலையம், 184, பிராட்வே, சென்னை-10 சென்னை-600108

விலை: ரூ. 15 பக்கம்: 128

காஞ்சிபுரத்தில் தோன்றித் தமிழகத்துக்கே பெருமை தேடித்தந்த அருங் கலைஞர் சிலரது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமான முறையில் இந்நூல் தெரிவிக்கிறது.

ஒவ்வொரு கலைஞரும் ஒவ்வொரு வகையில் புகழ் பெற்றிருந்தார்கள் என்ற செய்தியை நாம் அறிந்து கொள்ளும் வாய்ப்பை இந்நூல் வழங்குகிறது. விளம்பரம் பெற்றவர்களை மட்டுமே நூலாக வடித்துத் தரும் இந்த நாளில் அதிக விளம்பரம் இல்லாத கலைஞர்கள் பலரைக் குறித்தும் இந்நூலில் எடுத்துச் சொல்லப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. மறைந்த கலைஞர்கள் குறித்து மட்டுமின்றி, வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்கள் குறித்தும் இந்நூலில் எழுதப் பெற்றிருப்பது சிறப்புக்குரியதாகும். 39 கலைஞர்கள் இந்நூலில் இடம் பெற்றிருந்தாலும், பலநூறு கலைஞர்களைக் குறித்த செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. இனிய எளிய நடை நூலுக்கு அழகு சேர்க்கிறது.

### பக்தியும் பண்பாடும் உங்களுக்கு வேண்டுமா?

ஆசிரியர் : எஸ். குலசேகரன்
வெளியீடு : அமிழ்தம் பதிப்பகம் 15, முத்துப்பண்ணைத் தெரு வ.உ.சி. நகர், வேலூர்-1

விலை : ரூ. 9 பக்:96.

பக்தியும், பண்பாடும் யார்தான் வேண்டாம் என்பார்கள்? ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்கும் இவை, ஒரு மனிதன் நாணயமாக, நேர்மையாக விளங்கிட அடிகோலும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலில், பத்தொன்பது தலைப்புகளில் கட்டுரைகள் உள்ளன. ஒரு மனிதனுக்குப் பக்தி மட்டும் இருந்தால் போதாது, பண்பாடும் தேவை என்பதைப் பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் பாங்காய் விளக்கிக் கூறுகிறார் ஆசிரியர்.

வாழ்க்கையில் பக்தியுடன், மிகச் சிறந்த பண்பாட்டுணர்வு மேலிட நாம் என்ன செய்ய வேண்டும்? பொறாமையை அகற்றுதல் வேண்டும். பொறாமை நெஞ்சில் பொறுமை இருக்காது, பெருமைமிக்க செயல்களைச் செய்ய இயலாது என்பன போன்ற கருத்துக்கள் விரவியுள்ளன.

நம் மனத்தைப் பண்படுத்தும் நூல்.

### தியாகி சத்தியமூர்த்தியின் தீரச் செயல்கள்

ஆசிரியர் : பி. எல். ராஜேந்திரன்,
வெளியீடு : அல்லயன்ஸ் கம்பெனி, தபாற்பெட்டிஎண்: 617 மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை : ரூ. 7.50. பக்: 92.

தியாகி சத்தியமூர்த்தி நாட்டு விடுதலைக்காக ஆற்றிய அருந்தொண்டுகள் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. அவரது வாழ்க்கைக் குறிப்புகளுடன், சுதந்திரப் போராட்டக் காலத்தில் அவர் புரிந்த தீரச்செயல்கள் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

மிகச் சிறந்த தேசத் தலைவராக, தேச பக்தராக, மக்கள் தொண்டராக விளங்கிய தியாகி சத்தியமூர்த்தியின் வாழ்க்கையில் நடந்த சில முக்கிய நிகழ்ச்சிகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. மாணவர் படித்துப் பயன் பெற வேண்டிய நூல்.

—பி.வி.கிரி.

### இலெனினும் அண்ணாவும்

ஆசிரியர் : ஏ. எஸ். வேணு,

வெளியீடு: ஜஸ்டிஸ் பப்ளிகேஷன்ஸ், 68, ஆர்க்காடு சாலை, சென்னை-600 024.

விலை ரூ. 15. பக்: 152.

ஆதிக்கச் சக்திகளையும் மக்களைச் சுரண்டிச் சுகவாழ்வு வாழும் சக்திகளையும் எதிர்த்து, உருசிய மக்களைப் புரட்சிப் பாதையில் வழி நடத்தி அவர்களை இன்புறச் செய்தவர் இலெனின்.

மக்களோடு, பழகி, மக்களின் நிலையை அறிந்து அவர்களின் நல்வாழ்விற்காக உழைத்து நல்வழிக் காட்டிச் சென்றவர் பேரறிஞர் அண்ணா. இந்த இருபெரும் மக்கள் தலைவர்களின் கொள்கைகள், சீரிய செயல்கள் இவற்றை ஒப்புநோக்கி இந்நூலில் திறனாய்வு செய்துள்ளார் ஆசிரியர்.

தாய்மொழிப்பற்று, கலை உலகத் தொடர்பு, தொழிலாளர் நலம், சமுதாயச் சீர்திருத்தம், சுரண்டல் ஒழிப்பு இப்படி பல அரிய கொள்கைகளில் அவர்கள் இருவரும் கொண்டிருந்த ஈடுபாடு வெகு நுணுக்கமாக ஆராயப்பட்டு இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களை நம் நாட்டு இலெனினாக வரிக்கு வரி படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

பாராட்டத்தக்க நல்லதொரு படைப்பு இது.

### மலப்பூ சிந்திய மகரந்தங்கள்

ஆசிரியர்: கவிஞர் செ. கதிரவன்
வெளியீடு: நாகம்மை பதிப்பகம்,
9, பூம்புகார் நகர்,
கொளத்தூர் அஞ்சல்,
சென்னை-600099.

பக்கம்: 72 விலை: ரூ. 9

சமுதாய சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்ட இசைப்பாடல்களின் தொகுதி இது. 71 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர் சாதிக் கொடுமையைச் சாடுகிறார். சிறு குடும்ப நெறியைவலியுறுத்துகிறார் இப்படி பிரச்னைகளை மட்டுமின்றி பிரச்னைகளுக்கான தீர்வுகளையும் எளிமையான வகையில் பல சந்தங்களில் எழுதியுள்ளார்.

தமிழ் மணமும், இனிய இசையும் கலந்த இப்படைப்புக்குப் பொருத்தமான தலைப்பு சூட்டப்பட்டுள்ளது.

—வி. இராவணன்

### தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்

ஆசிரியர்: ஜவஹர்லால் நேரு
தமிழாக்கம்: கே. ஆர். வாசுதேவன்
வெளியீடு: பூரம் பப்ளிகேஷன்ஸ்
59, ராஜு நாயக்கர் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை-33.

விலை: 15 பக்: 114.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், 1928-ஆம் ஆண்டில் தமது மகள், பத்து வயதுள்ள இந்திராவுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு இந்நூல்.

இந்நூலின் தமிழாக்கம் சரளமாக அமைந்துள்ளது. தேவையான வரிவடிவ ஓவியங்கள் நூலில் இடம் பெற்றிருப்பது, நூலின் தரத்தை உயர்த்துகின்றது.

மாணவச் செல்வங்கள் மட்டுமின்றி அவர்களது பெற்றோர்களும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அளவுக்குத் தகவல் நிறைந்த நூல் இது.

—எஸ். எஸ். சுந்தரம்.

### எதிர்கால ஆற்றல் வாயில்கள்

ஆசிரியர்: டாக்டர்
ஏ. ஆர். ராமராஜு
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்.
41, பி. சிட்கோ
எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை: ரூ. 17. பக்: 199.

உலகில் பயன்படுத்தப்பட்டுவரும் 'ஆற்றலின்' தேவை ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது. பழைய பாதையிலேயே நடைபோடுவது நிலைமையைச் சமாளிக்கப் பயன்படாது; அதனால் 'ஆற்றல்' அளிக்கும் புதிய சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இக்கருத்தை இந்நூல் வலியுறுத்துகின்றது.

சூரியன், நிலவு, காற்று, நீர், பூமி, கடல் நீர் போன்றவற்றிலிருந்து 'ஆற்றலை' உருவாக்குவதற்கு அறிவுலகம் அறிந்துகொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் மேலும் பல சாதனங்களைப் பயன்படுத்தி 'ஆற்றலை' உருவாக்குவதற்குரிய வழி வகைகளை இந்நூல் எடுத்தியம்புகிறது. கடினமான அறிவியல் செய்திகள், எளிமையான நடையில் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.




### கர்மம் அது ஒரு தர்மம்

ஆசிரியர்: பெரியவர் இராமமூர்த்தி
வெளியீடு: கலைஞன் பதிப்பகம்
10, கண்ணதாசன்
சாலை, தியாகராயநகர்,
சென்னை-600 017.

விலை: ரூ. 13.50. பக்: 172

எதையும் ஒரு தத்துவமாகச் சொல்வதைவிட அனுபவ நிகழ்ச்சிகளுடன் சொன்னால், சொல்ல வந்த தத்துவத்தின் பெருமை எல்லாருக்கும் எளிதில் புலப்படும். இந்நூலில் பல அனுபவ நிகழ்ச்சிகளைக் கொண்டு பல தத்துவங்களைச் சுவையுற வழங்கியிருக்கிறார் நூலாசிரியர் பெரியவர் இராமமூர்த்தி.

ஒரு குரு நாதரின் வழிகாட்டுதல் ஒரு மனிதனுக்கு மிகமிக அவசியம் என்பது இந்நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சந்தேகமும் நம்பிக்கையும் மாறி மாறி மனித வாழ்க்கையில் தோன்றுவதைச் சுட்டிக் காட்டி, இவற்றைச் சரிப்படுத்த, குருநாதரின் வழிகாட்டல் தேவை என்பதைத் தெளிவாக்குகிறார் நூலாசிரியர்.

'ஒரே தாத்பர்யம் ஒரே நேரத்தில் பலருடைய உள்ளத்தில் பல விதமான பரிமாற்றங்களைப் பக்குவமாக ஏற்படுத்த முடியும்' என்ற தத்துவத்தை எடுத்துச் சொல்லி, ஆடு ஒன்றைப் பார்த்த மூன்று மனிதர்களுக்குத் தோன்றுகின்ற வெவ்வேறு வகையான உணர்வுகளை எடுத்துக்காட்டாகத் தெரிவித்திருப்பது நயமாக இருக்கிறது.

தியானம், ஞானம், மோனம்—ஆகியவற்றின் விளக்கங்கள் அருமை. கர்மம், கடமை, தர்மம்-ஆகியவை குறித்து நூலாசிரியர் அளித்துள்ள விளக்கங்கள் அற்புதம்; சான்றுக்கு ஒன்று.

''அன்பில்லாத கர்மம்தான் கடமையாகிறது.

''அன்பு நிறைந்த கர்மங்கள் தர்மங்களாகின்றன.

''சலித்துக்கொண்டே செய்வது தான் கர்மம்.

எந்திர மயமாகச் செய்வதுதான் கடமை.

அன்பு மயமாகச் செய்வதுதான் தர்மம்.''

வாசகர்களுடன் நேரடியாகப் பேசும் பாணியில் நூல் உருவாக்கப்பட்டிருப்பதால் வாசகர்களைநூலாசிரியர் எளிதில் கவர்ந்துவிடுகிறார். பல தத்துவங்கள் குட்டிக்கதைகள் வடிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதனால் அவை படிப்பவர் மனத்தில் எளிதில் பதிந்துவிடுகின்றன. இனிய விறுவிறுப்பான நடை, எதுகை, மோனைகளின் குவியல் இந்நூலை அணி செய்கின்றன

—தமிழ்ப்பித்தன்.

# முதல் தார்ச் சாலை!

முதன் முதலில் 1838ஆம் ஆண்டில்தான் பிரான்சு தேசத்தின் தலைநகரான பாரிஸ் பட்டணத்தில் சில நடைபாதைகளுக்குத் தார் போடப்பட்டது. அக்காலத்தில் பயன்படுத்தியது இயற்கையில் பாறை உருவத்தில் கிடைக்கும் ஆஸ்பாஸ்ட் என்னும் பெயருடைய தார் வகையினைச் சேர்ந்த பொருள் ஆகும். இலண்டன் மாநகரில் 1869ஆம் ஆண்டில் ஆஸ்பாஸ்ட் சாலை போடத் தொடங்கினார்கள். அதற்கப் புறம் ஏழு ஆண்டுகள் கழித்து, ஜெர்மனியில் தெருவிற்கு ஆஸ்பால்ட் பயன்படுத்தப்பட்டது. 1876இல் பெர்லின் நகரத்தில் ஆஸ்பால்ட் போடப்பட்ட சாலை தோன்றியது.





# சோவியத் நாட்டில் பத்திரிகைகள்

தற்போது சோவியத் யூனியனில் 8,000க்கு மேற்பட்ட செய்திப் பத்திரிகைகளும் 5,000க்கு மேற்பட்ட இதழ்களும் வெளியிடப்படுகின்றன. ஒரு முறை அச்சாகும் எல்லாச் செய்திப் பத்திரிகைகளின் மொத்தப் பதிப்பின் எண்ணிக்கை 19 கோடி பிரதிகளாகும். ஆண்டொன்றுக்கு 430 கோடி பிரதிகளாகும். இதழ்கள் ஆண்டுக்கு 350 கோடி பிரதிகளுக்கு மேல் விற்பனையாகின்றன.

தொழிற்சங்கச் செய்திப்பத்திரிகையான 'துருத்' பத்திரிகைதான் மிக அதிகமாக விற்பனையாகிறது. அதன் பிரதிகள் 1,88,45,000ஆகும். கம்யூனிஸ்டுக் கட்சியின் செய்திப் பத்திரிகையான 'பிராவ்தா' 1.1. கோடி பிரதிகளுக்கு மேல் அச்சாகிறது. இளைஞர் செய்திப் பத்திரிகையான 'காம்சொமால்ஸ்கயா 'பிராவ்தா' 1.7 கோடி பிரதிகள்; சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவினால் வெளியிடப்படும் செய்திப் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா' 80 லட்சம் பிரதிகள்; பள்ளிக் குழந்தைகளுக்கான செய்திப் பத்திரிகையான 'பயானீர்ஸ்கயா பிராவ்தா' 1.3 கோடி பிரதிகளுக்கு மேல்.

**ஆதாரம்: சோவியத் யூனியன் 100 வினாவும் விடையும்.**



# கணிப் பொறி

விசைப்பொறி நாளின்
வேட்கை வெளியீடுகள்
துல்லிய எண்களின்
மின்னியல் நாட்டியம்
புள்ளி பிழைகளின்
சேமிப்புக் கிடங்கு
கேள்விக் குறிகளை
வியப்புக் குறிகளாய்
மாற்றத் தெரிந்த
கணக்கியல் ஆசான்
பொருளாதாரப் பார்வை
பொலியுமிங் நாளில்
எண்ணிப் பெருக்க
எடுக்கின்ற கோலம்
எண்ணப் பெருக்கை
ஈர்க்கின்ற புதுமனிதன்!

—மாணிக்கம்




# கடல் தரும் புரதம்!



உலகிற்குப் புரதச்சத்து அளிப்பதில் முக்கியமாக உள்ளது கடல். பல நூற்றாண்டுகளாக, கடல் புரத உணவு தரும் மாபெரும் மூலமாக விளங்கி வருகிறது. மீன் பிடித்து உண்ணுவதால் உலகிற்கு வேண்டிய புரதத்தில் நூற்றுக்கு மூன்று விழுக்காடு கிடைத்து விடுகிறது. கோழி முதலியவற்றுக்கு மீனிலிருந்து பெறப்படும் மீன் உணவு அளிப்பதால் அவற்றுக்கு நல்ல ஊட்டச் சத்து கிடைக்கிறது. கோழி போன்ற பிராணிகளுக்கு வேண்டிய புரதச்சத்தில் உலக அளவில் நூற்றுக்குப் பத்து விழுக்காடு கடலிலிருந்து கிடைப்பதாகும்.

கடல் நீரின் குணங்கள் பற்றியும், அந்நீரில் என்னென்ன இரசாயனப் பொருள்கள் அடங்கியுள்ளன என்பதுபற்றியும் ஆராய்வது இயைபியல் கடலியல் (Chemical Oceanography) எனப்படும்.

# தெரிந்து கொள்ளுங்கள்

ஒரு கொள்கலத்தின் வெப்பம், கொள்கலம் நல்ல கடத்தியாக இருந்தால், வெப்பம் எம்முறையில் கடத்தப்படுகிறது ?
— கதிர் வீச்சு முறையில்.

எந்த வகைக் கோழிகளில் அதிக அளவு இறைச்சி கிடைக்கிறது ?
—நியூ ஹாம்ஷயர், வெள்ளை கார்னிவ், வெள்ளை ராக்.

பட்டுநூல் எடுப்பவர்கள் எப்பருவத்தில் பட்டுப்பூச்சிப் புழுக்களைக் கொண்டு பட்டுநூல் எடுக்கிறார்கள் ?
—கூட்டுப்புழுப் பருவத்தில்.

நன்னாரியிலிருந்து தயாரித்த மருந்து எதற்குப் பயன்படுகிறது?
— இரத்த சுத்திக்கு.

மனிதனுக்கு நன்மை பயக்கும் பூச்சிகள் யாவை?
—பட்டுப்பூச்சிகள், தேனீக்கள், வண்ணத்துப் பூச்சிகள், அரக்குப் பூச்சிகள்.

மேல்நாட்டில் ஒரு பறவை, தன் முட்டையைக் குயிலைப்போல் வேறு பறவைகளின் கூட்டில் இடுகிறது. அது எந்தப் பறவை?
— குக்கூ பறவை.

தமிழ்நாட்டில் நெல்விதைப் பண்ணைகள் உள்ள மூன்று இடங்களைக் கூறுக:
— கோயம்புத்தூர், ஆடுதுறை, அம்பாசமுத்திரம்.

பிம்பங்களின் இரு வகைகள் யாவை ?
— மெய்பிம்பம், மாயபிம்பம்.

மெய்பிம்பம் என்றால் என்ன?
— திரையில் பிடிக்கக்கூடிய பிம்பம்.

உலகிலேயே மிகப் பெரிய ஸ்டேடியம் எது?
— பிரேக் நகரிலுள்ள ஸ்டாக் ஹோவ் ஸ்டேடியம். 2,40,000 பேர் அமர்ந்து காணக்கூடிய வசதியுடைய தாகும்.

உலகில் நீளமான ஆறு எது?
— மிஸிஸிபி.

அணு அமைப்பைப் பற்றி உலகுக்குச் சரியானபடி எடுத்துக் கூறிய அறிவியல் மேதை யார்?
— ரூதர்போர்டு.

இலைகள் பச்சையாக இருப்பதன் காரணம் என்ன?
— குளோரோபில்இருப்பதால்.

மிகப்பெரிய பாலூட்டி எது?
— திமிங்கலம்.

வளநிலத் தாவரங்கள் என்றால் என்ன?
— மா, பலா, தென்னை முதலிய தோட்டங்களில் காணப்படும் தாவரங்கள் ஆகும்.

இதயத்துடிப்பை அறிய இந்திய விஞ்ஞானிகள் பயன்படுத்துவது எது?
— ஸ்டெத்தாஸ்கோப்.

உலகில் மிகப்பெரிய பாலைவனம் எது?
— சகாரா.

பெனிசிலின் என்ற மருந்து எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

— பெனிசிலியம் என்ற பூஞ்சானிலிருந்து.

மனித உடலிலுள்ள மிகப் பெரிய சுரப்பி எது?
— கல்லீரல்.

நுரையீரலைச் சுற்றியுள்ள உறை எது?
— புளூரா.

உலகில் மிக அழகிய 2-வது கடற்கரை எது?
— சென்னையிலுள்ள மெரீனா கடற்கரை.

கண்ணாடியை வெட்ட எதைப் பயன்படுத்துகிறார்கள்?
—வைரத்தை.

ஒரு நீருள்ள வாளியைச் செங்குத்து நிலையில் வட்டமாகச் சுற்றினால் நீர் கீழே விழுவதில்லை ஏன்?
—மையநோக்கு விசையினால்.

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலுள்ள தூரம் என்ன ?
—சுமார் 3,84,500 கிலோ மீட்டர்.

நத்தையின் மேல் ஓட்டின் பெயர் என்ன?
—ஆப்பர்குலாம்.

உள் எரி எஞ்சினுக்கு எடுத்துக் காட்டு கொடு.
—பெட்ரோல் எஞ்சின், டீசல் எஞ்சின்.

டீசல் எஞ்சினை உருவாக்கியவர் யார் ?
—ருடால்ப் டீசல்.

எளிதில் மின்கடத்திகள் மூன்று கூறுக
— தாமிரம், வெள்ளி அலுமினியம்.

பனிக்கட்டியின் குறைந்த வெப்ப நிலை என்ன?
—0 டிகிரி செ.

குருத்து ஒட்டுதல் முறையில் விளைவிக்கப்படும் தாவரம் ஒன்றின் பெயரைக் கூறு.
— ஆரஞ்சு, ரோஜா போன்றவை.

பாலில் அடங்கியுள்ள அமிலத்தின் பெயர் என்ன?
— லாக்டிக் அமிலம்.

முட்டையை அடை காக்கும் ஆண்பறவை எது?
— நெருப்புக்கோழி.

## நல்வழி

—கோ. ஜெயச்சந்திரன்



தருமம் நிறையச் செய்தே — வறியோர்
தாழ்நிலை ஓட்ட வேண்டும் !
கருத்துடன் பணிகள் ஆற்றி — வெற்றி
கனிவாய் நாட்ட வேண்டும் !

அருமைக் கல்வி ஆழ்ந்து கற்றே
ஆற்றல் பெருக்க வேண்டும் !
அரும்பும் தீய ஆசை மனத்துள்
அறவே வெறுக்க வேண்டும் !

இடரோ டின்னல் வரினும் — கொள்கை
என்றும் காக்க வேண்டும் !
மடமை ஒழித்தே பகுத்தறி வென்னும்
பாதை நாடிட வேண்டும் !



# மக்கள் நலம் பேணும் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை

## சிறப்பு அம்சங்கள்

இந்திய மக்களின் நலிந்த பிரிவினர் ஏழை எளியவர்கள், விவசாயிகள், விவசாயக் கூலிகள், நிலைத்த வருமானமற்றோர் - இவர்களுடைய நலத்தையே இலட்சியமாய்க் கொண்ட 1988-89-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. என். டி. திவாரி அவர்கள் 29-2-'88 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்கள். மக்கள் நலம் பேணும் இந்த மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் ஏழை எளியவர்க்கு அறிவிக்கப்பட்ட சலுகைகள் ஏராளம். கிராமப்புறத்து இந்தியாவில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வடிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையின் சிறப்பு அம்சங்கள் வருமாறு :—

வறுமை ஒழிப்புக்கு முதலிடம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்துக்கு ரூ.346.22 கோடி மானிய உதவி ஒதுக்கிடு. 32 இலட்சம் ஏழைகளுக்கு மானிய உதவி-நிதிநிறுவனங்களின் கடன்.

வறட்சியால் வாடும் விவசாயிகளுக்கு வாழ்வளிக்கச் சலுகைகள் :

கூடுதல் விவசாயக் கடன்கள்,
குறைந்த வட்டி,
உரவிலையில் தள்ளுபடி,
தேசிய விவசாயக் கடன் நிவாரண நிதி.

ஏழை விவசாயிகள் பம்புசெட் அமைத்துக்கொள்ள வறட்சிப் பகுதிகளில் 'ஜலதாரா' திட்டம்.

கிராமப்புற வீட்டுவசதிக்காக ரூ. 100 கோடியில் தனி நிதி அமைப்பு.

சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுக்குச் சுலப நிபந்தனைகளில் வீட்டு வசதித் திட்டம்.

நிலமற்றோருக்குக் குறைந்தபட்சம் 100 நாள் வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் 730 கோடி ரூபாய்த் திட்டம்.

ஏழைகள், நிலமற்ற தொழிலாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கு நெருப்பு இன்சூரன்ஸ் பாதுகாப்பு. முழு பிரிமியத் தொகையையும் மத்திய அரசே செலுத்தும்.

நிலமற்ற தொழிலாளர், ரிக்ஷா இழுப்போர், கைத்தறித் தொழிலாளர் ஆகியோருக்கு ரூபாய் 100 கோடியில் தனிப்பெரும் சமூகப் பாதுகாப்பு நிதி.

ஏப்ரல் மாதம் முதல், ஆண்டுக்கு 30 முதல் 40 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் குழு இன்சூரன்ஸ் பாதுகாப்பு.

கிராம வீடுகளுக்கு இலவச மின் இணைப்பளிக்கும் குடிர்ஜோதித் திட்டம், 1988-89-இல் மட்டும் பயன் பெறுபவை 5 இலட்சம் வீடுகள்.

ஷெட்யூல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோருக்குத் தனியாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் நிதி மேம்பாட்டுத் தேசிய கார்ப்பரேசன்.

பழங்குடியினர் நலனுக்காகத் துணைத் திட்டத்துக்கென நிதியாண்டில் ரூ.185 கோடி சிறப்பு மத்திய நிதி உதவி.

ஷெட்யூல் வகுப்பினருக்குப் பொருளாதார ஆற்றலும், வேலை வாய்ப்பும் வழங்க நிதியாண்டில் 180 கோடி ரூபாய் செலவில் சிறப்புத் திட்டங்கள்.



ரூ. 250 கோடி ஈவு முலதனத்தில் இந்தியச் சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம்,

மின் அணுத்துறைக்குச் சிறப்பான ஊக்கமளிக்கப் பல்வேறு சலுகைகள்.

மின்சாரப் பல்புகள், பொம்மைகள், எவர்சில்வர் சாமான்கள், வீட்டுக்குப் பயன்படும் மின்சாரச் சாமான்கள், சுவர்க்கடிகாரங்கள், மேஜை சாமான்கள், மருந்துகள், கிராமக் கூட்டுறவுச் சலவைச் சோப்பு, தேயிலை-இவற்றின் மீது ஆயத்தீர்வை பெரும் அளவில் குறைப்பு. சிலவற்றுக்கு ஆயத்தீர்வை முழுதும் ரத்து. ஜவுளித் தொழிலுக்குச் சலுகைகள், ஜனதா துணிக்குக் கூடுதல் தள்ளுபடி, கிராமப் புறங்களில் சேமிப்பை அதிகரிக்க 'கிசான் விகாஸ் பத்திரம்' எனும் புதிய சிறு சேமிப்புத் திட்டம்.

சிமெண்ட் உட்பட கட்டடப் பொருள் மீது வரிக் குறைப்பு.

உழைக்கும் பத்திரிகையாளர்க்கு ஒய்வூதியத் திட்டம்.

கல்வி வளர்ச்சிக்கு ரூ. 1,550 கோடி.

நிர்வாகத்தில் தொழிலாளர் பங்குபெற கம்பெனிகளின் பங்குகளை வாங்க உதவி.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், இந்தியாவில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு சலுகைகள்.





# நமது சோஷலிசம்

நமது சோஷலிசம் முற்றிலும் நம்முடையது. அது, அயல் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கு நடப்பட்ட செடியல்ல; இன்னொருவரின் தத்துவப் பட்டறையில் வார்த்து வடிவமைக்கப்பட்டதல்ல; நமது வரலாறு, நமது பண்பாடு, நமது எதார்த்தங்கள் - இவற்றில் வேர்விட்டு நிற்பது நமது சோஷலிசம். தரித்திர நாராயணனுக்காக உழைக்கவும், ஒவ்வொரு விழியிலிருந்தும் கண்ணீரைத் துடைக்கவும் காந்தியடிகள் நமக்குக் கற்றுக் கொடுத்தார். அதுவே நமது சோஷலிசத்துக்கு உள்ளார்ந்த உந்தூக்கம் ஆகிறது.

—பாரதப் பிரதமர்

**திரு ராஜீவ் காந்தி**

மக்கள் நலம் பேணும்
மத்திய நிதிநிலை அறிக்கை

# விவசாயிகளுக்குச் சலுகைகள்

உழவர் பெருமக்களுக்கு உயரிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. வறட்சியால் வாடும் வேளாண் குடியினருக்கு இந்தச் சலுகைகள் வரப்பிரசாதமாக அமையும். பயிர்க்கடன் வட்டி குறைப்பு, கூடுதல் கடனுதவி, உர விலையில் தள்ளுபடி, விவசாயிகளுக்கு நிவாரணமளிக்க தேசிய விவசாயக் கடன் நிவாரணநிதி ஆகிய சலுகைகளால் விவசாயப் பெருங்குடிமக்கள் பெரிதும் பயனடைவர். இதனால் விவசாயத் துறையிலான இலக்குகளை இந்தியா அடையும்.

**பயிர்க்கடன் வட்டி குறைப்பு**

ரூ. 7,500 வரையிலானபயிர்க்கடன்களுக்கு வட்டி விகிதம் 11.5 சதம் முதல் 12.5 சதம் வரை இருந்தது. தற்போது இது 10 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது 1.5 முதல் 2.5 சதம் வரை வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

ரூ. 7,500-க்கு மேல் ரூ. 15 ஆயிரம் வரையிலான பயிர்க்கடனுக்கு இதுவரை 12.5 சதம் முதல் 14 சதம் வரை இருந்தது தற்போது 11.5 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**கூடுதல் கடனுதவி**

1. அரசுத்துறை வங்கிகள், விவசாயிகளுக்கு வழங்கும் நேரடி நிதியுதவி, அவற்றின் மொத்தக் கடன்களில் 17 சதவிகிதமாயிருக்கும்.

2. 1988-89-ஆம் ஆண்டில் அளிக்கப்படுகிற கடனுதவி முன்னைவிட 3,000 கோடி ரூபாய் கூடுதலாக இருக்கும்.

வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளதால் கூட்டுறவு வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், வர்த்தக வங்கிகள் ஆகியவற்றிலிருந்து கடன் பெறுகிற பல கோடி விவசாயிகள் பலனடைவார்கள். வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாய சமூகத்தினருக்குத் தேவையான நிவாரணத்தை இது அளிக்கும்.

**உரவிலையில் தள்ளுபடி**

வரும் காரீஃப் ரபி பருவங்களில் இரசாயன உரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் 7.5 சதவிகிதம் தள்ளுபடி வழங்கவேண்டுமென்று அரசுத் துறையிலும், தனியார் துறையிலுமுள்ள உரக் கம்பெனிகளுக்கு அரசு கோரிக்கை விடுத்துள்ளது. இதனால், ஒரு மூட்டை யூரியா உரத்தின் விலையில் ரூ. 8.80 குறையும்.

குறிப்பிட்ட மாநில நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் முக்கியமான பூச்சிக்கொல்லி மருந்துகளை இலவசமாக இறக்குமதி செய்து கொள்ளலாம்.

**தேசிய விவசாயக் கடன் உதவி நிதி**

அடிப்படையில் விவசாயிகளுக்குத் திட்டமிட்ட நிவாரணமளிக்க தேசிய விவசாயக்கடன நிவாரணநிதி ஒன்றை அரசு அமைக்கிறது.

வறட்சிப் பகுதிகளில் மிகச்சிறிய விவசாயிக்கு, மிகக் குறைந்த கட்டணங்களில் பாசனங்களுக்கான பம்ப்செட் வழங்குவதற்காக 'ஜலதாரா' என்னும் புதிய திட்டம் தொடங்கப்படும்.

கிராமப்புறங்களிலும், நகர்களை ஒட்டிய பகுதிகளிலும் உள்ள 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வங்கிக் கிளைகள் ஒவ்வொன்றுக்கும் 15 அல்லது 20 கிராமங்களைக் கொண்ட அலுவல் பரப்பு ஒதுக்கப்படும். இந்தப் பகுதியின் கடன் தேவைகளைச் சமாளிக்கும் பொறுப்பு அந்தந்தக் கிளைகளுக்கு வழங்கப்படும்.

**கிராமப்புற வீட்டுவசதி**

கிராமப்புற வீட்டு வசதிக்கென தேசிய வீட்டுவசதி வங்கியில் ரூ. 100 கோடிக்கணக்கான தனிநிதி அமைப்பு உருவாக்கப்படும். வெகு விரைவில் இந்த வங்கி செயல்படத் தொடங்கு ). இந்த வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கியும் வேறு சில நிதி நிறுவனங்களும் கூடுதலாக ரூ. 100 கோடி நிதி வழங்கும். இத்தொகை முழுவதும் கிராமப்புற வீட்டு வசதிக்காகவும், தேவைப்பட்டால் கிராமப்புற வீட்டு வசதி சேமிப்பு, கடன் வழங்கும் நிறுவனங்களை அமைப்பதற்காகப் பயன்படுத்தப்படும். இனிமேல் நிலவள வங்கிகள் விவசாயிகளின் வீட்டுவசதித் தேவைகளையும் கவனித்துக் கொள்ளும்.

மாதம் ரூ. 700 வரை சம்பாதிக்கும் சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்காக, சுலபமான நிபந்தனைகளில் வீட்டுவசதிக்கு உதவும் புதிய திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்படுகிறது. வட்டி ஏழு சதவிகிதம், கடனை 22 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தினால் போதுமானது. இந்தத் திட்டத்தின்கீழ் பழைய வீடுகளைப் புதுப்பிக்கவும் கடன் வழங்கப்படும்.

கிராம வீடுகளில் சுற்றுப்புறப் பராமரிப்புக்கும், வடிகால் வசதிக்கும், வீட்டுவசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கார்ப்பரேசன் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்குகிறது. வர்த்தக வங்கிகள் வழங்கும் கடன்தொகை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி வாக்கில் ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தப்படும்.

குறைந்த செலவில் வீடுகட்டும் பொருள்களை வாங்கவும், கட்டுமான உத்திகளை எளிதாகப் பெறவும், நாடெங்கும் நிர்மாண் அல்லது நிர்மிதி கேந்திரங்களின் தேசிய இணைப்பு ஒன்று அமைக்கப்படும். 1988-89இல் இத்தகைய 100 நிலையங்கள் அமைக்கப்படும்.



# அரசுத் துறைகள் சீர்பெற ஆளுநரின் ஆலோசகர் ஆய்வு

## தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் பணிகள்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1988-89 கல்வியாண்டில் தமிழகம்முழுவதற்கும் தேவையான 466 இலட்சம் பாடநூல்களை அச்சிட்டு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தமிழ்வழி, ஆங்கில வழி மற்றும் சிறுபான்மை மொழிவழி நூல்களை ஒன்று முதல் 12-ஆம் வகுப்பு வரை அச்சிட்டு வழங்க உள்ளது. தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய சிறுபான்மை மொழி வழியின் கீழ் 140 தலைப்புகளிலும், தமிழ் மற்றும் ஆங்கில வழிகளில் 153 தலைப்புகளிலும் பாடநூல்கள் அச்சிடப்படுகின்றன.

புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் இவ்வாண்டு, முதல் கட்டமாக 1, 3, 6 வகுப்புகளுக்குப் புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. 20 தலைப்புகள் கொண்ட 224 இலட்சம் புதிய நூல்கள் அச்சிடப்பட்டுவருகின்றன. இவற்றுள் 1 & 3 வகுப்புகளுக்கான அனைத்துப் பாட நூல்களும் பல வண்ணத்தில் அச்சிடப்படுகின்றன. இதர வகுப்புகளுக்கான பாடநூல்களின் மறுபதிப்புப் பணிகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன. 170 அச்சகத்தினர் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். அச்சுப்பணியின் முன்னேற்றம் வாரந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு, அச்சகத்தினரின் பிரச்சனைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன. அச்சிட்ட நூல்கள் பகுதி பகுதியாகத் தற்பொழுது தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்குகளுக்கு வரத் தொடங்கியுள்ளன.

ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன், இ.ஆ.ப.அவர்கள் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் பணிகளை 14-3-88 அன்று ஆய்வு செய்தார். அச்சுப்பணியின் முன்னேற்றத்தை விரிவாக ஆய்வு செய்து, இவை மேலும் விரைவுபடுத்தப்பட வேண்டுமென்றும், பணி முன்னேற்றம் அடிக்கடி கண்காணிக்கப்பட வேண்டுமென்றும், தாமதம் செய்யும் அச்சகத்தினர் மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். மாநிலத்தின் பாட நூல்களின் மொத்தத் தேவையும் 15-5-88-க்கு முன்னர் முழுமையாக அச்சிட்டு முடிக்கப்படவேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளார்.

சென்ற ஆண்டு 157 மையங்கள் மூலமாக மட்டுமே இலவசப் பாட நூல்கள் விநியோகம் செய்யப்பட்டன. விநியோகத்திலுள்ள இடர்ப்பாடுகளை நீக்கவும், தாமதங்களைத் தவிர்க்கவும், உரிய மாணவ மாணவியர் பயன்பெறும் வண்ணம் இவ்வாண்டு இலவசப் பாடநூல் விநியோகம் 389 மையங்களில் செய்யப்படவேண்டுமென்று ஆலோசகர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்கிணங்க இலவசப் பாடநூல் விநியோகப் பணி 2-5-1988 முதல் தொடங்கும். இவ்வாண்டு ஒவ்வொரு பள்ளித் துணை ஆய்வாளரின் சரகமும் ஒரு விநியோக மையமாக நிர்ணயிக்கப்படும்.

இலவசப் பாடநூல் விநியோகம் சீரான முறையில் நடைபெற ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கல்வித்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு அமைத்து இப்பணியினை மேற்பார்வையிட வேண்டுமென்றும், ஒவ்வொரு பள்ளியிலும் தேவையான இலவசப் பாட நூல்கள் கிடைக்கப் பெற்றமைக்கான ஒப்புதலையும், அவை அனைத்தும் பயனடையும் மாணவ மாணவியருக்கு வழங்கப் பட்டமைக்கான சான்றிதழையும், ஒவ்வொரு பள்ளியின் தலைமையாசிரியரும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் ஆலோசகர் அறிவுறுத்தினார்.

இவை தவிர, பொது விற்பனைக்கான பாடநூல்கள் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும், பள்ளி மாணவர் கூட்டுறவு அமைப்புகளிலும், மே திங்கள் இறுதியிலேயே கிடைக்குமாறு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்றும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தில் சலுகை விலைக் குறிப்பேடுகளும் மேற்குறிப்பிட்டகூட்டுறவு அமைப்புகளில் கிடைக்கும்படிசெய்யவேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கினார்கள்.

நமது மாநிலத்திலுள்ள பள்ளி மாணவ மாணவியர்களுக்கு அனைத்துப்பாட நூல்களும் பள்ளிகள் திறக்கும் நாளிலேயே கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டுமென்றும் ஆளுநரின் ஆலோசகர் அறிவுறுத்தினார்.

## மக்கள் நல்வாழ்வுத் துறையின் பணிகள்

மக்கள் நல்வாழ்வுத் துறையில் உள்ள எல்லா துறைத் தலைவர்களுடனும் ஆளுநர் அவர்களுடைய ஆலோசகர் திரு. அ. பத்மநாபன் இ.ஆ.ப. அவர்கள் 16-3-88 அன்று ஆய்வுக்கூட்டம் ஒன்றை நடத்தினார். மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணையர் மற்றும் செயலாளர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் குடும்ப நல்வாழ்வுத் துறை இயக்குநர், ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநர், சுகாதாரம்மற்றும் தடுப்புமருத்துவுத் துறை இயக்குநர் (பொறுப்பு) குடும்ப நல்வாழ்வுத் துறை இயக்குநர், மாநில மருந்துகள் கட்டுப்பாட்டு அலுவலர், மாநிலசுகாதாரத் துறை ஊர்திகள் அமைப்பு இயக்குநர் ஆகியோர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கற்பிக்கும் மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், தாலுக்கா தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருந்

தகங்கள் அனைத்தும் செயல்படுவதில் முன்னேற்றம் ஏற்படச்செய்ய வேண்டியதின் அவசியத்தை ஆலோசகர் வலியுறுத்தினார். பொதுமக்களுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மருத்துவக் கல்வி இயக்குநரும் மருத்துவம் மற்றும் குடும்ப நலத் துறை இயக்குநரும் மேற்குறிப்பிட்ட மருத்துவ மனைகளுக்குத் தொடர்ந்து சென்று ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என விருப்பம் தெரிவித்தார்.

பல மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ள கருவிகள் நல்லமுறையில் செயல்படுகின்றனவா என்பதைக் கண்டறிய ஒவ்வொரு ஆண்டும ஏப்ரல் மாதத்தில் கருவிகள் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு கருவியும் எவ்வாறு இயங்குகிறது என்பதற்கான தனித்தனி அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். உள் கண்காணிப்பு, குறிப்பாக பல்வேறு கண்காணிப்புப் பணி அலுவலர்கள் இக்கருவிகளைக் கண்காணிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

ஓர் ஆய்வுமுறைப்படிவம் ஏற்படுத்தவும், அதன் மூலம் துறைத் தலைவர்கள் ஆய்வினைக் கண்காணிக்க நடைமுறைப் படுத்த வேண்டுமெனவும் யோசனை கூறினார். இக்கருவிகளைப் பராமரிக்க உள்ளமைப்பு ஒன்றை உடனே நிறுவ வேண்டுமெனவும், இவ்வமைப்புக்குத் தக்க தகுதியுடைய பொறியாளர்களை நியமிக்க வேண்டுமெனவும், அப்போதுதான் காலதாமதமின்றிப் பழுது பார்க்கும் பணிகள் செய்ய இயலும் என்றும் யோசனை வழங்கினார். மைய விஞ்ஞானக்கருவிகள் அமைப்புடன் தொடர்பு கொண்டு, தக்க பயிற்சித் திட்டமொன்று செயல்படுத்தப்பட வேண்டுமென்றும், அவ்வாறு செய்வதால் மருத்துவர்கள் கருவிகளைப் பராமரிப்பதில் ஏற்படும் சிக்கல்களை அறிந்து கொள்ள இயலும் என்றும்யோசனை கூறினார். இக்கருவிகளைமுழுதும் பராமரித்துப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கு, ஒருமுனைப்புத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் ஆலோசகர் விருப்பம்தெரிவித்தார்.

மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருந்துகளை அரசு வாங்குவதில் தரக்கட்டுப்பாட்டின் அவசியத்தை ஆலோசகர் வலியுறுத்தினார். அரசு மருத்துவமனைகள் வாங்கும் மருந்துகளின் மாதிரிகளை எடுத்துப் பரிசோதிக்கும் முறையான திட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமெனவும், இம்முறையைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டுமெனவும் விரும்பினார்.

விலை உயர்ந்த மருந்துகளைக் கணக்கில் வைப்பது, வழங்குவது, உபயோகிப்பது ஆகியவற்றில் தீவிரக் கண்காணிப்பு இருக்க வேண்டியதின் அவசியத்தை ஆலோசகர் வலியுறுத்தினார்.

# நிலம், நீர் நிர்வாகத்துக்கு அதிக முக்கியத்துவம்




பொறியியல் தொழில் கூட்டமைப்பில் தென் மண்டலப் பிரிவு (சி.இ.ஐ.) ஏற்பாடு செய்திருந்த 14-வது ஆண்டுக் கூட்டத்தில் மத்திய திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் ஒய்.கே. அலாக், 'எட்டாவது திட்டக் காலத்தில் பொறியியல் தொழிலின் கொள்கைகள் எப்படி இருக்க வேண்டும்' என்ற தலைப்பில் பேசுகையில் கூறியதாவது:

'நிலம் மற்றும் நீர் நிர்வாகத்திற்கு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீர்ப்பாசனத்துக்காக நாம் அதிக நிதியை செலவிட்ட போதிலும் எல்லா நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை. மாநில அரசுகளின் ஆலோசனையுடன் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

''அந்தந்தப் பகுதியில் உள்ள இயற்கை வளங்களைக் கருத்தில் கொண்டு விவசாயத் திட்டங்களை வகுக்க அரசு விரும்புகிறது. பொறியியல் தொழிலைப் பொருத்தவரை, தொழில்நுட்ப மாற்றம், தொழிலில் போட்டி ஏற்படுத்துதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் கொள்கைகளை வகுக்க வேண்டியது அவசியமாகும்.

விவசாயத் தொழிலை மட்டுமே நம்பியிராமல் தொழிற்சாலைகளில் வேலை வசதி பெறுகிற வாய்ப்பு இந்தியாவில் 5 மாநிலங்களில் மட்டுமே உள்ளது. அனைத்து மாநிலங்களிலும் இதுபோன்ற வாய்ப்பை நாம் ஏற்படுத்தவேண்டும். எனவே தொழில்நுட்ப வளர்ச்சி கிராமப்பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். வரும் ஆண்டுகளில் இத்தகைய சவால்களை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது.''

மத்திய திட்டக்குழுவின் இணைச் செயலாளர் திரு. ஜெய்ராம்ரமேஷ் இக்கூட்டத்தில் பேசுகையில், 'சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளில் தொழில்நுட்ப மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட வேண்டும்'' என்று கூறினார்.

சி.இ.ஐ. தலைவர் திரு சுரேஷ் கிருஷ்ணா பேசுகையில், 'ஒரு சில குறிப்பிட்ட துறைகளை மட்டும் தேர்ந்தெடுத்து, அந்தத் துறைகளில் அதிகக் கவனம் செலுத்தும் வகையில் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கலாம்'' என்று கூறினார்.

சி.இ.ஐ. தென்மண்டலப் பிரிவின் தலைவர் திரு குமார் மகாதேவன் வரவேற்றுப் பேசினார். துணைத் தலைவர் எஸ். திரு ராம் நன்றி கூறினார்.

# ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

கிராமப்புறங்களில் வறுமையை அகற்றவும், புதிய வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கவும் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் சிறப்பிடம் பெறுகிறது.

இத்திட்டம் தமிழகத்தில் 1980ஆம் ஆண்டு முதல் செயலாக்கப்படுகிறது. தனிக் குடும்பமேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டு, தனி மனித, தனிக் குடும்பத்தின் பொருளாதார நிலையை வளப்படுத்தும் இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உழலும் மக்களின் வாழ்வில் ளர்களுக்கு அவர்கள் விரும்பும் தொழில் செய்ய உதவி அளிக்கப்படுகிறது. அதைப்போன்ற போதிய நிதி வசதி இன்மையால் செயலற்று இருக்கும் கைவினைஞர்களுக்கும், சிறு தொழில் புரிவோருக்கும் வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகின்றது. அவர்கள் தங்கள் தொழிலைப் பெருக்கிக் கொள்ளவும் வழி செய்கிறது இத்திட்டம்.

வங்கியிலிருந்து கடனுக்கு வகை செய்வது மட்டுமின்றி மானியமும் அரசால் வழங்கப்படுவது இத்திட்டத்தின் தனிச் சிறப்பாகும். சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியமாகவும் ஏனைய விவசாயத் தொழிலாளர், குறு விவசாயிகள் திராவிடர் மற்றும் பழங்குடியினரும் அடங்குவர். 1987-88ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய சுமார் 2,33,082 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டம் 7.3.88ம்நாளன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அரசின் தலைமைச் செயலர் திரு எம். எம். இராசேந்திரன் இ.ஆ.ப., தலைமை தாங்கினார். ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் மற்றும் செயலர் திருமதி வி. சந்திரலேகா இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி ஆணையாளர் டாக்டர் எஸ். நாராயண் இ.ஆ.ப., மற்றும் இதர சம்பந்தபட்ட துறைத்



வளமையை ஏற்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டது. வறுமையில் வாடும் குடும்பங்களை குறிப்பாக ரூ. 6,400 க்குக் குறைவான ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அக்குடும்பங்களின் நிலைமை, திறமை மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப உதவி செய்கிறது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

சிறு மற்றும் குறு விவசாயிகள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோர் பயன்பெறுகிறார்கள். தெரிந்தெடுக்கப்பட்ட பயனீட்டா மற்றும் கைவினைஞர் ஆயோகிருக்கு 33 1/3 சதவிகிதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிவரை மொத்தம் இத்திட்டத்தினால் தமிழ்நாட்டில் 13,96,016குடும்பங்கள் பயனடைந்துள்ளன. மேலும் இக்குடும்பத்தினர் தமக்கென ஒரு நிரந்தர வருவாய்க்கு வழி செய்து கொள்கின்றனர்.

1986-87ஆம் ஆண்டு 2,58,823 குடும்பங்களுக்கு ரூ. 43322.00 இலட்சம் செலவில் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் 1.19,913 ஆதி தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் செயலாக்கப்பட வேண்டிய பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ரூ. 58.00 இலட்சம் மதிப்புள்ள புதிய திட்டங்களுக்கு மாநில ஒருங்கிணைப்புக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.


**தகவல்**
**ம. கனகசபாபதி, இ.ஆ.ப.,**
**அரசு இணைச் செயலாளர்**
**ஊரக வளர்ச்சித்துறை.**

# மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

மரங்களால் நல்லமழை பெய்வதுடன், மண் அரிப்பு தடுக்கப்படுகிறது. நல்ல சுற்றுப்புறச் சூழ்நிலை உருவாகிறது. அழிந்து வரும் காடுகளைத் தடுப்பதுமட்டுமல்லாமல், புதிய காடுகள் பலவற்றைச் சமூக நலக்காடுகள் திட்டத்தின் மூலம் அரசு உருவாக்கி வருகிறது.

விறகுக்காகவும், கால்நடைத் தீவனங்களுக்காகவும், வீடுகட்டுவதற்காகவும் மரங்கள் வெட்டப்படுவதால்,வனவளம் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே, கிராம மக்களுக்குத் தேவைப்படும் விறகு மற்றும் கால்நடைத் தீவனங்களின் தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே சமூக நலக்காடுகள் திட்டம் அரசால் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசுக்குச் சொநதமான புறம்போக்கு நிலங்களிலும், ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட காலியிடங்களிலும், மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் புறம்போக்கு நிலங்கள், ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட தரிசு நிலங்கள், கண்மாய்கள் மற்றும் சாலை ஓரங்களில் ஊராட்சி ஒன்றியம் மூலம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இவ்வாறு நடப்பட்ட மரக்கன்றுகள் மூன்று ஆண்டுகள் முடிய ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிப்புச் செய்யப்படுகின்றன. அதன்பின்னர் பராமரிப்பிற்காகவும்,பலனை அனுபவித்துக் கொள்வதற்காகவும், ஊராட்சிகளுக்கு அவை ஒப்படைக்கப்படுகின்றன. இதன் மூலம் ஊராட்சிகளின் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் வழி வகுக்கப்படுகிறது.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் 1986-87ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரகநிலமற்றோர் வேலை உறுதித்திட்டம் ஆகியவற்றின் கீழ் 4.40 லட்சம் மரக்கன்றுகள் உற்பத்திசெய்யப்பட்டு,238.00 எக்டேர் நிலத்தில் நடவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 3.520 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இம்மரக்கன்றுகளில் 80 சதவிகிதம் உயிருடன் உள்ளன. திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் தென்கால் கண்மாயில் 152.55 எக்டேரில் 60,000 மரக்கன்றுகள் நடப்பட்டன.

**மதுரை மாவட்டத்தில் டி.சுப்புலாபுரம் கதர் உற்பத்தி மையம்.**

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தைச் சேர்ந்த டி.சுப்புலாபுரம் 5000 மக்கள் தொகை கொண்ட பெரிய கிராமம் ஆகும். இந்தக் கிராமத்தில் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். கைத்தறி நெசவு அக்கிராமத்தில் மிக முக்கிய தொழிலாக உள்ளது. 1981ஆம் ஆண்டு காந்தி கிராமம் கதர் அறக்கட்டளை டி.சுப்புலாபுரத்தில் கதர் உற்பத்தி மையம் ஒன்றைத் துவக்கியது. கையினால் நூற்ற கதர் நூலைக்கொண்டு நெசவு செய்வது என்பது, மில் நூலைப் பயன்படுத்தி நெசவு செய்து பழக்கப்பட்ட நெசவாளிகளுக்கும் புதியதாகவே இருந்தது. ஆனால் தற்பொழுது இரு தரப்பினரும் கைதேர்ந்த கதர் நெசவாளர்களாகி இருப்பது பெருமைப்பட வேண்டியதாக உள்ளது.

தொடக்கத்தில் நெசவில் மொத்தம் 104நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் மூலம் செயல்படும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் (Training for youth Self Employment Programme) ரூபாய்51,108 மானியமாகப் பெறப்பட்டது. தற்பொழுது 42 நபர்கள் கைத்தறியிலும், 48 நபர்கள் நேபாளத்தறியிலும், மற்றவர்கள் பாவு முன் தயாரிப்புப் பணியிலும் நல்ல முறையில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். நேபாளத்தறியில் பெரும் பகுதியினர் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த பெண்கள் நெசவு செய்கிறார்கள். இதுதவிர கதர் நூற்பு மையம் ஒன்றும் இயங்கி வருகிறது. இவற்றில் 30 ஆதிதிராவிட இனப் பெண்கள் வேலை செய்கின்றனர்.



தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக் கழகம் நூற்பு மற்றும் நெசவு அலகுகள் துவங்குவதற்கு உதவி செய்துள்ளது. கட்டடம் மற்றும் தளவாடங்களுக்காகத் தாட்கோ மூலம் ரூ. 6,70,000 மானியம் அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக்காக தாட்கோ மூலம் ரூ. 54,000,இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் மூலம் ரூ. 33,000 மானியமாக சுப்புலாபுரம்-டி கதர் உற்பத்தி மையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் நிர்வாகத்தில் கூலி ஆட்களைப்போல் நடத்தப்படாமல் நிர்வாகத்தினரால் தொழில் பங்குதாரர்கள் போல்



நடத்தப்படுகிறார்கள். நெசவு செய்பவர் நாள் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 12 வரை கூலி தரப்படுகிறது. தொழில் வளர்ச்சி மூலம் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவிய காந்தி கிராம அறக்கட்டளை தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு அமைத்துக் கொடுப்பதற்கும் உதவி செய்துள்ளது. மொத்தம் 55 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 25 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 30 வீடுகள் ஏனைய இனத்தவர்களுக்கும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. இதற்காக, காதி கமிஷன் ரூ. 75,000, கிராமப்புறத் தொழில் நுட்பக் குழு ரூ. 72,000 மானியமாக வழங்கியுள்ளது. இந்தக் கதர் உற்பத்தி மையத்தில் வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ள 199 நபர்களில் 74 நபர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இந்தக் கதர் உற்பத்தி மையம் சிறப்பாகச் செயல்பட்டு உற்பத்தியைப் பெருக்குவதுடன், பல குடும்பங்களின் வருமானத்தை உயர்த்தியுள்ளது.

### அன்னஞ்சி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் பால் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்லாமல், வறுமையில் வாடும் ஏழைக் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்தி அவர்கள் வாழ்வை வளமாக்கி வருகிறது. அன்னஞ்சி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் ஆரம்பத்தில் 50 அங்கத்தினர்களுடனும் ரூ. 500 பங்கு மூலதனத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது 129 அங்கத்தினர்களுடன் இச்சங்கம் செயல்படுகிறது. இதன் பங்கு மூலதனம் ரூ. 1290 ஆக உயர்ந்துள்ளது.

தற்பொழுது நாள்தோறும் 425 லிட்டர் பால் உற்பத்தியாகிறது



இதில்60லிட்டர் உள்ளூர்த்தேவைக்கும், சராசரி 365 லிட்டர் மதுரை மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கும் விற்கப்படுகிறது. தற்பொழுது 65 உறுப்பினர்கள் 75 கறவை இனங்கள் மூலம் சங்கத்திற்குப் பால் கொடுத்து வருகின்றனர்.

உறுப்பினர்கள் மற்றும் பிற மக்களின் கறவை இனங்களுக்குச் சங்கத்தின் மூலம் செயற்கைக் கருவூட்டல் பணி செய்யப்படுகிறது. இச்சங்கத்தின் மூலம் இதுவரையில் 1400 கறவையினங்களுக்குச் செயற்கைக் கருவூட்டல் செய்யப்பட்டு 800 கறவையினங்கள் பயன் தந்துள்ளன. சங்கத்தின் மூலம் உறுப்பினர்களின் மாடுகளுக்கு ஆவின் மாட்டுத்தீவனம் நியாயமான விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. ஆண்டு தோறும் ரூ. 40,000 பெறுமான மாட்டுத்தீவனம் அங்கத்தினர்களுக்குச் சங்கத்தின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. சங்கம் 1979ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து லாபத்தில் செயல்பட்டு வருகிறது.

இச்சங்கத்திற்குப் பாரத ஸ்டேட் வங்கி மூலம் 135 அங்கத்தினர்களுக்கு 265கறவை இனங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மானியத்துடன் ரூ. 4,63,100 மற்றும் மானியமில்லாமல் கடன் விழா மூலம் 31 நபர்களுக்கு ரூ. 77,500 ஆக மொத்தம் 166 நபர்களுக்கு 296 மாடுகள் வாங்க ரூ. 5,40,600 வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 1,26,378 மானியமாகும். பால் உற்பத்தியின் மூலம் ஏழை எளியவர்கள் நல்ல வருமானம் பெற்று வருகிறார்கள்.

**ம. அரிகிருஷ்ணன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**
**மதுரை.**

## குப்பைக் காகிதம் சேகரிக்கும் சிறுவர்க்குக் கூட்டுறவு

தெருக்களில் குப்பை, கூளங்களில் உள்ள காகிதங்களைச் சேகரித்து இடைத் தரகர்கள் மூலமாக பழைய காகித விற்பனையாளர்களுக்குக்கொடுத்து அதற்கு உரிய ஊதியத்தைப் பெறாமல் அவதிப்படுகின்ற ஏழைச் சிறுவர்களின் நலனுக்காக, ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட இருக்கிறது. இந்தச் சங்கத்தின் மூலம், குப்பைக் கூளங்களில் காகிதம் சேகரிக்கும் சிறுவர்கள் அவற்றைப் பழைய பேப்பர் வியாபாரிகளிடம் நேரடியாக விற்று, அதற்கான தொகையைப் பெறுவதற்கு,தேனாம்பேட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளை ஏற்பாடு செய்யும். இந்தத் தகவல்களை அந்த வங்கியின் கிளை மேலாளர் திரு எம். பி. நிர்மல் தெரிவித்தார்.

# சென்னை மேயர் சத்தியமூர்த்தி



தீரர் சத்திய மூர்த்தியின் நினைவு நாளையொட்டி (மார்ச்சு 28) இக்கட்டுரை இடம் பெறுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு வகுப்பினர் மேயராய் ஆள வேண்டுமென்ற சம்பிரதாயமுள்ள சென்னை மாநகராட்சியில் 12 ஆண்டுகள் மாநகராட்சி உறுப்பினராகப் பணி செய்து வந்த சத்தியமூர்த்தி 6.11.1939-ஆம் நாள் சென்னை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாவது உலகப்போர் ஆரம்பித்திருந்த நேரம், காங்கிரஸ் ஆங்கிலேய அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்காமல் போரிட்டுக் கொண்டிருந்த காலம் அது!

ஒரு வருடம் மேயராக இருந்து தன்னால் முடிந்ததைச் சென்னை நகருக்குச் செய்ய வேண்டும் என்று தன்னம்பிக்கையுடன் பணியைத் தொடங்கினார். நகரத்தில் முதல் குடிமகன் என்று இல்லாமல் ''நகரத்தின் முதல் சேவகன்'' என்று தன்னை அழைத்துக்கொண்டார். அழகு நகரம் ( City Beautiful ) என்று சென்னைக்குப் பெயர் கிடைக்க வேண்டுமென்பதையே தனது முதல் லட்சியமாகக் கொண்டிருந்தார். நகரைத் துப்புரவு செய்யும் இயக்கம் ஒன்றைப் பொங்கல் தினத்தன்று ஆரம்பித்து வைத்தார்.

**தோற்றம் : 19-8-1887**

இதற்குப் பெண்களிடமிருந்து நல்ல வரவேற்பு இருந்தது. நகரின் பல பகுதிகளுக்கும் தானே நேரடியாகச் சென்று துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்தார்; குடிசை வாழ் மக்கள் மீனவர் போன்ற பாட்டாளி வர்க்கத்தின் நலனில் மிகவும் அக்கறை செலுத்தினார். அவர்களுக்கெல்லாம் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க ஆவன செய்தார்.

வளரும் சென்னை நகரத்தை அபிவிருத்தி செய்ய நகர அபிவிருத்தி நிறுவனம் ( City Improvement Trust ) ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று அரசை வற்புறுத்தினார். இதன் மூலம் நகரின் பல பகுதிகளையும், கூவம் ஆறு பக்கிங்ஹாம் கேனால், மெரினாக் கடற்கரை ஆகியனவற்றையும் அழகுபடுத்துவதற்கான செயல் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தார். அவரது முயற்சியின் பலன்களை இன்று சென்னை நகர மக்கள் அனுபவிக்கின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது.

சென்னை மக்களுக்குக் குடிநீர் வசதியை அதிகரிக்க, பூண்டி நீர்த்தேக்கத்தை உருவாக்க அரசை இணங்கச் செய்தார். இதற்குத் தேவையான நிதி உதவியை அரசுடன் வாதாடிப் பெற்றுத் தந்தார். அவரது மேயர் பணிக்குச் சிகரம் வைத்தாற்போன்று பூண்டி நீர்த்தேக்கப்பணி 8.8.1940இல் துவக்கப்பட்டது. இப்பணிக்கு நன்றிக் கடனாக, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு, 'சத்தியமூர்த்தி சாகர்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. சென்னை நகர வரலாற்றில் சத்தியமூர்த்தியின் பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

மேயர் பதவியை ஒரு முழுநேரப் பணியாக ஏற்றுக்கொண்டு, இரவு பகல் பாராது உழைத்த இந்த உத்தமர், மேயர் பதவியை விடுக்கும் நாளில் பத்திரிகைகளெல்லாம் தங்களது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்தன. 4.11.1940-இல் இவர் கடைசியாக மேயர் ஆசனத்தில் அமர்ந்து பிரிவு உபச்சாரம் பெறும் வேளையில் ஆங்கிலேய அங்கத்தினர் ஆர்.டபிள்யூ. தியோபால்டு, 'நீங்கள் மேயர் பதவியிலிருந்து விலகுவது கண்டு மிகவும் வருந்துகிறோம். உங்களைப் போன்று அரிய திறமை உள்ளவர்கள் ஒரு வகுப்பில் பிறந்தமையால்,

**மறைவு : 28-3-1943**

சம்பிரதாயத்தின் வலிமையால் மேயர் ஆசனத்தைவிட்டு அகல வேண்டுமென்பது வேதனைக்குரியது என்று கூறியுள்ளதே இவரது மேயர் பணிக்கு என்றும் நற்சான்றாக விளங்கும்.

மேயர் பதவியிலிருந்து விலகும் போது அவர் மக்களுக்கு விடுத்த மூன்று வேண்டுகோள்களாவன: 1) நகரை அழகாக வைத்திருக்க உதவுங்கள். 2) உரிய காலத்தில் உங்களது வரி பாக்கிகளைச் செலுத்துங்கள், 3) உங்கள் பிரதிநிதிகளால் செய்ய இயலாத காரியங்களைச் செய்யும்படி வற்புறுத்தாதீர்கள்

சென்னை நகரின் மீது அவர் கொண்டிருந்த பற்றிற்கு இவையெல்லாம் சான்றாக விளங்குகின்றன.



ஜவஹர்லால் நேருவுடன் சத்தியமூர்த்தி, அவரது மனைவியார், மகள் லட்சுமி

# ஊனமுற்றோர்

# உலகநாள் விழா



ஊனமுற்றோர் உலக நாள் உலகெங்கிலும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இந்தத் தினம் 20.3.1988 அன்று உலகெங்கிலும் அனுசரிக்கப்பட்டது.

ஊனமுற்றோர் உலக நாள் முதன் முதலில் இத்தாலி நாட்டிலுள்ள ஊனமுற்றோருக்கான சர்வ தேச நிறுவனம் ஒன்றால் 28.3.1960 அன்று அனுசரிக்கப்பட்டது. இந்தியாவில் ஊனமுற்றோர் உலக நாள் 1964-இல் முதன் முதலில் அனுசரிக்கப்பட்டது தமிழ்நாட்டில் நாம் 1967 முதல் இந்த தினத்தை அனுசரிக்கின்றோம்.

ஊனமுற்றோர் மீது மக்களின் பார்வையைத் திருப்புவதும், ஊனமுற்றோரிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக் கொணர்வதும், ஊனமுற்றோர் நலனுக்காக அரசு செய்து வரும் பணிகளை மக்களுக்கு ஒருங்கிணைப்பதுமே ஊனமுற்றோர் உலக நாளின் முக்கிய குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில் ஊனமுற்றோர் உலக நாளை ஒட்டி கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அ) ஊனமுற்ற குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டி.

ஆ) ஊனமுற்ற குழந்தைகளின் கலை நிகழ்ச்சி மற்றும் பொதுக்கூட்டம்.

இ) ஊனமுற்றோருக்கான மாநில நிம்கர் விருதுகள் வழங்குதல்;

ஈ) ஊனமுற்றோருக்கான காது கேட்கும் கருவிகள், மூன்று சக்கர நாற்காலிகள் போன்றவைகள் வழங்குதல்;

ஊனமுற்றோருக்கான விளையாட்டுப்போட்டி 19.3.'88 அன்று சென்னை இராசரத்தினம் விளையாட்டு அரங்கில் கொண்டாடப்பட்டது. இந்த விளையாட்டுப் போட்டியினைத் தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு அ.பத்மநாபன் இ.ஆ.ப. துவக்கிவைத்தார்கள். தமிழக அரசு சமூக நலத்துறைச் சிறப்பு ஆணையாளர் - செயலாளர் திரு.சி.தங்கராசு,இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். அன்று மாலை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சென்னை நகர காவல் ஆணையாளர் திரு. டபுள்யூ. ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் முன்னிலையில் நின்ற நிறுவனங்களுக்குச் சுழற் கேடயங்கள் வழங்கினார்.

20.3.1988 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சி மற்றும் பொதுக்கூட்டத்தில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் பங்கு கொண்டு, வேலை வாய்ப்பு அதிக அளவு அளித்த தொண்டு நிறுவனங்களுக்கும், ஊனமுற்றோரில் சிறந்த ஊழியர்களுக்கும், ஊனமுற்றோருக்காகச் சேவை செய்யும் நிறுவனங்களுக்கும் மாநில நிம்கர் விருதுகள், காது கேட்கும் கருவிகள், மூன்று சக்கர வண்டிகள், வங்கிக் கடனுதவி, காலுறைகள் மற்றும் செயற்கை அவயவங்கள், அன்று நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் சிறப்பு இடம் வகித்தவர்களுக்குக் கேடயமும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அன்று நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற சிறந்த கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களுக்கு ரூ.1000 அவருடைய சார்பில் வழங்கினார்கள் என்பதும்இங்குக் குறிப்பிடத்தக்கது.

1974-75-ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 1 இலட்சம், 1977-78-இல் ரூபாய் 26.67 இலட்சங்களாக உயர்த்தப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் ஊனமுற்றோர் நலனுக்காக அரசு ரூபாய் 259.04 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்துள்ளது.

## தமிழ்நாடு வெடிமருந்து நிறுவனத்துக்குத் தேசிய விருது

பொதுத்துறை நிறுவனங்களுள் உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பளிப்பதில் சிறந்த பணிபுரிந்தமைக்காக வேலூரில் உள்ள தமிழ்நாடு வெடிமருந்து நிறுவனத்துக்கு, இந்திய அரசின் தேசிய விருது கிடைத்துள்ளது. இந்த நிறுவனத்தில் பணியாற்றும் மொத்த ஊழியர்களுள் இரண்டு சதவீதத்தினர் உடல் ஊனமுற்றோர்களாவர்.

உடல் ஊனமுற்றோரின் நலவாழ்வுக்காக இந்திய அரசின், நலவாழ்வு அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் தேசிய விருதுகளை வழங்கி வருகிறது. 1988ஆம் ஆண்டுக்கான மேற்கண்ட தேசிய விருதை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ஆர்.வெங்கட்ராமன் அவர்களிடமிருந்து தமிழ்நாடு வெடிமருந்து நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.சி.என்.சந்திரசேகரன் புதுடில்லியில் 20.3.88 அன்று பெற்றுக்கொண்டார்.




# வ.உ.சி. பிறந்தநாள் விழா

கப்பலோட்டிய தமிழர் என்று நாட்டு மக்களால் அன்புடன் அழைக்கப் பெற்ற வீரர் வ. உ. சிதம்பரனார் அவர்களின் 117-வது பிறந்த நாள் விழா தமிழக அரசின் சார்பில் சென்னைத் துறைமுக நிர்வாக அலுவலகக் கருத்தரங்கு மண்டபத்தில் 22-3-1988 அன்று மாலை சிறப்புற நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த பெருமக்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசிய செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதி, இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

'தேசியப்போராட்டத்தில் ஈடுபட்ட மாபெரும் தியாகி வ. உ. சிதம்பரனார். அவரது தியாக வாழ்க்கை தலை சிறந்தது''.

நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற சென்னைத் துறைமுகத் தலைவர் திரு. அ. பால்ராஜ், இ.ஆ.ப., தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்த வ.உ. சிதம்பரனார் தேசியம் வளர்த்த தமிழன், தமிழ் வளர்த்த தேசியன்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும், நற்றவ வானினும் நனி சிறந்தனவே' என்னும் பாரதியின் கவிதைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் வ. உ. சிதம்பரனார்.''

அடுத்து உரையாற்றிய திரு. வ.உ.சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்:

'நாம் எத்தனையோ நாட்களை ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம். வனவிலங்கு நாள் கொண்டாடுகிறோம். குடும்ப நல நாள் கொண்டாடுகிறோம். வ.உ.சி. நினைவு நாளை அரிஜன முன்னேற்ற நாளாகக் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

அடுத்து உரையாற்றிய திரு பி.ஏ. தெய்வசிகாமணி குறிப்பிட்டார்:

''வ.உ.சி. ஏழைகளின் தோழர்; வழக்கறிஞரான தமது தந்தையை எதிர்த்தே நீதிமன்றத்தில் அவர் வாதாடியிருக்கிறார்—ஓர் ஏழைக்காக! நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டும் என்றால் தியாகிகளை மதிக்க வேண்டும்! தியாகத் தலைவர்களின் திருநாமம் எப்போதும் ஜெபிக்கப்பட வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய திருமதி சரோஜினிவரதப்பன் தெரிவித்தார்:

''சுதந்திரம் அடைவதற்கு முன்பு வெள்ளையரை எதிர்த்து, கப்பல் ஓட்டும் துணிவு கொண்ட சிதம்பரனாரின் பிறந்த நாள் விழா, துறைமுக நிர்வாகக் கட்டடத்தில் கொண்டாடப்படுவது பொருத்தமான செயலாகும். பிரிட்டிஷ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து வ.உ.சி. போராடியது தமிழகத்துக்குப் பெருமை தரும் செய்தியாகும். நமக்குத் தேசப் பற்றை வழங்குவதற்கு இதுபோன்ற விழாக்கள் பயன்படும்.''

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள்,



வ.உ. சிதம்பரனாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றியபோது குறிப்பிட்டதாவது:

''இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கப்பல் விட்ட வ.உ.சி., சீனா, மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் கப்பல் விட வேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்.

''தொடக்கத்தில் ஒரு கப்பலைக் குத்தகைக்கு வாங்கி, போக்குவரத்தை நடத்தத் திட்டமிட்டார். குத்தகைக்கு விட நினைத்தவர்கள் பின்னர், வெள்ளையரின் தலையீட்டின் காரணமாக, அஞ்சிவிட்டார்கள். அதன் காரணமாக, சொந்தமாகவே ஒரு கப்பலை வாங்கினார். வீரமும் தியாக உணர்வும் கொண்ட சிதம்பரனாரின் பிறந்த நாளை ஒரு நாள் மட்டுமல்ல, வருடம் 365 நாளும் கொண்டாடலாம்.

'அவருக்கு 2 ஆயுள் தண்டனையை அதாவது 40 ஆண்டுத் தண்டனையை ஆங்கில அரசு விதித்தது. பின்னர் அப்பீலில் 10 ஆண்டு தண்டனை ஆகியது. அது 6 ஆண்டாகக் குறைக்கப்பட்டது.

'சிறையை விட்டு வெளியே வந்த பின்னர் வ.உ.சி., பாண்டிச்சேரிக்குச் சென்று பாரதியாரையும் வ.வே.சு. ஐயரையும் சந்தித்தார்.

'தொல்காப்பியத்தைப் பதித்திருக்கிறார். திருக்குறளுக்கு உரை எழுதியிருக்கிறார்.

''வ.உ.சி. போன்ற தியாகிகள்—இருந்த சுகத்தை இழந்து பாடுபட்டதன் விளைவு, இல்லாத சுகத்தை நாட்டு மக்கள் பெற்றிருக்கிறார்கள்.''

இறுதியில், சென்னைத் துறைமுக நிதி ஆலோசகர் திரு என். சந்திரசேகரன் நன்றி கூறினார்.

— நமது செய்தியாளர்

# சென்னை வானொலியில் புதிய தொடர்கள்

ஏப்ரல் திங்கள் முதல், சென்னை வானொலி அன்றாட வாழ்க்கைக்கு உறுதுணையாகும் சில புதிய தொடர்களை சென்னை-1 அலை வரிசைகளில் அறிமுகப்படுத்துகிறது.

நம்மில் பலர் எப்பொழுதும் விழிப்போடு இருப்பதில்லை. இருக்கவும் முடிவதில்லை. எனவே, நாம் ஏமாறும் நேரம் பார்த்து சிலர் நம்மை இளித்த வாயர்களாக மாற்ற முனைவதுண்டு. இக்கட்டான கட்டங்களில் நம்மை ஏமாளியாக்கிச் செல்வதும் உண்டு. அப்படி நாம் ஏமாறக்கூடிய சில சம்பவங்களைச் சித்தரித்து, நாம் ஏமாறாது விழித்திருக்கும் உணர்வைப் புகட்டும் தொடர் **'என்னதான் செய்வீர்கள்'** என்ற தலைப்பில் ஏப்ரல் 3ந் தேதி முதல் ஞாயிறு தோறும் காலை 8 மணிக்கு (சென்னை-1 அலைவரிசையில்) ஒலிபரப்பாகும்.

சமுதாய நியாயங்களை நகைச்சுவையுடன் 5 நிமிட அளவில் விவரித்து, அறியாமல் தவறு செய்வோரை உணரவைக்கும் தொடராக **'நியாய வித்வான்'** ஞாயிறு தோறும் காலை 7.25க்கு ஒலிபரப்பாகும்.

இல்லாத பொருள் இல்லை வேதத்தில்,' என்று சொல்வர். 'சொல்லாத பொருள் இல்லை, நாட்டுப்பாடலில்,' என்று கூறலாம். தாய்மை, சேய்நலன், ஆகியவை பற்றி அழகான நாட்டுப் பாடல்களைத்தொகுத்து வழங்கி, அத்தோடு தாய்நலன், குழந்தைகளுக்கு ஏற்ற உணவு, குழந்தைகளை வளர்க்கும் முறை, ஆகியவை பற்றி நாட்டுப் பாடல் தொடர் **''நல்லிசையும் நல வாழ்வும்''** என்ற தலைப்பில் 4.4.1988 முதல் திங்கள்தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகும். புதன் தோறும் காலை 8.20க்கு **'ஏன் இந்த வழக்கு'** என்ற தொடரில் வழக்கு மன்றம் வராமலே தீர்க்கக்கூடிய வழக்குகளைப் பற்றி நீதிபதிகள் எடுத்துச்சொல்வர்.

சில பிரச்சினைகளே சீரிய பிரச்சினைகளாய் மாறி, சாதாரண மனிதனைச் செயல்பட வைக்காமல் போவது உண்டு. தாழ்வு மனப்பான்மை, சுயபச்சாதாபம், அக்கறையின்மை ஆகியவை சிந்திக்காத மனிதனைச்செயல் இழக்கச் செய்து விடுபவை. இப்பிரச்சினைகளைத் தீர்க்க வழிகளைக்காண வைப்பதே வெள்ளி தோறும் காலை 8 மணிக்கு ஒலிபரப்பாக இருக்கும் புதிய தொடர்.

இசையோடு பாடல் மறந்தறியேன் என்பது தேவாரம். இசைக்குரிய தேவாரப் பண்களைப்பயிற்றுவிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. தக்க ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு ஏப்ரல் 1ந் தேதி முதல் (வெள்ளி) தொடங்கி இசைக்க இருக்கும் இத்தொடர் வெள்ளிக்கிழமைகளில் இரவு 9.30-க்கு ஒலிபரப்பாகும்.

எளிதில் கிடைக்கக்கூடிய உணவு வகைகளில் கீரை ஒன்று. சென்னையையும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும், 45 வகையான கீரை இனம் காணப்படுகின்றன. நாளொன்றுக்கு ஒரு கீரையை நாம் உண்டு வந்தாலே நம் உடல் வளமுறும் என்ற கருத்தில் ஏப்ரல் 1 முதல் நாள்தோறும் காலை7.25க்கு ஒரு கீரையைப் பற்றி 5 நிமிட அளவில் தகவல்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மக்கள் நலம் பேணும் மத்திய நிதிநிலை அறிக்கை

நிலமற்றோருக்கு 100 நாள் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்திற்காக 730 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலமற்ற கிராமத்தொழிலாளிகளைப் பொறுத்தவரையில், குடும்பத்துக்கு குறைந்தபட்சம் ஒருவருக்கேனும் ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வாய்ப்புக்கு இத்திட்டம் உத்தரவாதம் வழங்குகிறது. இத்திட்டத்திற்கான முழுச் செலவைமத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. 1988-89-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினால் 37 கோடி மனித நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு 529.43 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் வேலையின்மையால் அல்லது போதிய வேலையில்லாமல் இருப்போருக்கு உருப்படியான வேலைவாய்ப்பை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம்.

1988-89இல்4.25 கோடி மனிதவேலை நாட்களை உருவாக்க வேண்டும் என்பது குறியளவு. நிதி வசதியில் 10 சதவிகிதம், ஷெட்யூல் வகுப்பினர், பழங்குடியினரின் நேரடி நலனுக்கான வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## ஷெட்யூல் வகுப்பினர், பழங்குடியினர் நலன்களை மேம்படுத்த..

ஷெட்யூல் வகுப்பினர், பழங்குடியினருக்கான நிதி மேம்பாட்டுத் தேசிய கார்ப்பொரேஷன் ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. மாநில அளவில் செயல்படும் கார்ப்பொரேஷன்களும், மற்ற நிறுவனங்களும் செயல்படுத்துவதற்கான வேலைவாய்ப்பு மற்றும் முன்னோடித் திட்டங்களை இந்தக் கார்ப்பொரேஷன் ஊக்குவிக்கும்.

மாநில அளவில், பழங்குடியினர் ஷெட்யூல் வகுப்பினருக்கான பல கார்ப்பொரேஷன்கள் இந்த வகுப்பினரின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இயங்கி வருகின்றன. இவர்களுக்குத் தங்கு தடையின்றி நிதிவசதி கிடைக்கச் செய்யும் பொருட்டு இந்தப் புதிய கார்ப்பொரேஷன் அரசுடைமை வங்கிகள், மற்றும் தேசிய விவசாய, கிராமப்புற மேம்பாட்டு வங்கிகள் இணைந்து செயல்படும்.

ஏற்கெனவே பல நிறுவனங்கள் செய்துவரும் வேலைகளை மறுபடியும் செய்வதற்குப் பதிலாக, புதுப் புது உத்திகளை உருவாக்கி, புதுப் புது திட்டங்களில் சோதனைசெய்து பார்த்து, ஷெட்யூல் வகுப்பினர், பழங்குடியினரின் நலன்களை மேம்படுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கம். இந்தப் புதிய கார்ப்பொரேஷனுக்காக நிதிநிலை அறிக்கையில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

# மனங்கவர் மண்பொம்மைக் கண்காட்சி



சுடுமண் பொம்மைகள் பற்றிய பயிற்சி முகாம் 1988 மார்ச் திங்கள் 13 முதல் 25 முடிய, சென்னை லலித கலா அகாடமியில் நடந்தது.

தெற்கு ஆசிய நாடுகளில் பழக்க வழக்கங்களில் உள்ள இந்தச் சுடுமண் பொம்மைகள் (Terracotta) பற்றியும், அவற்றை உருவாக்குவது பற்றியும் பயிற்சி முகாம் ஒன்று சென்னையில் நடந்தது. இம்முகாமில், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், வங்காள தேசம், மாலத்தீவு ஆகிய தெற்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த 30 கைவினைஞர்கள் கலந்து கொண்டார்கள்.

பயிற்சி முகாமையொட்டிய கண்காட்சியில், கண்ணைக் கவரும் அழகிய சுடுமண் பொம்மைகள் இடம் பெற்றிருந்தன. கலை நுணுக்கம் வாய்ந்த இந்தக் கலைப்பொருள்கள் அனைவரையும் கவர்ந்தன.

சுடுமண் பொம்மைகள் தயாரிப்புப் பயிற்சி முகாமின் தொடக்க விழா 12.3.'88 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடந்தது. இந்திய மனித வள மேம்பாட்டுத் துறைச் செயலாளர் திரு.ஜே.வீரராகவன் தலைமை தாங்கினார். மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் முகாமைத் தொடங்கி வைத்தார். முகாமில் கலந்து கொண்ட 30 கலைஞர்களுக்கு விருதுகளையும் அவர் வழங்கினார்.

இந்தியக் கலாச்சாரத்துறை இயக்குநர் திரு கே.பி. லட்சுமணராவ், தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை கூடுதல் செயலர் மற்றும் செயலர் (பொறுப்பு) திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப., லலித் கலா அகாடமி செயலாளர் திரு எம். ராஜாராம் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு பேசினர்.







# எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் சாதனை

**1988**ஆம் ஆண்டிற்கான புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசாக, தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம்(டான்காப்),1986-87ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித் திறன் விருதினைப் பெற்றுள்ளது.

தேசிய அளவில், மாநிலக் கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையங்களில் சிறந்த உற்பத்தித் திறன் சாதனைக்காக இந்த விருதை டான்காப் பெற்றது. எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியில் விவசாயிகளுக்கு உற்றதொரு தோழனாக, உறுதுணையாக நின்று, உற்பத்தித் திறன் அளவை அதிகப்படுத்தும் பணியில் அர்ப்பணித்துக் கொண்டுள்ள டான்காப்பிற்குக் கிடைத்துள்ள இந்த விருது பெருமைக்குரியது. டான்காப்பின் 'ஆலைகளில் தாவர எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இந்தியப் பிரதமரின் 'தாவர எண்ணெய் வித்துக்கள் தொழில்நுட்பத் தூதுக்குழுவின் நோக்கப்படி, தாவர எண்ணெய் வித்துக்கள் துறையில் 1990ஆம் ஆண்டிற்குள் நமது நாடு தன்னிறைவு அடைவதற்கு 'டான்காப்' அதன் பங்கைச் செவ்வனே ஆற்றி வருகிறது.

**பெருமைமிகு விருது**

தேசிய உற்பத்தித் திறன் குழு என்பது, தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவை தத்தம் துறைகளில் ஏற்படுத்தும் உற்பத்தித் திறன் சாதனைகளுக்கு விருது வழங்கும் ஒரு தேசிய அமைப்பாகும். இந்தியப் பொருளாதாரத்தில் விவசாயத்திற்குள்ள மிகப்பெரிய பங்கைக் கருத்திற் கொண்டு, நமது இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களின் அறிவுரையின்படி, 1984-85ஆம் ஆண்டு முதல் விவசாய உற்பத்திக்கான உற்பத்தித் திறன் விருது வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் இந்த விருதுக்கு ஏற்பாடு செய்கிறது. வேளாண்மைத் தொழில்கள், தாவர உரத் தயாரிப்பு, பால் உற்பத்தி, தோட்டக்கலை வளர்ச்சி, வறட்சி நில விவசாயம், எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்ற 11 வகை விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு இந்த விருதானது வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தாவர எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் உற்பத்தியை மாற்றி வடிவமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த, குஜராத் மாநிலம் ஆனந்த் என்னுமிடத்திலுள்ள தேசிய பால்வள வாரியத்தின் பூரண நிதி உதவியுடன், டான்காப் ஒரு மாநில மட்டத்தில் இணையமாக 1.1.1981இல் பதிவு செய்யப்பட்டது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்வதும், உற்பத்தி, கொள்முதல், எண்ணெய் பிழிதல் மற்றும் சுத்திகரிப்பு, விற்பனை ஆகிய பணிகளில் எண்ணெய் வித்து பயிரிடும் விவசாயிகளுக்கு உதவியளிப்பதும், அவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதும் டான்காப்பின் பிரதான நோக்கங்களாகும்.

**உற்பத்தியில் சாதனை**

கூட்டுறவுச் சங்க அளவில் சராசரி எண்ணெய்வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு 218 எக்டேர்களிலிருந்து 256 எக்டேராக உயர்ந்துள்ளது. சங்க அளவில் உறுப்பினர்களின் சராசரி எண்ணிக்கை 1985-86ஆம் ஆண்டில் 112 ஆக இருந்தது, 1986-87ஆம் ஆண்டில் 140 ஆக உயர்ந்ததே இதற்குக் காரணம் ஆகும். கடுமையான வறட்சி நிலவிய போதிலும், எக்டேர் ஒன்றுக்கு 1985-86இல் 1185 கிலோ கிராமாக இருந்த உற்பத்தியானது, 1986-87-இல் 1190 கிலோ கிராமாக உயர்ந்துள்ளது. நவீன முறை விவ

**பி. சந்திரசேகரன்**
திட்ட அலுவலர்,
தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் இணையம்,
சென்னை.

சாய உத்திகளை மேற்கொண்டதாலும், பலவகை பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாலுமே உற்பத்தியில் சாதனை அடையப்பட்டது.

தேர்ந்தெடுத்த சிறப்பான விதைகளின் விநியோகமும் 1985-86இல் 372 மெட்ரிக் டன்னாக இருந்தது, 1986-87இல் 401 மெட்ரிக் டன்னாக் உயர்ந்துள்ளது.

### பயிற்சி

உற்பத்திப் பெருக்கத்திற்கு உறுதுணையாக அமைய, தகுந்த பயிற்சியளிப்பது அவசியமென்பதால், 1986-87ஆம் ஆண்டில் 3904 விவசாய உறுப்பினர்கள் மற்றும் சங்கப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கு முற்பட்ட ஆண்டான 1985-86இல் 2296 பேர்களுக்கு மட்டுமே பயிற்சியளிக்கப்பட்டிருந்தது. தரமான விதை உற்பத்திக்காக, நெய்வேலியில் ஒரு வட்டார உழவு மையம் டான்காப்பால் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது இதனை ஒரு தேசிய அளவு வசதியாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் அங்கீகரித்துள்ளது. இந்த மையத்தில் ஐகிரிசாட் (ICrisat) என்னும் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட உயர்மட்டத் தொழில் நுட்பப் பரிசோதனைகளில், நிலக்கடலையின் உற்பத்தித் திறனை எக்டேருக்கு 5லிருந்து 6 டன்கள் வரை உயர்த்தலாம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள் வசதிகளையும் டான்காப் செய்து தருகிறது.

### கொள்முதல்

1985-86ஆம் ஆண்டில் 16,427 மெட்ரிக் டன் அளவுக்கு இருந்த நிலக்கடலைக் கொள்முதல், 1986-87ஆம் ஆண்டில் 20,649 மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்தது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் எண்ணெய்வித்துக்கள் முழுவதையும் டான்காப்பிடம் விற்பனை செய்வதை ஊக்கப்படுத்துவதற்காக, நிலக்கடலை டன் ஒன்றுக்கு, ரூ. 150- கொள்முதல் ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நிலக்கடலைக்குச் சந்தை விலை அளிக்கப்படுவதோடு, இந்தக் கொள்முதல் ஊக்கத் தொகையானது கூடுதலாக அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நுகர்வோர்களிடமிருந்து பெறப்படும் ஒரு ரூபாயில் 84 காசை டான்காப் விவசாய உறுப்பினர்களுக்குப் போய்ச் சேரும்படி செய்கிறது என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த வகையில் பார்த்தால் பால் உற்பத்தியாளர்களுக்குக் கூட ஒரு ரூபாய் வருமானத்தில் 70 காசு அளவுக்கே போய்ச் சேர்கிறது. ஆனால் எண்ணெய்வித்து பயிரிடுவோருக்கு இதைவிடக் கூடுதலாக 84 காசு டான்காப்பால் வழங்கப்படுகிறது. இடைத்தரகர்களை அறவே ஒதுக்கியதன் விளைவாக டான்காப்பால் இந்தச் சாதனையைச்செய்ய முடிந்திருக்கிறது.

**மக்கள் நலம் பேணும் மத்திய நிதிநிலை அறிக்கை**

## 'குடிர்ஜோதி'



'குடிர்ஜோதி' எனும் புதிய திட்டத்தின்கீழ், கிராம வீடுகளுக்கு ஒரு விளக்கு எரிவதற்காக மின் இணைப்பு வழங்கப்படும். முதல் தடவை, இதற்காகும் செலவை இத்திட்டம் மேற்கொள்ளும். 1988-89இல் இதனால் 5 லட்சம் வீடுகள் பயனடையும்.

### எண்ணெய் பிழிந்து சுத்திகரித்தல்

திருவண்ணாமலையிலும், விருத்தாச்சலத்திலும் உள்ள பதனிடும் ஆலைகளில் 1986-87ஆம் ஆண்டில் உயர் அளவு கொள்திறன் பயன்பாட்டுச் சாதனையை டான்காப் நிகழ்த்தியுள்ளது. புதிய உத்திகளைக் கையாண்டு இயந்திரங்களில் பழுது ஏற்படுவதைக் குறைத்ததால்தான் இந்தச் சாதனையை அடைய முடிந்தது. எண்ணெய் பிழியும் பிரிவில் முந்தைய ஆண்டு கொள்திறன் பயன்பாடான 42.9 சதவிகிதத்திலிருந்து 55 சதவிகிதத்திற்கும், எண்ணெய் சுத்திகரிப்புப் பிரிவில் 64.5 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகிதத்திற்கும் கொள்திறன் பயன்பாடு, 1986-87ஆம் ஆண்டில் உயர்ந்திருக்கிறது. டான்காப்பின் ஆலைகளில் தடுப்புப் பாதுகாப்புப் பராமரிப்புத் திட்டங்களைப் புகுத்தியதன் மூலம், இயந்திரப் பழுதைப் பெருமளவுக்குக் குறைத்ததுடன், இயந்திரங்களின் முழுப்பயன் அளவுக்கும் சாதனையையும் ஏற்படுத்த டான்காப்பால் முடிந்திருக்கிறது. டான்காப்பின் ஆலைகளில் உற்பத்தியை மேலும் அதிகப்படுத்தும் நோக்கத்துடன் தொழிலாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து டான்காப் பரிசீலித்து வருகிறது. இதன் மூலம் ஒவ்வொரு தொழிலாளியும் முனைந்து செயல்பட்டு, இயந்திரங்களை அவற்றின் முழு கொள்திறன் அளவுக்குப் பயன்படச் செய்வதோடு, நேரம் வீணாவதையும் தவிர்க்க முடியும்.

டான்காப்பின் ஆலைகளில் கடலைத் தோலைக் கொதிகலன்களுக்கான எரிபொருளாகப் பயன்படுத்தி வெற்றி கண்டிருப்பதன் மூலம், எரிசக்தி பெருமளவுக்கு மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது.

### நிதி நிர்வாகம்

டான் காப் தனது நிதியை முடக்கி வைப்பதில்லை. அதனை வங்கிகளில் கேட்பு வைப்புகளாக முதலீடு செய்து கணிசமான அளவுக்கு வட்டித் தொகை பெறப்படுகிறது. வங்கி உத்தரவாதம், கேட்பு வரைவுகள் பெறுவது போன்ற வசதிகளையும் வணிக வங்கிகளிடமிருந்து அதற்குரிய தரகுச் செலவினங்கள் மற்றும் குறியீட்டு வைப்புத்தொகை ஏதுமில்லாமலும், டான்காப் பெற்று வருகிறது.

இவ்வாறாக அனைத்துப் பிரிவுகளிலும் டான்காப் தனது ஒட்டு மொத்த உற்பத்தித்திறன் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.



## இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் மறைவு

இனிய தமிழில் இசை பாடி, இலட்சோப லட்சம் உள்ளங்களைத் தன்வயப்படுத்திய இசைமணி, கலைமாமணி, டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் தமது 55 வது வயதில் 23.3.88 அன்று சென்னையில் மறைவெய்தினார்.

செய்தியைக் கேள்விப்பட்டவுடன், இசைவாணர்கள், திரையுலகப் பெருமக்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் கோவிந்தராஜன் அவர்களின் இல்லத்துக்குச் சென்று அன்னாரின் உடலில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தமிழக அரசின் சார்பில் ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செய்தார்.

சின்ன வயதிலிருந்தே இசை ஆர்வம் கொண்டிருந்த திரு கோவிந்தராஜன் அவர்கள், கர்நாடக இசையை முறையாகக் கற்றார். திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை அவர்களிடம் சிறிதுகாலம் குருகுலவாசம் செய்து தேர்ச்சி பெற்று, கச்சேரிகளில் தமிழ் முழக்கமிட்டார். கடந்த 34 ஆண்டுகளாகத் தமிழ்த் திரைப்படப் பின்னணிப் பாடகராக ஒளி வீசித் திகழ்ந்தார்.

பல்வேறு விருதுகள் பெற்ற இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டத்தை 1983ல் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு வெளி நாடுகளுக்கும் சென்று தமிழிசையைப் பரப்பி வந்த நல்லெண்ணத் தூதுவராக இவர் திகழ்ந்தார்.

மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களும், மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களும் இசைமேதையின் மறைவுக்கு இரங்கற் செய்தி அனுப்பியுள்ளனர்.

---

# பார்த்தோம் - படித்தோம்

மூதறிஞர் இராஜாஜி, மகாகவி பாரதியார் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு இரத்தினச் சுருக்கமாக (1-12-87) இதழில் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், எட்டயபுரத்தில் பாரதியாரின் மணிமண்டபம் 13-8-1947-இல் இராஜாஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட செய்தியை நினைவுகூர்ந்திருப்பது பாராட்டுக்குரியது.

—ப.அ. சண்முகம்
களம்பூர் (வ.ஆ.)

கிராமப்புறங்களில் கிடைக்கும் பச்சை இலைகள் முக்கியமாக கீரைகள் பற்றிய – 'பிணிதீர்க்கும் மருந்துகள்' பற்றிய கட்டுரை மிக அருமை. இவ்விதழில் (1-3-88) மணக்கும் மணத்தக்காளி'யின் மகத்தான மருத்துவக் கட்டுரை மிக அருமை.

ஆடல்வல்லானின் அருங்குணங்கள் பற்றி அழகிய படத்தோடு விளக்கியிருப்பது பாராட்டத்தக்கது.

—எஸ். நாகராசன்
நிலையூர் அறந்தாங்கி
புதுக்கோட்டை.

'பிணி தீர்க்கும் மணத்தக்காளி' கட்டுரை பயனுள்ள வகையில் அமைந்துள்ளது.

—ப. ஷேக் அலாவூதீன்
திருநெல்லிக்காவல்.

மாணவர் பக்கத்தில் வெளியான 'தயிரோ தயிர்' கட்டுரையும், 'அறிவுச் சுடர்' பகுதியும் மிகவும் பயனுள்ளதாக இருந்தன.

—எஸ். பரணீதரன்
ஆனைக்குளம்
நெல்லை கட்டபொம்மன்
மாவட்டம்.

தமிழரசை தொடர்ந்து படித்து வருகிறேன். அதில் வரும் நல்ல கருத்துக்கள் - செய்திகள் போற்றத் தக்கவை.

—எம். நாகராசன்
ஆலத்தூர்.

---

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



